Vol.1, Issue 7 | Annual Subscription ₹ 420

@NewsRotary /RotaryNewsIndia

# ரோட்டரி நியூஸ்

டிசம்பர் 2018

Rotary




15th JJS
JAIPUR JEWELLERY SHOW
Reflection of royalty & creativity...
the
December
show
JECC, JAIPUR
21-24 DECEMBER 2018
JAIPUR JEWELLERY SHOW
Gold Souk, TF-01, Third Floor, Adjoining Hotel Lalit, Jawahar Circle, Jaipur – 302017, Tel.: +91 141 2725647 / 2725648
E-info@jaipurjewelleryshow.org, W-www.jaipurjewelleryshow.org
facebook.com/thedecembershow
@JJSjaipur
jaipurjewelleryshow

# உள்ளே


**12** **ரஸ்ஸின் ரசிக்கும் சண்டிகர்**
RI தலைவர் பாரி ரஸ்ஸின், அவரது மனைவி எஸ்தர் ஆகியோர் சண்டீகரில் மேற்கொள்ளப்படும் பல்வேறு பணிகளைப் பார்வையிடுகிறார்கள்.

**20** **மன அழுத்தத்தைத் தீர்ப்பது ரோட்டரி:**
RI தலைவராக நியமனம் பெற்ற சுஷில் குப்தாவுக்கு ஐந்து ரோட்டரி மாவட்டங்கள் கோல்கத்தாவில் நடத்திய பாராட்டு நிகழ்ச்சி.

**26** **சுஷில் குப்தாவுடன் தேநீர் சந்திப்பு**
RIPN சுஷில் குப்தா, PRIP கல்யாண் பானர்ஜி, RIDEs பரத் பாண்டியா, கமல் சங்வி ஆகியோரை நோக்கி PRID சேகர் மேத்தா வினா தொடுக்கிறார்.

**34** **பெரிதாக நான் எதையும் செய்து விடவில்லை**
ரூ.100 கொடையளித்த ரவிசங்கர் அவரது மனைவி பவோலாவுடன் சென்னை இன்ஸ்டிட்யூட்டில் நடைபெற்ற D 3190வது ஆளுநர் சுரேஷ் ஹரியும் அனிதாவும் உரையாடுகின்றனர்.

**56** **சென்னை இன்ஸ்டிட்யூட்டில் மனைவியரின் சக்தி**
சென்னை ரோட்டரி மண்டல இன்ஸ்டிட்யூட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் புதிய ஆளுநர்களின் வாழ்க்கைத் துணைவர்களுக்குச் சிறப்புப் பயிற்சித் திட்டம் நடைபெற்றது.

**60** **போலியோ இல்லாத உலகத்திற்கான விழிப்புணர்வு பேரணிகள்**
நாடு முழுவதும் உள்ள மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் உலக போலியோ ஒழிப்பு தினத்தைக் கொண்டாடுகிறார்கள்.

**62** **லேவில் நரோபா திருவிழா**
இமயமலை, லே பகுதியில் ஐந்து நாட்கள் நடைபெற்ற கோலாகலமான திருவிழா.

**70** **இடுக்கண் வருங்கால் நகுக...**
பத்திரிகையாளர் சந்தியா ராவ் பாகிஸ்தான் எழுத்தாளர் மோனி மோஷின் நூல் குறித்த கூட்டத்தில் அந்நாட்டு நகர்ப்புற வாழ்க்கையையும், நூலையும் விவரிக்கிறார்.




















**அட்டை:** பாரி ரஸ்ஸினும் எஸ்தரும் புலம் பெயர்ந்த தொழிலாளர்களின் குழந்தைகளுடன் உரையாடுகின்றனர். உடன் 3080வது மாவட்ட ஆளுநர் பிரவீண் கோயல், பாசு.
**படம்:** ரஷிதா பகத்.

# மடல்கள்

## கேரளாவிற்கு ரோட்டரி உதவுவதைப் பார்க்க பெருமையாக இருக்கிறது

*அக்டோபர் இதழில் ஜெயஸ்ரீயின் கேரளாவிற்கு உதவ ரோட்டரி செயலில் இறங்கியது என்ற கட்டுரை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கேரளாவைப் பற்றிய முழு விவரங்களையும் புகைப்படங்களோடு விளக்கியது. கேரளாவில் முன்னின்ற ரோட்டரியின் மனிதாபிமான உணர்வு என்ற ஆசிரியரின் குறிப்பு சிறப்பாக இருந்தது. ரோட்டரி செய்திக்குழுவிற்கு வாழ்த்துக்கள்.*

*டேனியல் சித்திலப்பள்ளி*, RC *கலூர்* — D 3201

*தலையங்கம் மற்றும் அது சம்மந்தப்பட்ட கேரளாவிற்கு உதவ ரோட்டரி செயலில் இறங்கியது என்ற கட்டுரை, கேரளா எதிர்கொண்ட துயரம் மற்றும் அவர்களுக்கு ரோட்டரியன்கள் காட்டிய பச்சாதாபத்தை வெளிச்சமிட்டுக் காட்டியது. எப்போதெல்லாம் இயற்கைப் பேரிடர், உயிர் மற்றும் உடைமைகளுக்கு பேரழிவு ஏற்படுத்துகிறதோ, அப்போதெல் லாம் நிவாரண முயற்சிகளில் ஈடுபடுவது ரோட்டரிக்கு வழக்கமாக உள்ளது.*

*துயர சம்பவங்கள் ஏற்படுவதற்கு முன்னால் நாம் ஏன் உலகளாவிய அளவிலான நிதிகளை திரட்டக்கூடாது? அதனால் விரைவான நடவடிக்கையுடன் எந்த சூழலையும் நம்மால் சந்திக்க முடியும். இது சர்வதேச அளவில் ஒரு அறக்கட்டளை அமைப்பதன் மூலமாகவும், பேரிடர்களின் சவால்களை எதிர்கொள்ள உலகெங்கிலும் உள்ள 1.2 மில்லியன் ரொட்டேரியன்களும் ஆண்டுதோறும் பங்களிப்பு செய்வதன் மூலமாகவும் முடியும்.* TRF *போல, இயற்கைப் பேரிடர்களை எதிர்கொள்வதற்கு நிதி திரட்டும் மற்றொரு முயற்சியை நாம் மேற்கொள்ளலாம். இந்த ஆலோசனையைப் பரிசீலிக்க நான்* RI*ஐ வலியுறுத்துகிறேன்.*

*அருண் குமார் டாஷ்*, RC *பாரிபாடா* — D 3262



*கேரளாவைப் பற்றிய கட்டுரையைப் படித்தது, நான் ரொட்டேரியனாக இருப்பதன் பெருமையை அதிகமாக்கியது. கேரளாவில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்குகளுக்குப் பிறகு, தேவையுள்ள மற்றும் துன்பப்படுகிறவர்களுக்கு உரிய நேரத்தில் செய்த சேவைகள் குறிப்பிடத்தக்கவை.* DG E K *லூக், ரொட்டேரியன்கள் டினா ஆண்டனி, விஜயலட்சுமி நாயர் மற்றும் பிற* PDG*கள் மீட்பு பணியில் முன்னணியில் இருந்து நடத் தினர். அவர்கள் சேவை தனக்கு மேலானது என்ற* RI *குறிக்கோளை முன்னிலைப்படுத்தியது மட்டுமல்லாமல், தேவைப்படும் நேரங்களில் ரோட்டரியின் பங்கினை வலுப்படுத்தவும் செய்தார்கள். அவர்களின் தன்னலமற்ற செயல், ரோட்டரிக்கு அதிக சேவை செய்யும் மனமுடைய மக்களை கொண்டு வரும்.*

Dr NRUK *கர்தா*, RC *திருவனந்தபுரம் சபர்பன்* — D 3211

## ரோட்டரியின் நன்மை, தீமை மற்றும் அழகற்ற தன்மை

சென்னை இன்ஸ்டிட்யூடின் கருப்பொருளான, சேவைக்கான பேரார்வம், பொருத்த மானது. ஏனெனில் இந்தியாவின் D ரவிசங்கர் மற்றும் அவரது மனைவி பவோலாவிடமிருந்து வரப் பெற்ற இந்தியாவின் மிகப்பெரிய TRF நன்கொடையுடன் இது ஒத்துப் போனது. கேரளவைத் திருப்பிக் கட்டல் என்ற கட்டுரை சுவாரசியமாக இருந்தது. கேரளாவில் சமீபத்தில் ஏற்பட்ட வெள்ள அபாயத்திலிருந்து ரோட்டரி நெல் திட்டம் தப்பியது என்பதைக் கண்டு நான் நிம்மதி யடைந்தேன். டாஸ்லிங் சென்னை நைட்டின் படங்கள் அற்புதம். RIPN சுஷில் குப்தாவின் புதிய நிய மனத்திற்கு வாழ்த்துக்கள். கிரண் ஜெஹ்ராவின் ஆர்ட் ஆஃப் நியூ ஏஜ் பேரன்டிங், பெற்றொர்களுக்கு ஒரு விழிப்புணர்வு ஏற்படுத்தும் கட்டுரையாகும்.

RI தலைவர் பாரி ரஸ்ஸினின் பேச்சு (மாற்றத்தின் பிளேமிங் கோக்களாக இருங்கள்: பாரி ரஸ்ஸின்) மற்றும் ரோட்டரியின் பெஸ்ட் மற்றும் ஒர்ஸ்ட் என்ற தலைப்பின் கீழ் கொடுக்கப்பட்ட செய்திக்கூறுகளும் உண்மையில் குறிப்பிடத்தக்கவை. ரோட்டரியின் எதிர்காலத்திற்கான திருத்தங்கள் மேற் கொள்ளப்படும் என்று நம்புகிறேன்.

M T ஃபிலிப், RC திருவனந்தபுரம் சபர்பன் — D 3211

நான் கடந்த 15 ஆண்டுகளாக ரோட்டரி நியூஸ் படித்து வருகிறேன், அதன் கட்டுரைகள் மற்றும் கதைகள் ஆகியவற்றால் ஊக்கமடைந்துள்ளேன். சிறந்த, மோசமான மற்றும் அழகற்ற ரோட்டரி - RI தலைவர் பாரி ரஸ்ஸின் மூன்று பகுதிகளாக தனது ரோட்டரி அனுபவத்தை வகைப்படுத்தியுள்ள ரோட்டரி (நவம்பர் பதிப்பில்) கட்டுரை அருமை.

“ரோட்டராக்டர்கள் அவர்களை இணைக்க எந்த ரோட்டரி கிளப்பும் விரும்பவில்லை என்று கூறுகிறார்கள். நாம் செயல்படுத்தும் ஒவ்வொரு திட்டப்பணியிலும் அவர்களை ஈடுபடுத்துவதன் மூலம்,

# மடல்கள்

நாம் எதிர்கால அர்ப்பணிப்பு மிகுந்த ரொட்டேரியன்களை மட்டும் உருவாக்கவில்லை, அவர்களின் சக்தியை சமுதாய காரணிகளில் ஒருமுகப்படுத்துவதன் மூலம் அவர்கள் வாழ்வை வடிவமைக்கிறோம்.

எங்கள் விங்கில் உள்ள ஐந்து ரோட்டராக்ட் சங்கங்கள் மூலம், பல ரோட்டராக்டர்கள் எங்கள் சங்க நடவடிக்கைகளில் பங்கேற்கிறார்கள். அவர்கள் எங்கள் கூட்டங்களில் கலந்துகொண்டு சிறந்த கருத்துக்களை முன் வைக்கிறார்கள். இந்த இளைஞர்கள், கனவு காண்பவர்கள் மற்றும் செயல்படுத்துபவர்களால இருக்கிறார்கள்.

நான் ஒவ்வொரு ரொட்டேரியனையும் தங்கள் கிளப்பின் நடவடிக்கைகளில் ரோட்டராக்டர்களை ஈடுபடத்த வேண்டுமென தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். இது ஒரு செழிப்பான, பரஸ்பர நன்மை தரும்.

C சுரேந்திரன்,
RC மதுரை வடக்கு — D 3000

கடந்த இரண்டு ஆண்டுகளில் சுமார் 3,00,000 உறுப்பினர்கள் ரோட்டரியில் இருந்து விலகியதை நான் வருத்தத்துடன் குறிப்பிடுகிறேன். ரோட்டரியன்கள், ஏற்கனவே இருக்கும் உறுப்பினர்களைத் தக்கவைத்துக் கொள்ளவும் மற்றும் அமைப்பின் நலனுக்காக உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் வலுவான கருத்துருக்கள் மற்றும் முயற்சிகளைக் கண்டெடுக்க வேண்டும்.

Dr. D H ராமா
RC அனந்தபூர் மெயின் — D 3160

## RIDயின் எழுச்சியூட்டும் பேச்சு

என் மனதை மிகவும் தொட்டது RI டைரக்டர் C பாஸ்கரின் சமுதாயத்தை வலுப்படுத்துதல் என்ற தகவல். இந்தியாவில் உள்ள மிகப்பெரிய மைக்ரோ கிரெடிட் வங்கிகளில் ஒன்றான, தி மன் தேஷி மஹிலா சகாக்கரி வங்கி அமைப்பதில், சேத்னா எதிர்கொண்ட சவால்களையும், அவரது வீடியோ கதையையும் நான் பார்த்தேன். ஒரு திட்டவட்டமான பெண்ணால் என்ன செய்ய முடியும் என்று தெரிந்து கொள்ள எல்லா ரொட்டேரியன்களும், இந்த எட்டு நிமிட வீடியோவை பார்க்க வேண்டும். சேத்தனா காலா சின்ஹாவின் வலிமையான கதையை எழுதிய RID பாஸ்கருக்கு நன்றி.

ராபர்ட் பிராங்க்ளின் ரீகோ
RC பாஜ்பே — D3181

RC மெட்ராஸ் ஈஸ்ட் எட்டு இளம் விஞ்ஞானிகள்-மாணவர்கள் NASAக்கு அனுப்பும் ஒரு அற்புதமான வேலையை செய்துள்ளது. இந்த இளைஞர்கள் எதிர்காலத்தில் பெரும் விண்வெளி வீரர்களாகவும் அறிவியலாளர்களாகவும் இருப்பார்கள் என்று நம்புகிறேன்.

S. மோகன்
RC மதுரை வெஸ்ட் — D 3000

## இந்திய-பாகிஸ்தான் உறவை ரோட்டரி உருவாக்க முடியும்

நமது சமாதான திட்டங்களுக்கு ஆதரவு கொடுங்கள் என்ற அறக்கட்டளை ட்ரஸ்டி தலைவர் ரான்பர்ட்டனின் செய்தி, நாம் அதிக கவனம் செலுத்தும் ஆறு துறைகளின் கீழ் புதிய திட்டங்களை தீட்டுவதற்கு உத்வேகம் தருவதாகும். ரோட்டரி இதுவரை அதன் ஆறு சமாதான மையங்களில் 1,000க்கும் மேற்பட்ட சமாதான அறிஞர்களுக்குப் பயிற்சி அளித்திருக்கிறது. மோதல்களின் நெருக்கடியான சிக்கல்களைத் தீர்ப்பதில் அவர்கள் அனைவரும் மிகவும் திறமையானவர்கள்.

ரோட்டரி நிகழ்வுகளில் சந்திக்கும் இந்தியா மற்றும் பாகிஸ்தானைச் சேர்ந்த ரோட்டரியனான நாம், ஒருவரை ஒருவர் விரும்புகிறோம், கைகளைக் குலுக்கிக்கொள்கிறோம். நம்மிடையே நல்ல தோழமை, நட்புறவாடல் மற்றும் புரிந்து கொள்ளும் தன்மை இருக்கிறது. ஆனால், ஏழு தசாப்தங்களாக, இந்த இரு நாடுகளுக்கும் இடையேயான உறவு மோசமடைவதை, நாம் அமைதியாக வேடிக்கை தான் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

பேச்சுவார்த்தை மேசையில் உட்கார்ந்து சமாதான பேச்சு வார்த்தைகளைத் தொடர இரு நாடுகளுக்கும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு அமைப்பு இருக்க வேண்டும். அப்படி ஒரு ஆற்றல் ரோட்டரிக்கு இருக்கிறது. சமாதானத்திற்கான உலகளாவிய இயக்கம் ஒன்றை ரோட்டரி தொடங்கட்டும். நமது சமாதான திட்டத்தை மேம்படுத்துவதற்கான ஒரு உறுதியான வழியாக அது இருக்கும்.

ராமகிருஷ்ணா K
RC புத்தூர் — D3181

### ரோட்டரி நியூஸ் ஆங்கிலம்/தமிழ்

D 2981, 2982, 3000, 3202, 3212, *மற்றும் 3231 இம்மாவட்டங்களில் ஆளுநர்களின் பரிந்துறையின் பெயரில் அனைத்து ரொட்டேரியன்களுக்கும் ரோட்டரி நியூஸ் பத்திரிகை தமிழில் அனுப்பப்படும்.*

*உங்களுக்கு ஆங்கிலப் பத்திரிகை வேண்டுமாயின் எங்களுக்கு rotarynews@rosaonline.org என்ற முகவரிக்கு தங்கள் உறுப்பினர் ID மற்றும் பின்கோடுடன் கூடிய முகவரியுடன் E-மெயில் அனுப்பவும்.*

*உங்களுடைய கருத்துக்களை நாங்கள் வரவேற்கிறோம். ஆசிரியருக்கு எழுதுங்கள்.* rotarynews@rosaonline.org; rushbhagat@gmail.com

## Governors Council

| | | |
|---|---|---|
| RI Dist 2981 | DG | S Piraiyon |
| RI Dist 2982 | DG | Nirmal Prakash A |
| RI Dist 3000 | DG | RVN Kannan |
| RI Dist 3011 | DG | Vinay Bhatia |
| RI Dist 3012 | DG | Subhash Jain |
| RI Dist 3020 | DG | Guddati Viswanadh |
| RI Dist 3030 | DG | Rajiv Sharma |
| RI Dist 3040 | DG | Gustad Anklesaria |
| RI Dist 3053 | DG | Priyesh Bhandari |
| RI Dist 3054 | DG | Neeraj Sogani |
| RI Dist 3060 | DG | Pinky Patel |
| RI Dist 3070 | DG | Barjesh Singhal |
| RI Dist 3080 | DG | Praveen Chander Goyal |
| RI Dist 3090 | DG | Dr Vishwa Bandhu Dixit |
| RI Dist 3100 | DG | Deepak Jain |
| RI Dist 3110 | DG | Arun Kumar Jain |
| RI Dist 3120 | DG | Stuti Agrawal |
| RI Dist 3131 | DG | Dr Shailesh Palekar |
| RI Dist 3132 | DG | Vishnu S Mondhe |
| RI Dist 3141 | DG | Shashi Sharma |
| RI Dist 3142 | DG | Dr Ashes Ganguly |
| RI Dist 3150 | DG | Ramesh Vangala |
| RI Dist 3160 | DG | Konidala Muni Girish |
| RI Dist 3170 | DG | Ravikiran Janradan Kulkarni |
| RI Dist 3181 | DG | Rohinath P |
| RI Dist 3182 | DG | Abhinandan A Shetty |
| RI Dist 3190 | DG | Suresh Hari S |
| RI Dist 3201 | DG | A Venkatachalapathy |
| RI Dist 3202 | DG | Dr E K Ummer |
| RI Dist 3211 | DG | E K Luke |
| RI Dist 3212 | DG | K Raja Gopalan |
| RI Dist 3231 | DG | C R Chandra Bob |
| RI Dist 3232 | DG | Babu Peram |
| RI Dist 3240 | DG | Dr Sayantan Gupta |
| RI Dist 3250 | DG | Kumar Prasad Sinha |
| RI Dist 3261 | DG | Nikhilesh M Trivedi |
| RI Dist 3262 | DG | Bhabani Prasad Chowdhury |
| RI Dist 3291 | DG | Mukul Sinha |

## Board of Permanent Trustees & Executive Committee

| | | |
|---|---|---|
| PRIP | Rajendra K Saboo | RI Dist 3080 |
| PRIP | Kalyan Banerjee | RI Dist 3060 |
| RIPN | Sushil Gupta | RI Dist 3011 |
| PRID | Sudarshan Agarwal | RI Dist 3011 |
| PRID | Panduranga Setty | RI Dist 3190 |
| PRID | Ashok Mahajan | RI Dist 3141 |
| PRID | Yash Pal Das | RI Dist 3080 |
| PRID | Shekhar Mehta | RI Dist 3291 |
| PRID | P T Prabhakar | RI Dist 3232 |
| PRID | Dr Manoj D Desai | RI Dist 3060 |
| RID | C Basker | RI Dist 3000 |
| TRF Trustee | Gulam A Vahanvaty | RI Dist 3141 |
| RIDE | Dr Bharat Pandya | RI Dist 3141 |
| RIDE | Kamal Sanghvi | RI Dist 3250 |

### Executive Committee Members (2018–19)

| | |
|---|---|
| DG Rajiv Sharma<br>Chair – Governors Council | RI Dist 3030 |
| DG Pinky Patel<br>Secretary – Governors Council | RI Dist 3060 |
| DG Subhash Jain<br>Secretary – Executive Committee | RI Dist 3012 |
| DG A Venkatachalapathy<br>Treasurer – Executive Committee | RI Dist 3201 |
| DG Shashi Sharma<br>Member – Advisory Committee | RI Dist 3141 |



## ROTARY NEWS / ROTARY SAMACHAR

**Editor**
Rasheeda Bhagat

**Senior Assistant Editor**
Jaishree Padmanabhan



## Send all correspondence and subscriptions to

ROTARY NEWS TRUST
3rd Floor, Dugar Towers, 34 Marshalls Road, Egmore
Chennai 600 008, India. Phone : 044 42145666
e-mail: rotarynews@rosaonline.org
Website : www.rotarynewsonline.org



Printed by P T Prabhakar at Rasi Graphics Pvt Ltd, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014, India, and published by P T Prabhakar on behalf of Rotary News Trust from Dugar Towers, 3rd Flr, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008. Editor: Rasheeda Bhagat.



The views expressed by contributors are not necessarily those of the Editor or Trustees of Rotary News Trust (RNT) or Rotary International (RI). No liability can be accepted for any loss arising from editorial or advertisement content. Contributions – original content – is welcome but the Editor reserves the right to edit for clarity or length. Content can be reproduced, but with permission from RNT.



# களைகளைக் களைந்திடுவோம்

சென்னை மாநாட்டில் நடைபெற்ற கூட்டத்தின் போது, PRIP KR ரவீந்திரன் எழுப்பிய கேள்விக்கு RI தலைவர் பர்ரி ரஸ்ஸின் கூறிய பதில்கள் இந்த மாத வாசகர் கடிதங்களில் இடம் பெற்றிருக்கிறது.

ரவீந்திரன் ரோட்டரியில் நிறை எது? குறை எது? என்று கேட்டிருந்தார். அதற்கு ரஸ்ஸின், ரோட்டரியில் நல்லது, கெட்டது, மிக மோசமானது என்று மூன்று வகைகளுமே உண்டு என்று பதிலளித்திருந்தார்.

அத்துடன், ரோட்டேரியன்கள் மேற்கொண்டு நிறைவேற்றி வரும் திட்டங்கள் எல்லாம் சிறந்தவை. தங்களை ரோட்டேரியன்கள் மதிப்பதில்லை என்று ரோட்டராக்டர்கள் கூறியது கெட்டது. மோசமானது, பண விவகாரம் என்று ரஸ்ஸின் குறிப்பிட்டார்.

சில திட்டங்களுக்காக ஒதுக்கப்படும் நிதி உரிய வகையில் செலவிடப்படுவதில்லை. மாறாக, வேறு எங்கேயோ போய்விடுகிறது என்று புகார்கள் வருவது மன வேதனை தருகிறது. அத்தகைய செயல்களில் ஈடுபடுவோரை விசாரித்து உரிய தண்டனைகள் வழங்க வேண்டும் என்று மன ஆதங்கத்துடன் குறிப்பிட்டார்.

அடுத்தது, தேர்தல் தொடர்பான புகார்கள். அந்தப் புகார்களை விசாரிக்க நேரம்தான் ஆகிறது. காரணம், சிலர் தாங்கள் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்பதால் அதிருப்தியுடன் இருப்பதுதான்.

ரஸ்ஸின் தனது சுற்றுப் பயணத்தில் வேறொரு இடத்தில் பேசியபோது, தோல்வியை எப்படி ஏற்றுக் கொண்டு பணியைத் தொடர வேண்டும் என்பதை ரோட்டரி தனக்குக் கற்றுக் கொடுத்ததாகக் குறிப்பிட்டிருந்தார். தானும் ஒரு முறை தேர்தலில் தோல்வியடைந்ததை சுட்டிக் காட்டி, அப்படி தோல்வியடைந்தபோது மனத்துக்குச் சங்கடம் ஏற்பட்டாலும், தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு, அந்த முடிவை ஏற்றுக் கொண்டதாகவும், வெற்றி பெற்ற நபரை மனமாரப் பாராட்டியதாகவும் கூறினார்.

RI தலைவரே சில புகார்கள் குறித்துக் கூறுவதும் எச்சரிப்பதும் கவனிக்க வேண்டிய விஷயம். கடந்த சில ஆண்டுகளாகவே மூத்த தலைவர்களும் கவலை தெரிவித்தனர். அவர்கள் கூறுகிற முறையும் தொனியும் வேண்டுமானால் மாறியிருக்கலாம். தெரிவித்த கவலை ஒன்றுதான். தேர்தல் பிரச்சினைகள், திட்டங்களைச் செயல்படுத்துவதில் ஊழல் ஆகியவை மிக மோசமானவை. நமது மண்டலத்தில் உள்ள ரோட்டரியைப் பீடித்த நோய்கள். கடந்த நான்கு ஆண்டுகளாக PRIP KR ரவீந்திரன், ஜான் ஜெர்ம், இயான் ரிஸ்லி, தற்போதுள்ள RI தலைவர் ரஸ்ஸின் ஆகிய அனைவருமே கவலையை வெளியிட்டு வந்துள்ளனர்.

RI தலைவராக நியமனம் பெற்றுள்ள சுஷில் குப்தா 2018 ஜூன் 30ம் தேதி வரையில் TRF அறங்காவலராக இருந்தபோதும் தற்போது அறங்காவலராக இருக்கும் குலாம் வாஹன்வதி, RID C பாஸ்கர் ஆகியோரும் தங்களது கவலையை வெளியிட்டுள்ளனர்.

அது மட்டுமின்றி ரோட்டரியில் இருக்கும் சிலர் தனியாக மறைமுகமாகக் கூடிப் பேசுவது, ரோட்டரியில் ஒட்டுமொத்தமாக உறுப்பினர்களாகச் சேர்வது, திடீரென்று ஒட்டுமொத்தமாக வெளியேறுவது ஆகிய செயல்களும் வெட்கக் கேடானவை. நமது மண்டலத்தில், குறிப்பாக இந்தியாவில் ரோட்டரியின் புகழுக்குக் களங்கம் ஏற்பட்டு விட்டது. ஆனால், நல்ல காலமாக மூத்த தலைவர்கள் குறிப்பிடுவதைப் போல் மோசான செயல்களில் ஈடுபடுவோரின் எண்ணிக்கை மிக குறைவாக உள்ளது.

நமது மண்டலத்தில் உள்ள பெரும்பாலான ரோட்டரியினர் எளியவர்களின் வாழ்க்கை உயர்த்துவதற்காக அரும்பாடுபட்டு வருகின்றனர். அவர்களது புகழுக்கு சில கருங்காலிகளால் களங்கம் ஏற்படுவது ஏன் என்றும் நமக்கு நாமே கேட்டுக் கொள்ளவேண்டும். RI தலைவர் ரஸ்ஸின் நிறைவாகக் குறிப்பிட்டுள்ளபடி சில இடங்களில் நாம் ரோட்டரியின் நெறிகளைப் பின்பற்றுவதில்லை என்பதையும் ஆராய வேண்டும்.

பெங்களூருவைச் சேர்ந்த D ரவிசங்கர் TRFக்கு பில்கேட்ஸ் அறக்கட்டளைக்கு அடுத்து அதிக தொகையான ரூ.100 கோடியைக் கொடுத்து இந்தியாவின் மூவர்ணக் கொடியைப் பட்டொளி வீசிப் பறக்கச் செய்துள்ளார். RIக்கு நான்காவது இந்தியராக சுஷில் குப்தா தலைமை ஏற்கிறார். இப்படி மகத்தான செயல்களில் நாம் ஈடுபடும் போது இதுபோன்ற கரும்புள்ளிகளைச் சகித்துக் கொள்ள முடியாது.

விவசாயிக்குக் களைகள் எவை என்று தெரியும். அவற்றைப் பிடுங்கி எறிவது அவரது வேலை.

ரஷீதா பகத்



# புதிய பாதையை உருவாக்குவோம்

BE THE INSPIRATION

அன்பு சக ரோட்டேரியன்களே,

ஒவ்வொரு ரோட்டரி ஆண்டின் தொடக்கத்திலும் வெளியாகும் ரோட்டேரியன் (Rotarian) பத்திரிகையின் முதல் இதழில் ரோட்டரி இன்டர்நேஷனல் அமைப்பின் தலைவராகப் பொறுப்பேற்பவரைப் பற்றியும் அவரது குடும்பத்தைப் பற்றியும் குறிப்புகள் இடம்பெறும். அவற்றை ஆர்வத்துடன் படிப்பேன். அப்படிப் படித்தபோதெல்லாம், அந்தப் பத்திரிகையின் எழுத்தாளர் எனது ரோட்டரி சங்கத்தின் கூட்டத்துக்கு வருவார் என்று நினைத்துக் கூடப் பார்க்கவில்லை. மற்றவர்களின் கவனத்தை ஈர்க்க வேண்டும் என்பதில் எனக்குப் பெரிய நாட்டமில்லை. எனது படம் ரோட்டரி இதழின் அட்டையில் பிரசுரமாகும் என்பது கூட எனக்குத் தர்ம சங்கடமாக இருந்தது. ஆனால், ஆசிரியரது விருப்பத்தின்படி அட்டையில் வெளியான படம் எனக்கு நிறைவைத் தந்தது. காரணம், அது எனது புகைப்படமோ என் மனைவி எஸ்தரின் படமோ அல்ல. ஃப்ளெமிங்கோ எனப்படும் செங்கால் நாரைப் பறவைகளின் கூட்டத்தின் அழகான புகைப்படம். ஆனால், செங்கால் நாரைகளுக்கு ரோட்டரி குறித்து அக்கறை இருக்குமா தெரியாது.

அதைப் பார்த்ததும் எனக்கு ஒன்று தோன்றியது. கூட்டத்தில் இருந்த எல்லாப் பறவைகளும் ஒரு திசையைப் பார்த்துக் கொண்டிருக்க, ஒரே ஒரு நாரை மட்டும் வேறு திசையில் பார்த்துக் கொண்டிருந்தது வித்தியாசமாக இருந்தது. அதுபோன்ற வித்தியாசமான பார்வை ரோட்டரி உறுப்பினர்களுக்கு இருக்கவேண்டும் என்று தோன்றியது. எல்லோரும் ஒரே திசையில் பார்த்துக் கொண்டிருப்பதை அந்த நாரைப் பறவை அறிந்திருக்கும். அத்துடன், அந்தப் பறவைக் கூட்டம் பார்த்துக் கொண்டிருக்கும் திசை சரியல்ல என்பதையும் உணர்ந்திருக்கும். அதனால் தானோ என்னவோ நல்ல திசையை நோக்கிப் போவோமே என்று பார்த்திருக்கக் கூடும். அப்படிப் புதிய திசையில் சென்றபோது, அது நல்ல பாதையாகத் தெரிந்துவிட்டால், மற்ற பறவைகளையும் அந்த நாரை அழைத்து, இதோ பார் நல்ல வழி தெரிகிறது என்று உணர்த்தியிருக்கக் கூடும். அதன் பின் மற்ற பறவைகளும் அதைப் புரிந்துகொண்டு, அதே திசை நோக்கியிருக்கக் கூடும்.




மாற்றம் என்பதைச் செயல்படுத்துவது கடினம்தான். ஆனால், ஒரே பாதையில் நீண்ட காலமாகப் போய்க் கொண்டிருக்கும்போது, சகாக்களுடன் சேர்ந்து ஒரே திசையில் போய்க் கொண்டிருக்கும் போது, வித்தியாசமாகப் பார்ப்பது அவ்வளவு எளிதல்ல.

ஆனால், மாற்றம், சாதாரண மாற்றமாக இல்லாமல், எண்ணி எண்ணிச் செயல்படுகிற, கவனமான, இலக்கு நோக்கிய மாற்றமாக இருப்பது எந்த அமைப்புக்கும் மிக அவசியம். அதுதான் ஏற்படவேண்டும், அந்த மாற்றம்தான் பொருந்தக் கூடியதாக இருக்க வேண்டும். அந்த மாற்றமே சரியான பாதையில் செல்வதாக அமையவேண்டும்.

இப்போது அந்த அட்டைப் படத்தைப் பாருங்கள். என்னைத் தேடாதீர்கள். அட்டைப் படத்தில் நான் இல்லை. அந்த அட்டைப் படத்தில் இருப்பது செங்கால் நாரை.

பஹாமாஸ் தீவில் சுகமான காலையில் நடை பழகுவதோ, ரோட்டரி அமைப்புக்கான திட்டமிடுவதோ வித்தியாசமான பாதையை அணுகவேண்டும் என்ற உறுதி வேண்டும். அது ஆர்வம், துணிவு, நல்ல பாதையாக இருக்கும் என்ற நோக்கத்தில் அமையவேண்டும்.

பேரி ரஸின்
தலைவர், ரோட்டரி இண்டர்நேஷனல்



# ஆரோக்கிய வாழ்வை ஆதரிப்போம்!

மக்கள் ஆரோக்கியமாக வாழவேண்டும் என்பதற்காக உடல்நலத்தைப் பேணி, நோய் வராமல் தடுப்பதில் அதிக கவனம் செலுத்தவேண்டும். உடல் நலமும் மன நலமும் நிலையாக இருக்க வேண்டுமானால் ஆரோக்கியத்தை மேம்படுத்தி, நோயைத் தடுக்கவேண்டும்.

ஆரோக்கியமான வாழ்வு என்பது தனி நபரின் அணுகுமுறை என்றும் செயல் திறன் என்றும் சொல்கிறார்கள். அதுதான் நல்ல பழக்க வழக்கங்களையும் விளைவுகளையும் ஏற்படுத்தும்.

உடல் நலம் என்பது வெறும் நோயில்லாத நிலை மட்டுமல்ல. உடல்நிலை, மனநிலை, சமூக பழக்க வழக்கம் ஆகியவை இணைந்த நிலையாகும் என்று உலக சுகாதார நிறுவனம் (WHO) கூறுகிறது.

அதைப் போல் சுகாதார மேம்பாடு என்பது சுயக் கட்டுப்பாட்டை அதிகரிப்பதும் உடல்நலத்தைப் பேணுவதும் ஆகும் என்றும் கூறப்படுகிறது. மக்கள் ஆரோக்கியமாக வாழ்வதில் சுற்றுச்சூழலும் சீரான வாழ்க்கை நடைமுறையும் முக்கியப் பங்காற்றுகின்றன. துரதிருஷ்டவசமாக ஆறு பேரில் ஒருவர் சுற்றுச்சூழல் மாசினால் இறந்துவிடுகிறார்கள். வளர்ந்து வரும் நாடுகளில் இந்நிலை அதிகமாக இருக்கிறது.

தில்லியில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் 2017ம் ஆண்டு டிசம்பரில் கிரிக்கெட் போட்டி நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, மைதானத்தில் இருந்த இலங்கை விளையாட்டு வீரர்களுக்கு அடிக்கடி மூச்சுப் பிரச்சினையும் வாந்தியும் ஏற்பட்டது. இதனால், விளையாட்டு பல முறை நிறுத்தப்பட நேர்ந்தது. இதற்குக் காரணம், மோசமான மாசடைந்த காற்றுதான் என்று கண்டறியப்பட்டது. நாட்டின் தலைநகராக இருந்தபோதும் தில்லியின் காற்று மாசு உலகத் தரத்தை விட மிக மிக மோசமானது எனக் கண்டறியப்பட்டுள்ளது. இந்தியாவின் பல நகரங்களிலும் இதே நிலைதான். நச்சுத்தன்மையுள்ள வாயு, கண்ணுக்குத் தெரியாத நுண் துகள்கள் ஆகியவை காற்றை மாசாக்கிவிட்டது. அவை உடல்நலத்துக்கு, குறிப்பாக குழந்தைகளுக்கும் முதியோருக்கும் மிகவும் தீங்கானவை.

வளர்ந்த நாடுகளில் உடல் பருமன் உடல்நலத்துக்குத் தீங்கு எனக் கண்டறியப்பட்டுள்ளது. வளரும் நாடுகளில் சர்க்கரை நோய் வேகமாக அதிகரிக்கும் ஆபத்தாகிவிட்டது. இத்தகைய பொது சுகாதாரப் பிரச்சினைகளை எதிர்கொள்ள சரியான தகவல் பரிமாற்றமே பயன் தரும். எனவே, நமது வாழ்வியல் மாற்றத்தில் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்குப் புதிய உத்திகளைத் திட்டமிடவேண்டும்.

பல ரோட்டரி சங்கங்கள் குறிப்பிட்ட காலத்துக்கு மருத்துவ முகாம்களை நடத்துகின்றன. அது மட்டுமின்றி, சுகாதார மேம்பாட்டுக்காக புதிய தகவல் பரிமாற்ற உத்திகளையும் ரோட்டரி அமைப்புகள் கையாள வேண்டும். பொது சேவை அறிவிப்புகள், ஆரோக்கிய மேம்பாட்டுத் திட்டங்கள், ஊடகம் வழியான பிரசாரங்கள், செய்தி மடல்களை வெளியிடுதல் ஆகியவற்றை மேற்கொள்ள வேண்டும்.

பொது மக்களிடையே ஆரோக்கியமான வாழ்வையும் அன்றாடம் உடற்பயிற்சி செய்ய வேண்டிய அவசியத் தையும் வலியுறுத்தி, விழிப்பு ஏற்படுத்தும் பணியில் ரோட்டராக்ட் சங்கங்கள், இன்டராக்ட் சங்கங்கள், ரோட்டரி சமுதாயப் படைகள் ஆகியவற்றின் உறுப்பினர்களை ஈடுபடுத்தலாம். மக்களின் சமூக, பொருளாதார, பண்பாட்டு, அரசியல் சூழ்நிலைகளை சமுதாய தீர்மானிகள் என்று உலக சுகாதார நிறுவனம் குறிப்பிடுகிறது. மருத்துவ முகாம்களில் ஆரோக்கிய மேம்பாடு, நோய்த் தடுப்பு ஆகிய திட்டங்களைச் சேர்ப்பதன் மூலம் இந்தப் பிரச்சினையை எதிர் கொள்ளலாம்.

உலக சுகாதார நிறுவனமும் உலக பொருளாதாரப் பேரவையும் இணைந்து வெளியிட்ட ஓர் அறிக்கையில், தற்போது உரிய நடவடிக்கையை எடுக்காவிட்டால் ஆரோக்கியமற்ற வாழ்க்கை முறை, தவறான உணவுப் பழக்கம் ஆகியவை காரணமாக இந்தியா பல கோடி ரூபாய் செலவிட நேரும் என்று எச்சரித்துள்ளது. எனவே, உடல் நலம், மன நலம் காக்கும் தரமான வாழ்க்கையை வாழ்வதற்கு ஆரோக்கிய நலத் திட்டங்களைச் செயல்படுத்தவேண்டும். அதுதான் சரியான சேவை.



C பாஸ்கர்
டைரக்டர், ரோட்டரி இன்டர்நேஷனல்.

# District Wise TRF Contributions as on October 2018

(in US Dollars)

| District Number | APF | PolioPlus | Other Restricted | Endowment Fund | Total Contributions | EREY Donors (in numbers) | EREY % |
|---|---|---|---|---|---|---|---|
| | | | India | | | | |
| 2981 | 17,777 | 2,576 | 0 | 8,000 | 28,353 | 139 | 3 |
| 2982 | 20,169 | 59 | 0 | 243 | 20,471 | 270 | 9 |
| 3000 | 9,467 | 1,000 | 5,265 | 4,265 | 19,997 | 58 | 1 |
| 3011 | 34,657 | 278 | 26,482 | 15,072 | 76,489 | 59 | 2 |
| 3012 | 106,925 | 50 | 193,250 | 8,800 | 309,025 | 68 | 2 |
| 3020 | 8,029 | 37,107 | 0 | 5,000 | 50,136 | 32 | 1 |
| 3030 | 7,730 | 0 | 0 | 0 | 7,730 | 3 | 0 |
| 3040 | 2,009 | 0 | 9,930 | 0 | 11,939 | 4 | 0 |
| 3053 | 36,457 | 0 | 0 | 0 | 36,457 | 2 | 0 |
| 3054 | (22,796) | 0 | 30,714 | 0 | 7,918 | 19 | 0 |
| 3060 | (3,851) | 53 | 83,132 | 18,000 | 97,333 | 436 | 11 |
| 3070 | 56,316 | 300 | 0 | 0 | 56,616 | 162 | 6 |
| 3080 | 18,418 | 3,856 | 15,527 | 0 | 37,801 | 30 | 1 |
| 3090 | 17,779 | 0 | 0 | 0 | 17,779 | 50 | 2 |
| 3100 | 14,348 | 475 | 0 | 0 | 14,823 | 37 | 2 |
| 3110 | 21,508 | 1,087 | 16,887 | 0 | 39,482 | 38 | 1 |
| 3120 | 19,183 | 0 | 148,015 | 0 | 167,198 | 31 | 1 |
| 3131 | 131,885 | 1,021 | 145,680 | 33,203 | 311,789 | 393 | 8 |
| 3132 | 5,732 | 0 | 3,500 | 20,000 | 29,232 | 49 | 1 |
| 3141 | 417,937 | 7,892 | 553,387 | 1,000 | 980,215 | 551 | 11 |
| 3142 | 184,122 | 50 | (438) | 0 | 183,734 | 378 | 12 |
| 3150 | 28,928 | 0 | 60,437 | 235,467 | 324,831 | 333 | 10 |
| 3160 | 3,842 | 580 | 0 | 0 | 4,422 | 13 | 1 |
| 3170 | 30,812 | 2,169 | 4,679 | 0 | 37,659 | 143 | 3 |
| 3181 | 31,206 | 691 | 0 | 0 | 31,897 | 120 | 4 |
| 3182 | 31,233 | 0 | 6,516 | 0 | 37,750 | 201 | 6 |
| 3190 | 43,751 | 3,512 | 9,987 | 1,449,359 | 1,506,609 | 269 | 6 |
| 3201 | 28,739 | 1,472 | 131,539 | 0 | 161,750 | 83 | 2 |
| 3202 | 7,364 | 565 | 0 | 0 | 7,928 | 9 | 0 |
| 3211 | 14,725 | 0 | 0 | 1,515 | 16,240 | 176 | 4 |
| 3212 | 52,038 | 6,377 | 0 | 12,000 | 70,414 | 99 | 3 |
| 3231 | 4,565 | 991 | 0 | 0 | 5,556 | 117 | 4 |
| 3232 | 79,722 | 178 | 34,280 | 1,000 | 115,181 | 80 | 2 |
| 3240 | 33,231 | 208 | 525 | 0 | 33,964 | 65 | 2 |
| 3250 | 368 | 0 | 6,444 | 0 | 6,812 | 6 | 0 |
| 3261 | 8,983 | 1,000 | 100 | 2,000 | 12,083 | 7 | 0 |
| 3262 | 7,228 | 1,000 | 900 | 3,000 | 12,128 | 24 | 1 |
| 3291 | 46,104 | 0 | 29,919 | 800 | 76,823 | 98 | 3 |
| **India Total** | **1,556,641** | **74,546** | **1,516,657** | **1,818,724** | **4,966,568** | **4,652** | **3** |
| 3220 **Sri Lanka** | 47,528 | 1,000 | 1,650 | 6,000 | 56,178 | 204 | 11 |
| 3271 **Pakistan** | 22,758 | 13,330 | 1,050 | 0 | 37,137 | 8 | 1 |
| 3272 **Pakistan** | 3,895 | 2,069 | 0 | 0 | 5,964 | 17 | 1 |
| 3281 **Bangladesh** | 74,467 | 2,900 | 22,834 | 12,000 | 112,201 | 97 | 2 |
| 3282 **Bangladesh** | 14,443 | 610 | 0 | 1,000 | 16,053 | 38 | 1 |
| 3292 **Nepal** | 37,224 | 5,162 | 73,509 | 0 | 115,894 | 117 | 3 |
| **South Asia Total** | **1,756,955** | **99,617** | **1,615,700** | **1,837,724** | **5,309,996** | **5,133** | **3** |
| **World Total** | **30,553,881** | **7,573,442** | **5,858,094** | **6,746,996** | **50,732,413** | | |

Source: RI South Asia Office




# ART ACROSS GENERATIONS

The german kitchen.
Since 1898.

Head Office and Showroom:
A- 248, Mahipalpur Extension, NH-8,
Delhi-Gurgaon Road, New Delhi-110037
[T] +91-11-46102000 [E] info@hacker-kitchens.com

CERTIFIED
TROPICALISED
KITCHENS

Häcker
kitchen.germanMade.

www.haecker-india.com
www.haecker-kuechen.com

| AHMEDABAD | BANGALURU | CHENNAI | COIMBATORE | DELHI |
|---|---|---|---|---|
| 9879538977 | 9740999350 | 9442081111 | 9500210555 | 9313134488 |

| HYDERABAD | INDORE | JAIPUR | KOCHI | LUDHIANA | MUMBAI | MANGALURU | THRISSUR |
|---|---|---|---|---|---|---|---|
| 9700058285 | 9425803599 | 9414058718 | 9895058285 | 9815048222 | 9322987229 | 7899119955 | 7025991000 |

# ரஸ்ஸின் ரசிக்கும் சண்டிகர்

ரஷீதா பகத்

சண்டீகர் ரோட்டரி சங்கம் அந்த நகரில் ஒரு சமுதாய நலத் திட்டத்தைச் செயல்படுத்தியது. அது ரோட்டரி இன்டர்நேஷனல் அமைப்பின் தலைவர் பாரி ரஸ்ஸினை வெகுவாகக் கவர்ந்துவிட்டது. அதில் அவர் மிகுந்த ஆர்வம் காட்டினார்.

அது வேறொன்றுமில்லை. சண்டீகரில் ஏழைகள் அதிகம் வசிக்கும் சாக்கேத்ரி என்ற இடத்தில் ரோட்டரி சங்கம் நேரடியாக மேற்கொண்ட சில பணிகளால் பலன் அடைந்தவர்களுடன், குறிப்பாக சிறுவர்களுடன் அவர் சிறிது நேரம் உரையாடி மகிழ்ந்தார்.

போதிய வசதியில்லாத, சுகாதாரம் இல்லாத, சுத்தம் இல்லாத அந்த இடத்தில் 500 பேர் வசிக்கிறார்கள். ரஸ்ஸினும் அவரது மனைவி எஸ்தரும் அந்த இடத்திற்குச் சென்று அவர்களது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண நடவடிக்கை எடுத்தனர். அதையடுத்து, அவர்களுக்காக சண்டீகர் ரோட்டரி சங்கம் (D 3080) நேரடியாக சமூகப் பணி செய்து வருகிறது. தற்போது அப்பகுதியினர் கல்வி கற்று வருகின்றனர். அவர்களில் இரு சிறுமியர் ஆங்கிலத்தில் பேசு வதற்கும் நன்கு பழகிவிட்டனர்.

அச்சிறுமிகள் ஆங்கிலத்தில் பேசியதை ரஸ்ஸின் விடியோவில் பெருமையோடு பதிவு செய்தார். இதை அவர் இந்தியாவில் பங்கேற்ற வேறு கூட்டங்களிலும் மகிழ்ச்சியோடு குறிப்பிட்டுள்ளார்.

அப்பகுதியின் 150 குடும்பங்களின், சுத்தம், சுகாதாரம், எழுத்தறிவு ஆகியவற்றுக்காக ரோட்டரி சங்கம் என்ன பணிகளை மேற்கொண்டு வருகிறது என்பதைக் காண்பதற்கான வாய்ப்பு எங்களுக்குக் கிடைத்தது. அங்கே, ஒரு பள்ளியில் கட்டுப்பாட்டுடன் செயல்படும் சிறுவர்களைக் கண்டோம். அவர்களைச் சந்திக்கும்போது, அவர்கள் படிப்பதை அறியும்போது மகிழ்ச்சி ஏற்படுகிறது. தாங்கள் கல்வி கற்க வேண்டும் என அவர்கள் ஆர்வம் காட்டுகிறார்கள். இரு சிறுமிகளும் ஆங்கிலத்தில் பேசியது நெஞ்சைத் தொட்டது என்றார் ரஸ்ஸின்.

இதற்கான நிகழ்ச்சியில் ரஸ்ஸின், எஸ்தர், ரோட்டரி சங்கத்தினர் ஆகியோரை அச்சிறுமிகள் ஆங்கிலத்தில் வரவேற்றுப் பேசினர். அப்போது அவர்களுக்கு சிறிது பதற்றம் இருந்தது. பேச்சில் ஒரு சில பிழைகளும் நேர்ந்தன. ஆனால், அவர்கள் காட்டிய தன்னம்பிக்கை, ஆர்வம் ஆகியவை அதை ஈடு செய்தது. அவர்கள் சிறந்த பேச்சாளர்

*RI தலைவர் பாரி ரஸ்ஸின், மனைவி எஸ்தர், RI முன்னாள் தலைவர் ராஜேந்திர சாபூ மற்றும் ரோட்டரி கவர்னர் ப்ரவீன் C கோயல் ஓர் அமைதி பேரணியில்.*



ஆவதற்கான பயணத்தில் இருந்தது தெரிந்தது. படிப்படியாக அவர்களிடம் முன்னேற்றம் இருந்தது.

### ஒட்டுமொத்த சமுதாய மேம்பாட்டுத் திட்டம்

அப்பகுதி மக்கள் பிற இடங்களிலிருந்து சண்டீகருக்குக் குடிபெயர்ந்தவர்கள். கிட்டத்தட்ட சமூகத்தால் கைவிடப்பட்டவர்கள். அவர்களுக்குக் கை நீட்டி உதவியது சண்டீகர் ரோட்டரி சங்கம். ரோட்டரி இன்டர்நேஷனல் முன்னாள் தலைவர் ராஜேந்திர சாபூவின் ஆதரவுடன் அவரது மனைவி உஷா சாபூவின் முயற்சியால் இது சாத்தியமாயிற்று. அவர்கள் குளிர் நிறைந்த புத்தாண்டு தினத்தை முன்னிட்டு சாக்கேத்ரி பகுதியில் தெருக்களிலும், குடிசைகளிலும் வாழ்வோருக்கு போர்வைகளை வழங்கி உதவினர். எழுத்தறிவும், சுகாதார வசதியும் இல்லாத அவர்களது நிலையைக் கண்ட ரோட்டரி சங்க உறுப்பினர்கள் அவர்களுக்கு அனைத்து வசதி களையும் செய்து தருவதற்கான நீண்டகாலத் திட்டத்தைச் செயல்படுத்த முடிவு செய்தனர். அதன்படி அந்த மக்களின் வாழ்க்கையை மாற்றும் வகையில் கல்வி, சுத்தம் சுகாதாரம் ஆகியவற்றுக்கு ஏற்பாடு செய்தனர்.



DG *ப்ரவீன் கோயல்* Inter-City *கூட்டத்தில் விளக்கேற்றுகிறார்.* RI *தலைவர் பாரி ரஸ்ஸின் மற்றும் எஸ்தர், பாசுகோயல் மற்றும்* PRIP *ராஜா சாபூ உள்ளனர்.*



இப்பணிகளில் சுயவேலை வாய்ப்பு பெற்ற பெண்கள் அமைப்பு என்ற (SEWA) தன்னார்வத் தொண்டு நிறுவனத்துடன் இணைந்து ரோட்டரி சங்கம் செயல்பட்டது என்று மாவட்ட முன்னாள் ஆளுநர் மதுகர் மல்ஹோத்ரா விவரித்தார். சண்டீகர் 27வது செக்டாரில் உள்ள பாரதீய வித்யா பவன் கல்வி நிறுவனம் தங்களது ஆசிரியர்களைப் பள்ளி வகுப்பு நேரத்திற்குப் பின்னர் சாக்கேத்ரி மக்களுக்குக் கல்வி அளிக்க ஏற்பாடு செய்தது. அப்பகுதியில் சேவா அமைப்பு நடத்திய ஆய்வில் பல குழந்தைகளுக்குச் சத்துக் குறைபாடு இருந்தது தெரியவந்தது. அவர்கள் அங்கு தினமும் பணியாற்றினர். அவர்களுக்கு சுகாதாரம், அடிப்படை வசதிகள், கல்வி, வறுமை ஒழிப்பு என அனைத்து சேவைகளையும் சேவா அமைப்பின் தொண்டர்கள் அளித்தனர். அத்துடன் அவர்களது பழக்க வழக்கங்களை மாற்றவும் முயற்சி செய்னதர்.

இத்திட்டம் ஐந்தாண்டுக்கு மறு ஆய்வு செய்யப்பட்டு, புதுப்பிக்கப்படும். இத்திட்டத்தில் ரோட்டரி சங்க உறுப்பினர்கள் முழுமையாக ஈடுபாடு காட்டி, ரோட்டரிக்கே பெருமை தேடித் தந்தனர். அத்துடன், தலைவர் பாரி ரஸ்ஸினின் பிரபலமான ‘தூண்டுகோலாக இருங்கள்’ (Be the Inspiration) என்ற வாசகத்துக்கு பொருத்தமாகச் செயல்பட்டனர் என்று மல்ஹோத்ரா கூறினார்.

இந்த உன்னதமான திட்டத்திற்கு ஆண்டுதோறும் 47 ஆயிரம் டாலர் (சுமார் ரூ.34,06,560) செலவாகிறது. இத்திட்டத்தில் நோய்த் தடுப்பு, தனிநபர் சுகாதாரம், கழிவு அகற்றுதல், பள்ளியிலிருந்து இடைநின்ற சிறுவர்களுக்கான சிறப்பு வகுப்புகள், திறன் சார்ந்த தொழில்நுட்பப் பயிற்சி, கல்வி ஆலோசனை, குழந்தைகளின் எடை, உயரம் அளவிடுதல், சமவிகித உணவு, அரசுத் திட்டங்கள் குறித்த தகவல் மற்றும் விழிப்புணர்வு, உள்ளூர் அளவில் தலைமைப் பண்பு வளர்த்தல், சூரிய ஒளி சக்தியைப் பயன்படுத்துவதற்கு ஊக்கமளித்தல் ஆகிய பல திட்டங்கள் அடங்கும்.

ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவர் ரஸ்ஸினும் அவரது மனைவி எஸ்தரும் அங்கு நடைபெறும் மருத்துவ முகாம்களுக்கு சென்று பார்வையிட்டனர். அந்த மக்களுக்கு மருத்துவர்களும் மருத்துவப் பணியாளர்களும் உரிய மருத்துவப் பரிசோதனை செய்து, மருந்துகள் வழங்கி, மேல் சிகிச்சைக்கு அறிவுறுத்தினர். ரஸ்ஸின்

சுகாதாரப் பணியில் இருந்ததால், அதில் மிகுந்த அக்கறை எடுத்துக் கொண்டார். அங்குள்ள சுகாதாரப் பணியாளர்களுடன் விவாதித்தார்.

### ரோட்டரி அமைதி நினைவுச்சின்னம்

சண்டீகரில் ரோட்டரியினர் உருவாக்கிய ரோட்டரி அமைதி நினைவுச் சின்னத்துக்கு ரஸ்ஸின் தம்பதி சென்று பார்வையிட்டனர்.

இந்தியாவில் ரோட்டரி அமைதி நகரம் என்று 2003ம் ஆண்டில் சண்டீகர் அறிவிக்கப்பட்டது. இது தான் நாட்டின் இரண்டாவது அமைதி நகரமாகும். முதல் நகரம் சென்னை என்பது குறிப்பிடத் தக்கது.

இந்த ரோட்டரி அமைதி நகரம் என்ற கருத்தியல் ஆஸ்திரேலியா வாகா நகரில் ரோட்டேரியன் டோனி குவின்லிவனால் உருவாக்கப்பட்டது. உலகின் முதல் ரோட்டரி அமைதி நகரமாக அந்த நகரம் 1993ம் ஆண்டு அறிவிக்கப்பட்டது. அதையடுத்து, உலகம் முழுதும் அமைதி நகரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அறிவிக்கப்பட்டு வருகின்றன என்று ரோட்டரி மாவட்ட ஆளுநர் பிரவீண் கோயல் கூறினார்.

சண்டீகர் ரோட்டரி சங்கத்தின் தலைவராக விஜய் வாதவான் இருந்தபோது, முன்னாள் ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவர் ராஜேந்திர சாபூவின் வழிகாட்டுதலில் சிறந்த சுற்றுலாத் தலமான சுக்னா ஏரியில் ரோட்டரி அமைதி நினைவுச் சின்னத்தை அமைப்பது என்று முடிவு செய்யப்பட்டது. கட்டடக் கலையியல் நிபுணர்களும் தம்பதியுமான ரோட்டரி உறுப்பினர் சன்தீப் லுத்ராவும் அவரது மனைவி சுசித்ராவும் இணைந்து இதை வடிவமைத்தனர். சமுதாயத்தில் பாரபட்சமும், ஏற்றத்தாழ்வும் இல்லாமல் அனைவரையும் சமமாக மதித்தல், மரியாதை காட்டுதல், வன்முறையைக் கைவிடுதல், சிக்கல்களைத் தீர்த்தல், பேச்சுரிமை, எழுத்துரிமை, வேறுபாடுகளைக் களைதல், பண்பாட்டு இணக்கம், பன்முகத் தன்மையைப் போற்றுதல் ஆகியவையே இந்த நினைவுச் சின்னம் அறிவிக்கும் செய்திகள் ஆகும் என்றார் அவர்.

### சாபூ தம்பதி அளித்த சிறப்பு விருந்து

ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவர் ரஸ்ஸின், அவரது மனைவி எஸ்தர் தம்பதியின் வருகைக்காக, சண்டீகர் ரோட்டரி அமைப்பின் சாபூ தம்பதி மிகச் சிறப்பான விருந்தினை அளித்தனர். ஹயாத் ரீகன்ஸி நட்சத்திர ஹோட்டலில் நடத்தப்பட்ட இந்த விருந்தில், ரோட்டரி இன்டர்நேஷனல் முன்னாள் இயக்குநர்



YP தாஸ், மஞ்சு, மாவட்ட ரோட்டரி தலைவர்கள், அவர்களது மனைவியர், பல அதிகாரிகள், தொழில்முனைவோர் ஆகியோர் பங்கேற்றனர். ஆளுநரை அடுத்த நகர தலைமை நிர்வாகியின் ஆலோசகர் பரிமள் ராய், உள்துறைச் செயலர் அருண் குமார் குப்தா, நிதித்துறைச் செயலர் அஜய் குமார் சின்ஹா, பஞ்சாப் முதல்வரின் முதன்மைச் செயலர்கள் சுரேஷ்குமார், தேஜ்வீர் சிங், இந்திய - திபெத் படையின் காவல்துறைத் தலைவர் (ஐஜி) அரவிந்த் குமார், சண்டீகர் காவல் துறைத் தலைமை இயக்குநர் சஞ்சய் பெய்னிவால், ஹரியாணா கூடுதல் தலைமைச் செயலர் விஜய்வர்தன், நீதிபதிகள், தொழிலதிபர்கள், பத்திரிகை ஆசிரியர்கள் பங்கேற்றனர்.

### பள்ளியில் 'கைகழுவு' திட்டமும் 'ரத்த' தான வங்கியும்

சண்டீகர் மனிமஜ்ராவில் உள்ள அரசு மாதிரி பள்ளியில், ஒருங்கிணைந்த 'பள்ளியில் கைகழுவு' திட்டத்தை (comprehensive WinS project) சண்டீகர் மிட்-டவுன் ரோட்டரி சங்கம் மேற்கொண்டது. பாரி ரஸ்ஸின் அங்கு வருகை புரிந்து சிறிது நேரம் அங்குள்ள கழிவறை இதர வசதிகளைப் பார்வையிட்டார்.

இதற்கு ஒரு வரலாறு உண்டு. இரண்டு ஆண்டுகளுக்கு முன் ஒரு மாநாட்டில் அலாஸ்கா ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த ஜான் தேஷெர் கலந்து கொண்டார். அவர் தேசிய தொற்றுநோய்த் தடுப்புத் திட்டங்களை (National Immunisation Programmes) ஆய்வு செய்ய அடிக்கடி இந்தியாவுக்கு வருவதுண்டு. மாவட்ட முன்னாள் ஆளுநர்களில் ஒருவரது கணவரான கண்ணன் தேவன் ரோட்டரி சங்கத் தலைவராக இருந்தபோது, ஜான் தேஷெர் நமது ரோட்டரி சங்கத்துடன் இணைந்து சேவை புரிய முன்வந்தார். ஆனால், பள்ளி மாணவியருக்கு சானிடரி நாப்கின்களை வழங்க வேண்டும் என்ற நிபந்தனை விதித்தார். அவர் ஏற்கெனவே, கென்யா நாட்டில் இதைச் செயல்படுத்தியிருக்கிறார். எனினும், அத்திட்டம் இங்கு செயல்படுத்தப்படவில்லை.

அதனால், சானிடரி நாப்கின்களை வழங்குவதற்குப் பதில் பள்ளிகளில் கழிவறைகள் கட்டித் தரலாம் என்று கண்ணன் யோசனை கூறினார். அதையடுத்து, 42,000 டாலர் (சுமார் ரூ.30,44,160) செலவில் 10 மகளிர் பள்ளிகளில் கழிவறைகள் கட்டித் தருவது என்று தீர்மானிக்கப்பட்டது என்று மாவட்ட முன்னாள் ஆளுநர் ஷாஜு ஜான் கூறினார். தற்போது அங்கு கழிவறைகளுடன் கைகழுவுவதற்கான வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளன.

பின்னர், கைகழுவுவதன் அவசியத்தை வலியுறுத்தி நடத்தப்பட்ட குழந்தைகளின் இசை, கலை நிகழ்ச்சியில் பாரி ரஸ்ஸினும் எஸ்தரும் பங்கேற்றனர். சண்டீகரில் ரோட்டரி அமைப்பு நடத்தும் ரத்த தான வங்கியையும் அவர்கள் பார்வையிட்டனர்.

சண்டீகர் ரோட்டரி சங்கத்தின் தலைவராக கோயல் 2000-01ம் ஆண்டில் பொறுப்பேற்றபோது, ரத்த தான வங்கி சங்கத்துடன் (Blood Bank Society) இணைந்து உருவான ரத்த தான வங்கியும் ரோட்டரி ரத்த தான வங்கி சமுதாய வள மையமும் (Rotary Blood Bank Society Resource Centre) அமைக்கப்பட்டதாக கூறினார். இதற்கு மக்கள் நலம், பசி, மனித நேயம் (Health, Hunger and Humanity) ஆகியவற்றைக் குறிக்கும் '3 எச் மானியம்' (3H Grant) எனப்படும் மானிய உதவி பெறப்பட்டது. இத்திட்டத்துக்கு மொத்த செலவு ரூ.3.5 கோடியாகும்.



*ரோட்டரி அமைதி சின்னம் முன் RI தலைவர் பாரி ரஸ்ஸின், எஸ்தர், PRIP ராஜேந்திர சாபூ, உஷா, DG ப்ரவீன் கோயல், அவர் மனைவி பாசு மற்றும் இதர PDGக்கள்.*

### நகரங்களுக்கு இடையிலான கூட்டம்

நகரகங்களின் ரோட்டரி அமைப்புகளுக்கு இடையிலான கூட்டத்தில் ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவர் பாரி ரஸ்ஸின் பங்கேற்றார். அதில் நகைச்சுவையாகவும் சுவைபடவும் பேசினார் அவர்.

1991ம் ஆண்டு ஜனவரி மாதம். அப்போது என் தலையில் நிறைய முடி இருந்தது. என் மனைவி பருவப் பெண்ணை (டீன் ஏஜ்) இருந்தாள். இப்போதும் அப்படித்தான்

தோற்றமளிக்கிறாள். அப்போதுதான் திருமணமாகி 2 மாதங்கள் ஆயின. நாங்கள் கலிபோர்னியாவில் சர்வதேச அசெம்பிளி கூட்டத்தில் பங்கேற்கச் சென்றோம். அதுவே தேனிலவைப் போல எங்களுக்கு அமைந்தது. அங்குதான் ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவராக அப்போது இருந்த ராஜா சாபூவையும் அவரது மனைவி உஷாவையும் சந்தித்தோம். ஒரு தலைவர் எப்படிச் சிறப்பாக இருக்க வேண்டும் என்பதை அவரிடம்தான் கற்றுக் கொண்டேன். சாபூ தம்பதியைப் போல் நான் ஏதாவது நல்லது செய்திருந்தால், அதுவே பெரிய வெற்றி என்று உணர்வேன். எனக்கு வழிகாட்டியாகவும் தலைவராகவும் இருந்ததற்காக ராஜா சாபூவுக்கு நன்றி என்று குறிப்பிட்டார்.

முன்னதாக மாவட்ட ஆளுநர் கோயல் வீடியோ காட்சியைப் போட்டுக் காட்டினார். அதில், பல்வேறு திட்டங்கள் விரிவாகக் குறிப்பிடப்பட்டன. ஆப்பிரிக்காவில் மருத்துவ சேவை இயக்கத்தை நடத்தியது, மகிழ்ச்சிப் பள்ளிகளை அமைப்பதற்காக அனைத்து ஹிமாசலப் பிரதேச ரோட்டரி சங்கத்தினரும் ஹிமாசலப் பிரதேச அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டது, நலிவுற்றோருக்கு சத்தான, ஆரோக்கியமான உணவை ரூ.10 என்று மிக மலிவாக அளித்தது, கண்தான முகாம், வெயிலில் வாடும் முதியோருக்கு ரோட்டரி சின்னம் பொறித்த குடைகளை வழங்கியது, டேராடூன் ரோட்டரி சங்கம் 12 இண்டராக்ட் சங்கங்களை உருவாக்கியது, முழுக்க முழுக்க பார்வையற்றோரை உறுப்பினர்களாகக் கொண்ட ஒரு ரோட்டராக்ட் சங்கத்தை அம்பாலா தொழில்நகர ரோட்டரி சங்கம் உருவாக்கியது எனப் பல திட்டங்கள் அந்த வீடியோ காட்சியில் இடம்பெற்றுள்ளன.

அவற்றைக் கண்டு வியப்படைந்த ரஸ்ஸின், இத்திட்டங்களை எல்லாம் ஜூலை 1ம் தேதிக்கு முன்பு தொடங்கிவிட்டீர்களா?‘ என்று கேட்டேன். அதற்கு கோயல், ‘இல்லை, இவை எல்லாமே ஜூலை 1ம் தேதிக்குப் பிறகுதான் தொடங்கப்பட்டன’ என்று பதிலளித்தார். உடனே நீங்கள் (கோயல்) வியக்கத்தக்க பணியை ஆற்றி வருகிறீர்கள். இத்திட்டங்கள் குறித்து நீங்கள் பெருமிதப்பட வேண்டும் என்று ரஸ்ஸின் பெரிதும் பாராட்டினார்.

அதே சமயம் ரோட்டரி சங்கம் பெரிய திட்டங்களையும் மறந்துவிடக் கூடாது என்றும் அவர் நினைவூட்டினார். அத்தகைய திட்டங்களில் ஒன்றான இளம்பிள்ளை வாதத்தை (போலியோ) ஒழிப்பைக் குறிப்பிட்டார். ஒரு காலத்தில் போலியோவால் 3,50,000 பேர் பாதிக்கப்பட்டனர். ரோட்டரி முயற்சியால் அது படிப்படியாகக் குறைந்து தற்போது உலக அளவில் 18 குழந்தைகள்தான் போலியோ பாதிப்புக்கு ஆளாகியுள்ளது தெரியவந்துள்ளது. இருந்தாலும் போலியோ முற்றிலுமாக ஒழியவில்லை என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். இதில், குழந்தைகளுக்கு அளித்த உறுதிமொழியை நினைவில் கொள்ள வேண்டும் என்று கூறினார் ரஸ்ஸின்.

*எந்த வங்கியாவது இதைப் போல் நிதியை அளித்து உதவ முடியுமா? தி ரோட்டரி ஃபவுண்டேஷன்தான் ஆயிரம் டாலரை 75 ஆயிரம் டாலராக அளித்து உதவியது. அதில் ஒரு ஜீப் பெறப்பட்டது.*

**RI தலைவர் பாரி ரஸ்ஸின்**




*மணிமஜ்ரா அரசு பள்ளியில் RI தலைவர் பாரி ரஸ்ஸின், எஸ்தர், மற்றும் DG கோயலுடன்.*




RI தலைவர் பாரி ரஸ்ஸின், சாபூ கோயல் மற்றும் பல ரோட்டரியினர் சாக்கேத்ரி காலனியில் மருத்துவ முகாமில்.

### ஒரு நிலைமாற்றத் திட்டம்

ரோட்டரி அமைப்பினர் தங்களது பணி குறித்தும் பலரது வாழ்க்கையைத் தொட்டு, அதை மாற்றி வருவதற்காகப் பெருமைப்பட வேண்டும் என்று கூறிய பாரி ரஸ்ஸின், ஹைதி நாட்டில் ஏற்பட்ட நில நடுக்கத் திற்குப் பின், 60 நாடுகளின் ஆதரவோடு மொத்தம் 65 லட்சம் டாலர் மதிப்பில் 105 திட்டங்களைச் செயல்படுத்தினோம். அதுதான் ரோட்டரி செய்யக் கூடியது என்றும் கூறினார்.

அதே கால கட்டத்தில் தாய் சேய் நலத்திட்டம் மேற் கொள்ளப்பட்டது. அப்போது தாதிப் பணிகளில் இருந்தவர்கள் கிராமப்புறங்களில் சரியான போக்குவரத்து இல்லாமல் தாய்மார்களுக்குப் போதிய உதவி செய்ய இயலவில்லை என்று கூறினர். அதையடுத்து உள்ளூர் ரோட்டரி சங்கம் 1000 டாலர் உதவி செய்யும்படி கேட்டுக் கொண்டோம். ஹைதி நாட்டில் உள்ள ரோட்டரி சங்கங்களிடம் போதிய நிதி இல்லை. இருந்தாலும் இதன் முக்கியத்துவம் கருதி அவர்கள் நிதி அளித்தனர். அதற்கு இணையான தொகையை இதர சங்கங்களும் அளித்தன. அதைப் போல் 54 ரோட்டரி மாவட்டங்கள் முன் வந்தன. இப்படி 75,000 டாலர் திரட்டப்பட்டது. அந்தத் தொகைக்கு இணையாக உலகளாவிய மானியம் பெறப்பட்டது. எந்த வங்கியாவது இதைப் போல் நிதியை அளித்து உதவ முடியுமா?



தி ரோட்டரி ஃபவுண்டேஷன்தான் ஆயிரம் டாலரை 75 ஆயிரம் டாலராக அளித்து உதவியது. அதில் ஒரு ஜீப் பெறப்பட்டது.

அந்த ஜீப் ரோட்டரி சக்கர சின்னத்தை இளஞ்சிவப்பு நிறத்தில் பொறித்து தாய்-சேய் நலப் பணிக்குப் பயன்படுத்தப்பட்டது. தாதிகள் அதில் பயணம் செய்து பணிகளை உரிய காலத்தில் நிறைவேற்ற முடிந்தது.

அதன் பிறகு, ஒரு முறை ஹைதியில் அப்பணிகளை ஆய்வு செய்யச் சென்றோம். அப்போது அங்கு சந்தித்த தாதிகள், 'மகப்பேறு சமயத்தில் உரிய நேரத்தில் தாய்மார்களை எடுத்துச் செல்ல வாகன வசதி இருந்ததால், உயிரிழப்பு 50 சதவீதம் குறைந்து விட்டது. ரோட்டரி சங்கம் அளித்த ஜீப் மூலம் அதைச் செய்ய முடிந்தது' என்று கூறினர் என்றார் ரஸ்ஸின்.

இந்திய ரோட்டரி அமைப்புகள் மேற்கொண்டு சிறப்பாகச் செய்து வரும் பல்வேறு சமுதாய நலப் பணிகளுக்காக பாரி ரஸ்ஸின் பாராட்டுகளைத் தெரிவித்தார்.

இந்திய ரோட்டரியினர் உறுப்பினர் சேர்க்கையில் அதி வேகமாகச் செயல்படுகிறீர்கள். ஃபவுண்டேஷனுக்கு நன்கொடை திரட்டித் தருவதிலும் வேகமாகச்




*ரோட்டரி ரத்த வங்கியில் RI தலைவர் பாரி ரஸ்ஸினுடன் RI முன்னாள் தலைவர் ராஜேந்திர சாபூ.*

செயல்படுகிறீர்கள். அதில் விரைவில் முதலிடத்தை நீங்கள் எட்டுவீர்கள் என்று கருதுகிறேன். நீங்கள் வலுவான ரோட்டரி இயக்கமாக விளங்குகிறீர்கள் என்று புகழ்ந்தார்.

அதே சமயம் சில பலவீனங்களும் உள்ளன. அதையும் நாம் நமக்குள்ளே கூர்ந்து கவனிக்க வேண்டும். இதை எப்படி மாற்றுவது என்றும் இளைஞர்களை ஈடுபடுத்த என்னவெல்லாம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ள வேண்டும். சமூகத்தின் அனைத்துப் பிரிவினருக்குமான அமைப்பாக எப்படி மாற்றுவது? இன்றைய உலகில் நமது ரோட்டரி அமைப்புகள் அனைத்துப் பிரிவினருக்கும் உகந்த இயக்கமாக இருக்கின்றனவா என்று கேட்டுக் கொள்ள வேண்டும்.

### ஒப்பற்ற தம்பதி

ரோட்டரி இன்டர்நேஷனல் முன்னாள் தலைவர் ராஜேந்திர சாபூ பேசுகையில், நம் மாவட்டத்திற்கு மிகச் சிறந்த தம்பதியாக நான் அழைக்கும் பாரி ரஸ்ஸினும் எஸ்தரும் வந்திருப்பது நமக்குப் பெரிய பெருமை தருகிறது. காரணம், அவர்கள்தான் ரோட்டரியில் நேரடியாக களத்தில் இறங்குபவர்கள். அவர்கள்தான் ஹைதி நாட்டில் புயலும் சூறாவளியும் தாக்கியபோது, வரிந்து கட்டிக் கொண்டு களத்தில் இறங்கி வேலை செய்தவர்கள். இயற்கைச் சீற்றத்திலிருந்து அந்த மக்களைக் காப்பாற்றியதுடன், அதற்குப் பின் நிவாரணப் பணிகளிலும் தொடர்ந்து ஈடுபட்டனர் என்றார்.

நிகழ்ச்சியில் பாரி ரஸ்ஸின் கோட்பாடுகளை அழகாகச் சித்திரிக்கும் அலங்கரிக்கப்பட்ட திரைச்சீலை அத்தம்பதிக்கு நினைவுப் பரிசாக வழங்கப்பட்டது. மாவட்ட ஆளுநர் கோயல் புதிதாக அமைக்கப்பட்ட அனைத்து மகளிருக்கான சஹரன்பூர் வேவ்ஸ் ரோட்டரி சங்கத்தை அறிமுகப்படுத்தினார்.

### ரோட்டரி நெடும் பயணம்

RI தலைவர் ரஸ்ஸின் சண்டீகரில் ரோட்டராக்ட் சங்கக் கூட்டத்தில் பங்கேற்றார். ரோட்டராக்டர்கள் நூறு சதவீதம் ரோட்டேரியன்களாக வளர்ச்சி பெற வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

இதுபோல் எல்லா இடங்களிலும் நடைபெற்றால், உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைவதற்குக் கவலைப்பட வேண்டாம். ரோட்டராக்ட் சங்கங்கள் தொடர்ந்து ரோட்டரி சங்கங்களுக்கு உரிய பங்களிப்பு செலுத்திக் கொண்டிருக்கும். ரோட்டராக்ட், இன்டராக்ட் அமைப்பினர்களின் கூட்டங்களில் பேசும் போதெல்லாம் அவர்கள் ரோட்டரியின் பயணத்துக்கான பாதை என்று குறிப்பிடுவேன். பள்ளிப் படிப்பின்போது இன்டராக்டர்கள் படிப்பை முடித்து பல்கலைக்கழகப் படிப்பில் சேரும்போது ரோட்டராக்ட் அமைப்பில் இணைந்து பணியாற்ற லாம். அதையும் நிறைவு செய்த பின் ரோட்டரி சங்கங்களில் இணைந்து சேவை புரியலாம். அவர்கள் தங்களது வாழ்நாள் முழுவதும் ரோட்டரி பயணத்தில் இருக்கலாம் என்றார்.

புகைப்படங்கள்: ரஷீதா பகத்
வடிவமைப்பு: S கிருஷ்ணமூர்த்தி



# ரோட்டரிக்கு நம் நிரந்தர அர்ப்பணிப்பு

டிசம்பர் மாதம் வந்துவிட்டால், அடுத்த ஆண்டில் செயல்படுத்துவதற்காகப் புது உறுதிகளை ஏற்போம். நடந்து முடியும் ஆண்டின் நிகழ்வுகளை அசைபோடுவோம். இதெல்லாம் முடியாது என்று நினைத்த காரியங்களைச் செய்து முடித்திருப்போம். அதை நினைத்துப் பார்த்து நாமே வியப்படைவோம். புத்தாண்டில் சிறந்த சாதனைகளை செய்வது குறித்து யோசிக்கத் தொடங்குவோம்.

அந்த நேரத்தில்தான் முக்கியம் என்று சிலவற்றை நினைப்போம், அதிலும் குடும்பத்தை முக்கியமாகக் கருதுவோம். நம் மீது பாசம் பொழிந்தவர்களிடமும் நாம் பாசம் செலுத்தியவர்களிடமும் நன்றியோடு இருப்போம்.

ரோட்டரியினரைப் பொறுத்தவரையில், உலகின் பெரும்பாலான மக்கள் நமது குடும்பத்தில் இடம் பெறுவர். காரணம், குடும்பம் என்பது நமது நெருங்கிய உறவினர்கள் மட்டுமல்ல. ரோட்டரி செயல்பாட்டினால், நாம் உருவாக்கிக் கொண்ட ஏராளமான நண்பர்களும்தான். நாம் ஒவ்வொருவருமே குளத்தில் எறிந்த கல்லைப் போலத்தான். ஏராளமான சலனத்தை ஏற்படுத்திக் கொண்டே இருப்போம். குளத்தின் சலனம் எப்படி ஒன்றோடு ஒன்று மோதி தாக்கம் ஏற்படுத்துகிறதோ அதைப் போல் நமது செயலால் பல நல்ல விளைவுகளும் ஏற்படுகின்றன.

நாம் அனைவருக்கும் முக்கியமான (ரோட்டரி) அமைப்புகளைப் பற்றி நினைக்கிறோம். அவை நம் அனைவரது பரந்த தொண்டுள்ளத்தால் இயங்குகின்றன. நாம் நேரம், திறமை, உழைப்பு எல்லாம் அர்ப்பணித்து வரிந்து கட்டிக் கொண்டு அதற்காகப் பாடுபடுகிறோம். அதனால், அது பெரிய குடும்பமாக விரிவடைகிறது.

நமது அர்ப்பணிப்பினாலும் ரோட்டரி ஃபவுண்டேஷனின் ஆதரவாலும் நமது குடும்பமும் வளர்கிறது. அதனால், சமூகத்தில் ஏற்படும் தாக்கமும் அதிகரிக்கிறது.

நாம் எல்லோரும் இணைந்து செயல்படும்போது நமக்குள் பிணைப்பு ஏற்படுகிறது. மாற்றத்தை நிகழ்த்த அது உதவுகிறது. நாம் எல்லோரும் இணைந்து, ஒரு குறிக்கோளுக்காக அர்ப்பணிப்போடு செயல்பட்டால் சாதிப்பதற்கு எல்லையே இருக்காது.

எனவே, இந்த விசேஷமான தருணத்தில், உங்கள் வாழ்விலும் குடும்பத்திலும் கவனம் செலுத்தும்போது, ரோட்டரியின் பாரம்பரியத்தைப் பற்றியும் கருத்தில் கொள்ளுங்கள். உங்களது இடையறாத அர்ப்பணிப்பைச் செலுத்துவதற்கு இதுதான் சரியான நேரம். அப்போதுதான் நமது ஃபவுண்டேஷனின் முக்கியப் பணிகள் தொடர்ந்து நீடிக்கும்.



ரான் D பர்டன், ஃபவுண்டேஷன்
அறக்கட்டளைத் தலைவர்

ஹம்பர்க் மாநாடு...

# சைக்கிள் ஓட்டலாம் வாங்க!

ஸ்டீஃபன் மேஸெர்



ஜெர்மனியின் ஹம்பர்க் நகரம் சைக்கிளுக்கு பேர் போனது. 2019ம் ஆண்டு ஜூன் 1-ம் தேதி முதல் 5-ம் தேதி வரை நடைபெறும் ரோட்டரி சர்வதேச மாநாட்டில் பங்கேற்க வருவோர் விதவிதமான சைக்கிளை வாடகைக்கு எடுத்து சுற்றிப் பார்த்து மகிழலாம்.

ஸ்டட்ராட் - StadtRAD (stadtrad.hamburg.de) என்ற இணைய தளத்திலுருந்து சைக்கிளோ, மோட்டார் சைக்கிளோ எடுத்துக் கொண்டு சுற்றி வரலாம் (அ) ஹம்பர்க் நகரில் இதைப் போல 120 இடங்கள் உள்ளன. சைக்கிள் ஓட்டிச் செல்வதற்கு முதல் 30 நிமிடத்துக்கு கட்டணம் இல்லை. அதன் பின் ஒவ்வொரு நிமிடத்துக்கும் 8 யூரோ சென்ட் அல்லது நாளொன்றுக்கு 12 யூரோ செலுத்த வேண்டும்.

கிரெடிட் கார்டு விவரத்துடன் இணைய தளத்தில் முன்கூட்டியே பதிவு செய்துகொள்ள வேண்டும். அத்துடன் ஐரோப்பாவில் இயங்கும் கைபேசி வைத்திருக்க வேண்டும்.

சைக்கிள் நகரைச் சுற்றிப் பார்க்கவும் சில புறநகர்ப் பகுதிகளில் செல்லவும் உதவுகின்றன. அதற்கான இணையதளம்: hhcitycycles.de/en (அ) hamburg-radtour.de. நீண்ட தூரப்பயணம் செல்லவேண்டுமானால், komoot.com என்ற செயலியை (app) பதவிறக்கிக் கொண்டு, பயணத்தைத் தேர்ந்தெடுக்கலாம்.

ஹம்பர்க் நகர சைக்கிளோட்டிகள் வேகமானவர்கள் என்பதையும் அங்குள்ளவர்களுக்கு உள்ள உரிமை என்பதையும் நினைவில் கொண்டும். கவனமாக நடைபாதையிலும் நடக்க வேண்டும். உங்கள் பின்னால் சைக்கிள் ஓட்டுபவர் ஒரு முறை மணியடித்தால், நீங்கள் தவறான பாதையில் செல்கிறீர்கள் என்று அர்த்தம். இதையெல்லாம் அறிந்துகொண்டு தான் சைக்கிள் ஓட்டி மகிழ வேண்டும்!

**2019ம் ஆண்டு (ஜூன் 1–5)**
**ரோட்டரி மாநாட்டுக்குப் பதிவு செய்து கொள்ள**
**இணையதளம் :** www.riconvention.org

*©The Rotarian*

# மன அழுத்தத்தைத் தீர்ப்பது ரோட்டரி: சுஷீல் குப்தா

ரஷீதா பகத்

ரோட்டரி பணி எனக்கு மன அழுத்தத்தைத் தீர்க்கும் கருவியைப் போன்றது என்று RI அமைப்பின் தலைவராக நியமனம் ஆகியுள்ள சுஷில் குப்தா குறிப்பிட்டார். RI அமைப்பின் 2020-21ம் ஆண்டுக்கான தலைவராக அவர் நியமிக்கப்பட்டுள்ளார். அதையொட்டி அவருக்குப் பாராட்டு நிகழ்ச்சி அண்மையில் நடைபெற்றது.

தனக்கு அளிக்கப்பட்ட பாராட்டுரைகளுக்கு அவர் பதிலளித்துப் பேசியபோது, RI இயக்குநராக இருந்தபோது PRID சேகர் மேத்தா உள்ளிட்ட பலருடன் சந்திப்பு நடைபெற்றது. இங்கே என்னைப் பற்றி ஏராளமாகப் பாராட்டியுள்ளனர். எனது இறுதி இலக்கு எங்கே என்று எண்ணிப்பார்த்து வியக்கிறேன் என்றார். இந்தப் பாராட்டு நிகழ்ச்சிக்கு ரோட்டரியின் 3250, 3261, 3262, 3291 மற்றும் 3292 ஆகிய மாவட்டங்கள் ஏற்பாடு செய்திருந்தன.

சாகச நடைபயணம், மலையேறுவது ஆகியவற்றில் ஆர்வம் உள்ளவர் சுஷில் குப்தா. மலையேறும்போது, மலையின் உச்சி சிகரத்தையே நோக்கி இருக்க வேண்டும். அதைப் போல் ரோட்டரி இன்டர்நேஷனல் அமைப்பிலும் எனது உச்சத்தை எட்ட வேண்டும் என்ற உறுதியோடு, சிகரத்தை நோக்கியபடியே இயங்கிக் கொண்டிருப்பேன். ஆனால், அது அவ்வளவு எளிதான காரியம் அல்ல. அதுவும் RI அமைப்பின் முன்னாள் தலைவர்கள் ராஜேந்திர சாபூ, கல்யாண் பானர்ஜி ஆகியோரின் அடிகளைப் பின்பற்றி முன்னேறுவது பயங்கரமான சவால் என்பதையும் அறிவேன். கடவுளின் கருணையாலும் ஆசான்களின் ஆசிகளாலும் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்வேன் என்று நிகழ்ச்சியில் குறிப்பிட்டார்.

ரோட்டரியில் இணைந்து 41வது ஆண்டு. இப்பயணத்தில் எத்தகைய அன்பு மழையில் நனைந்திருக்கிறேன் என்று சொல்ல முடியாது. சமூகத்துக்குப் பணியாற்றுவதற்கு எவ்வளவோ வாய்ப்புகள் கிடைத்தன.

இந்த நிகழ்ச்சியில் சேகர் மேத்தாவுக்கு நன்றி கூறுகிறேன். பர்ஷா ப்ரமானிக் என்ற இந்த ஆறு வயது சிறுமியை அழைத்து வந்துள்ளதன் மூலம் என் நெஞ்சைத் தொட்டுவிட்டீர்கள் என்று நெகிழ்வுடன் கூறினார். "வாழ்க்கையே வெகுமதி" என்ற ரோட்டரியின் திட்டத்தின் (Gift of Life programme) கீழ் ஆறு குழந்தைகளுக்கு இதய அறுவை சிகிச்சை நடத்தப்பட்டதை சுஷில் குப்தா குறிப்பிட்டார். அதையடுத்து பர்ஷா குப்தாவுக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டார்.



*PRIP கல்யாண் பானர்ஜி, தனது நண்பர் சுஷில் குப்தாவை RI தலைவராக தேர்தேடுக்கப்பட்டதற்கு கட்டியணைத்து தனது வாழ்த்தினை தெரிவிக்கிறார்.*

அதையடுத்து, ரோட்டரி சங்கம் எப்படியெல்லாம் சமூகப் பணியாற்றுகிறது என்பதை அவர் விவரித்தார். 2006ம் ஆண்டு டென்மார்க் நாட்டின் தலைநகர் கோபன்ஹேகன் நகரில் நடைபெற்ற மாநாட்டில் சுஷில் குப்தா பங்கேற்றார்.

அந்த மாநாட்டில் கலந்து கொண்டபோது, எனக்கு வந்த தொலைபேசி அழைப்பில், உதய்பூரில் இதய நோய் பரிசோதனை முகாம் நடத்தப்பட்டது என்றும் அதில் 20 பேருக்கு இதய நோய் பாதிப்பு இருப்பதும் அவர்களில் 12 சிறுவர்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. இதய சிகிச்சை குறித்த முகாம் வெற்றிகரமாக நிறைவடைந்தது என்றார். அதெப்படி நிறைவடைய முடியும்? அதுதான் தொடக்கம் என்றேன். காரணம், அதுவரை தங்களுக்கு என்ன நோய் இருக்கிறது என்று தெரியாமல் இருந்தனர். இந்த முகாமை அடுத்து அவர்கள் தங்களுக்கு இதய நோய் இருப்பதை அறிந்து கொண்டுள்ளனர். அவர்களுக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட வேண்டுமானால் அதற்குப் பெரிய தொகை வேண்டும். எதுவும் நிறைவேறாமல் போனால், அவர்கள் தினந்தோறும் இறந்து கொண்டிருப்பார்கள் என்று ரோட்டரி சங்கத்தினரிடம் கூறினேன். அதையடுத்து, Gift of Life programme கீழ் 3000 பேருக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது. அதில் அவர்கள் பூரண நலம் பெற்றுள்ளனர். ரோட்டரி அமைப்பு இப்படித்தான் செயல்பட வேண்டும் என்றார் சுஷில் குப்தா.

தனக்கு அளிக்கப்பட்ட கவுரவத்தை பாடுபட்டு உழைத்த, தன்னை இந்த நிலைக்கு உயர்த்திய அனைத்து ரோட்டரியினருக்கும் சமர்ப்பிப்பதாக அவர் குறிப்பிட்டார்.

நான் ஹோட்டல் தொழில் குறித்து எதுவுமே தெரியாத நிலையில் தொழிலில் ஈடுபட ஆரம்பித்தேன். அதற்கு முன் வரை வியாபாரமே நடத்தியது கிடையாது. ஆனால், அதில் பிறகு முன்னேறினேன். எதிலும் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் தேவை. தன்னம்பிக்கை, தைரியத்துடன் உழைத்தால் பலன் நிச்சயம் கிடைக்கும். பலன் தானாகவே கிடைத்துவிடும்.

எனது பெற்றோரிடமிருந்து நல்ல நெறிகளைக் கற்றுக் கொண்டேன். கடைப்பிடித்து வருகிறேன். என் மனைவி வினிதா உறுதுணையாக இருந்து வருகிறாள். அவள் அமைதியானவள், எப்போதாவது அதிகமாக வேலை செய்கிறீர்கள் என்பாள். ஆனால், முழு ஆதரவு அளித்து வருகிறாள் என்றார் சுஷில் குப்தா.

நிகழ்ச்சியில் RI முன்னாள் தலைவர் கல்யாண் பானர்ஜி பேசியதாவது:

ரோட்டரி இன்டர்நேஷனல் அமைப்புக்குத் தலைவராக இதுவரை இந்தியாவைச் சேர்ந்த நான்கு பேர் பொறுப்பேற்றுள்ளனர். அதை நினைத்துப் பார்க்கிறேன். RI அமைப்பின் முதல் தலைவராக நிதிஷ் லஹரி 1962-63ம் ஆண்டில் இருந்தார். அவர் கொல்கத்தாவைச் சேர்ந்தவர். அப்போதெல்லாம் ரோட்டரி மாநாட்டில்தான் RI தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். அதைப் போல் 1960-61 ஆம் ஆண்டில் நடைபெற்ற மாநாட்டில் மூத்த ரோட்டரியினர் அவரை அணுகி, நிதீஷ். நீங்கள் அடுத்த RI தலைவராக இருக்கவேண்டும் என்று விரும்புகிறோம் என்று கூறினர். அவ்வளவுதான். அவர் தலைவராகிவிட்டார். அதையடுத்து நிதீஷ் கூறிய ஒரு பொன்மொழி இன்றும் நினைவில் உள்ளது. அது உன்னுள் இருக்கும் பொறியைத் தூண்டிவிடு (Kindle the spark within) என்பது மிகவும் பிரசித்தி பெற்றது.

அவருக்குப் பிறகு நீண்ட இடைவெளிக்குப் பின் முப்பது ஆண்டு கழித்து, 1991-92ம் ஆண்டு ராஜா




*PRIP கல்யாண் பனர்ஜி, வினிதாவிற்கு சால்வை வழங்கிட, RIDEs பரத் பாண்டியா, கமல் சங்வி RIPN சுசீல் குப்தா மற்றும் சோனல் அவர்களும் உடன் உள்ளனர்.*




*PRID சேகர் மேத்தா, RIDEs பரத் பாண்டியா, கமல் சங்வி, RIPN சுஷில் குப்தா, PRIP கல்யான் பானர்ஜி, சோனல் முன்னிலையில் வினிதா அவர்கள் Gift of Life திட்டத்தின் பயனாளி பாட்ஷா பராமனிக்குடன் கலந்துரையாடல்.*

என்று எல்லோராலும் அன்போடு அழைக்கப்படும் ராஜேந்திர சாபூ இரண்டாவது இந்தியாவைச் சேர்ந்த தலைவர் ஆவார். அவரும் கோல்கத்தாவைச் சேர்ந்தவர்தான். உங்களைக் கடந்து பாருங்கள் (Look beyond Yourself) என்பது அவரது மிகப் பெரிய வாசகம் ஆகும். அது பெரிதாகப் பேசப்படுகிறது. அவரது தலைமைப் பண்பு பெரிதாகப் போற்றப்படுகிறது. 20 ஆண்டுகள் கழித்து அவரை அந்தத் தலைவரையே பின்பற்றினேன். நானும் கொல்கத்தாவைச் சேர்ந்தவன்தான். அடுத்தடுத்து இந்தியாவைச் சேர்ந்த மூன்று தலைவர்களும் கொல்கத்தாவிலிருந்து வந்தவர்கள் என்பதால், எல்லோரும் “RI தலைவராக வேண்டுமா உங்களுக்கும் கொல்கத்தாவுக்கும் தொடர்பு இருந்தாக வேண்டும்” என்று சொல்ல ஆரம்பித்துவிட்டனர்.

ரோட்டரி அமைப்பில், எதிர்பாராதவையெல்லாம் நடப்பதுண்டு. அதனால், இந்த முறை பஞ்சாபைச் சேர்ந்த சுஷில் குப்தா தலைவராகியிருக்கிறார். ஆனால், ஒரு விஷயத்தைச் சொல்லியாக வேண்டும், அவரது மனைவி வினிதா கொல்கத்தாவில் பிறந்தவர். சுஷில் குப்தா எனக்குப் பின்னர் 8 ஆண்டுகள் கழித்து RI தலைவராகப் பொறுப்பேற்கிறார். இதில் ஒரு விஷயத்தைக் கவனிக்க வேண்டும். RI அமைப்பின் தலைவராக முதல் இந்தியர் வந்த பின் 30 ஆண்டு கழித்து இரண்டாவது இந்தியர் தலைவர் ஆனார். அதற்குப் பின் 20 ஆண்டு கழித்து ஓர் இந்தியரும் அதற்குப் பிறகு 8 ஆண்டுகள் கழித்தும் வந்துள்ளனர். எனவே, தலைமைப் பொறுப்பை இந்தியர்கள் அடையும் வேகம் அதிகரித்து வருகிறது. அடுத்த இந்தியர் 5 அல்லது 6 ஆண்டுகளில் அந்தப் பதவியைப் பிடிக்கக் கூடும். அதில் கூட கொல்கத்தா தொடர்பு ஏதாவது இருக்கக் கூடும் என்ன இருந்தாலும் ரோட்டரி இந்தியாவில் 1919ம் ஆண்டில் தொடங்கப்பட்ட போது கொல்கத்தாவில் தான் தொடங்கியது என்பதைக் கவனிக்க வேண்டும்

பின்னர், குப்தாவைப் பற்றிக் குறிப்பிட்ட கல்யாண் பானர்ஜி, சுஷில் குப்தா மிகவும் வலுவான பின்னணியைக் கொண்டவர். இந்தியாவில் போலியோ ஒழிப்புத் திட்டத்துக்கு பிள்ளையார் சுழி போட்டவரே அவர்தான். அந்தப் பணியில் 1980ம் ஆண்டுகளிலும் 1990ம் ஆண்டுகளிலும் அவருடன் இணைந்து பணியாற்றியிருக்கிறேன். பல நாடுகளில் சுத்தமான பாதுகப்பான குடிநீர் கிடைப்பதற்கு ரோட்டரியின் பணிகளில் அவர் ஈடுபட்டுள்ளார்.

சுஷில் குப்தா, RAGS எனப்படும் ரோட்டரி பணிக் குழுக்கள் (Rotary Action Groups) உருவாக்கப்படுவதில் முக்கியப் பங்கினை வகித்தார். அதைப் போல் நிறுவனங்களின் கார்ப்பரேட் சமூகப் பொறுப்பு நிதியைப் (CSR) பெறுவதோ, தி ரோட்டரி ஃபவுண்டேஷன் (TRF) உதவியைப் பெறுவதோ அதிலும் குப்தாவின் பங்கு அளப்பரியது.

ரோட்டரியின் சிறு சிறு முயற்சி களில் மட்டுமின்றி RI மிகப் பெரிய பணிகளிலும் ஈடுபட ஆர்வமாக இருப்பதாக சுஷில் குப்தாவே கூறியிருக்கிறார்.

RI அமைப்பின் தலைவரை நியமிப்பதற்கான நியமனக் குழு வித்தியாசமானது. உலகம் முழுவதும் உள்ள மொத்த் 34 மண்டல ரோட்டரி அமைப்புகளிலிருந்து 17 மண்டலத்தினரைத் தேர்ந்தெடுத்து அக்குழு அமைக்கப்பட்டது. அவர்கள்

முன்னாள் இயக்குநர்கள், தலைவர்கள், ரோட்டரி அனுபவசாலிகள் ஆவர். RI தலைவர் பதவிக்கு சுஷில் குப்தாவுடன் ஐரோப்பியரும் அமெரிக்கரும் களத்தில் இருந்தனர்.

தலைவர் பதவிக்கான தேர்தல் முடிவு வரும் வரையில் சுஷிலுக்குத் தூக்கமேயில்லை. ஏகப்பட்ட தொலை பேசி அழைப்புகளில் பேசிக் கொண்டிருந்தார். இறுதியில், நியமனக் குழுவில் இடம்பெற்றிருந்த PRID சேகர் மேத்தா அவரை அழைத்து, சுஷில் குப்தா தேர்ந்தெடுக்கப்பட்டதை அவரிடம் தெரிவித்தார்.

RI அமைப்பின் நான்காவது தலைவர் சிறந்த தலைவர் என்பதில் எனக்கு நம்பிக்கை உள்ளது. அவரது ரோட்டரி இயக்கத்தின் மீது அவருக்குள்ள ஈடுபாடு ஈடற்றது. அவர் ஹோட்டல் தொழிலில் ஈடுபட்டுள்ள அவரும் அவரது மனைவி வினிதா ஆகியோரது விருந்தோம்பல் இணையற்றது. எப்போதும் புன்சிரிப்போடு இருப்பவர். அவரும் சிறந்த மனித நேயம் கொண்ட அவரது மனைவி வினிதாவும் இணைந்து எப்போதும் மகிழ்வோடு தடங்களைப் பதிக்கட்டும். சுஷில் குப்தாவின் தலைமைப் பணியின் வினிதா ரோட்டரியின் முதல் பெண்மணியாக துணைபுரிந்து செயல்படுவார். கொல்கத்தாவுடன் இணைந்திருப்பதற்காக அவருக்கு நன்றி கூறுகிறோம்.

சுஷில் குப்தா அவர்களே, ஏராளமான பணிகளும் சோதனைகளும் காத்திருக்கின்றன ஆகவே சுஷில், திட்டமிடுங்கள், செயல்படுங்கள், தலைமை வகியுங்கள். அப்போது எல்லாவற்றையும் வெல்வீர்கள், பிரகாசிப்பீர்கள், உங்களுடன் நாங்களும் இருப்போம் என்று கல்யாண் பானர்ஜி பேசினார்.

RI இயக்குநரும் நிகழ்ச்சியின் அமைப்பாளருமான சேகர் மேத்தா பேசுகையில், இந்த நிகழ்ச்சியில் எனது வழிகாட்டிகளான கல்யாண் பானர்ஜியும், சுஷில் குப்தா இருவரும் இருப்பது பெரிய மகிழ்ச்சியைத் தருகிறது. நான் ரோட்டரியில் ஆளுநராக வருவதற்கு முன்பே பானர்ஜியுடன் இணைந்து பணியாற்றியிருக்கிறேன். அப்போது பயிற்சிஅளிக்கும் தலைவராக எனது பெயரை குப்தாதான் பரிந்துரைத்தார். அதன்பின் ஒவ்வொரு கட்டத்திலும் என் பெயரைக் குறிப்பிட்டு வந்தார்.

இந்த நியமனக் குழுவில் நானும் PRID மனோஜ் தேசாயும் இடம் பெற்றோம். இருவரும் ரோட்டரியின் செயல் முறைக்கையேடு (Manual of Procedure) அறிவுறுத்தியபடி மிகச் சிறந்த நபரை நியமனம் செய்யும் பணியை மேற்கொண்டோம். சுஷில் குப்தாவை ஓர் இந்தியர் என்பதற்காகத் தேர்ந்தெடுக்கவில்லை. ரோட்டரி செயல்முறைக் கையேட்டின்படி தலைவர் பதவிக்குத் தகுந்தவர் என்பதால் தேர்ந்தெடுத்தோம். அவர் மிகுந்த அனுபவம் மிக்கவர். RI அமைப்பின் 20, 25 கமிட்டிகளில் பணியாற்றியவர். மற்றவர்களைக் குறைத்துச் சொல்ல முடியாது என்றாலும் அவரைப் போல் அனுபவம் மிக்கவர் இல்லை என்றார்.

RIDE பரத் பாண்டியா பேசுகையில், படிப்படியாகத் தலைமைப் பதவிக்கு வந்து, உறுதிப்பாடு, தன்னம்பிக்கை, கடும் உழைப்பு, விடாமுயற்சி ஆகியவற்றின் மூலம் தனது செல்வாக்கை நிலைநாட்டுபவர்கள் தான் வரலாற்றைப் படைத்துள்ளனர். சுஷில் குப்தா அத்தகையவர்களில் ஒருவர் என்று குறிப்பிட்டுப் பாராட்டினார். தனக்கும் சுஷில் குப்தாவுக்கும் இடையிலான 20 ஆண்டுகால நட்பை அவர் சுட்டிக் காட்டினார்.

பாண்டியா பேசியதாவது: எங்களது மாவட்ட மாநாட்டின்போது, குழு ஆய்வுப் பரிமாற்றத் திட்டம் (Group Study Exchange) குறித்து விளக்கம் நிகழ்த்திக் கொண்டிருந்தேன். அப்போது, மக்களிடையே ரோட்டரியின் புகழை உயர்த்துவதற்கான ஒருங்கிணைப்பாளர்களின் மண்டலக் கூட்டத்தில் (Regional Public Image Coordinators) குப்தாவை முதல் முறையாகச் சந்தித்தேன். எனது விளக்கத்தைப் பார்த்துவிட்டு, என்னைக் கைகுலுக்கி, நன்றாகச் செய்திருக்கிறீர்கள் என்று பாராட்டினார்.

அதன் பிறகு, RI இயக்குநர் ஆனார். நான் மாவட்ட ஆளநராக நியமிக்கப்பட்டேன். மாவட்ட ஆளுநராக இருந்தபோது நான் கவனத்தில் எடுத்துக் கொண்ட பல விஷயங்களில் தண்ணீர் சேமிப்பும் தண்ணீரைக் கையாளுதலும். அப்போது எனக்கிருந்த உந்து சக்திகளில் சுஷில் குப்தா ஒருவர் என்பது குறிப்பிடத் தக்கது. அவர்தான் அதில் நிறைய செய்திருக்கிறார்.

பின்னர் இருவரும் ஒரு குழுவில் பணியாற்றினோம். RI அமைப்பின் கமிட்டியில் அதுதான் முதல் முறையாக நான் பணியாற்றியது. ரோட்டரி கமிட்டியில் எப்படி செயல்படவேண்டும் என்பதற்காக என்னைக் கையைப் பிடித்து அவர் வழிகாட்டினார். குப்தாவின் மிகச் சிறந்த பண்புகளில் ஒன்று அமைப்பை நடத்தும் திறன். அதை அவரிடமிருந்து பல ஆண்டுகளாகப் பழகி கற்றுக் கொண்டேன். நான் பங்கேற்ற மும்பையிலோ, கொல்கத்தாவிலோ ரோட்டரி மாநாடுகள் நடத்துவதாகட்டும், தண்ணீர் குறித்த உச்சி மாநாடுகளாகட்டும், தலைமைகளுக்கான மாநாடுகளா கட்டும் அவர் மிகச் சிறந்த அமைப்புத் திறன்களை வெளிப்படுத்தியுள்ளார்.

### சுவாமி கடைசியில் வரவில்லை

*முன்னாள் மாவட்ட ஆளுநர் சஞ்சய் கேம்கா இந்த நிகழ்ச்சிக்கு குப்தாவின் குருநாதர் சுவாமி நிலஞ்சன் சரஸ்வதியை அழைத்து வருவதற்கு அரும்பாடுபட்டதாகக் குறிப்பிட்டார். குப்தாவுக்கு இன்ப அதிர்ச்சி தருவதற்குத் திட்டமிட்டோம். சுவாமிகளும் அதற்கு இசைந்தார். ஆனால், கடைசி நேரத்தில் அவர் உடல்நலமில்லாமல் இருப்பதாகத் தகவல் வந்தது என்றார்.*

*அதற்குப் பதிலளித்த சுஷில் குப்தா, ஒருவேளை சுவாமிகளை அழைத்து வந்திருந்தால், அடுத்த வாரம் கொண்டாடப்படும் தீபாவளியை இன்றே கொண்டாடியிருப்பேன் என்றார்.*

ஓர் அமைப்பில் வெற்றி என்பது திடீரென்று கிடைத்துவிடுவதில்லை என்றும் சிறந்ததை எட்டவேண்டும் என்ற உறுதி, புத்திசாலித்தனமான திட்டமிடல், முறையான செயலாக்கம் ஆகியவற்றால் மட்டுமே அதற்கான பலன் தரும் என்றும் திடமாக நம்பினார். தான் ஏற்றுக் கொள்ளும் எந்தப் பணியிலும் அதையே கடைப்பிடித்து வருகிறார். குப்தாவிடம் உறுதி, தன்னம்பிக்கை, திறமை ஆகிய மூன்றையும் காணலாம்.

எந்தப் பணியாக இருந்தாலும் அதில் முழுமையாக ஈடுபடுவார். தான் செய்யும் எந்தப் பணியிலும், அது வணிகமோ, பிராணிக் சிகிச்சை முறையோ, தண்ணீர் சேமிப்புத் திட்டமோ, ஹிமாலயன் அறக்கட்டளைப் பணியோ, ரோட்டரி சேவையோ எதுவாக இருந்தாலும் முழுத் திறமையைக் காட்டுவார்.

சூரியன் மிகப் பெரிய ஆற்றல் கொண்டது. அது உலகம் முழுவதும் வெளிச்சத்தைப் பரப்பி, பல கிலோ வாட் மின்சக்தி இருக்கிறது. ஆனால், தலையில் தொப்பியும் கறுப்புக் கண்ணாடியும் அணிந்து கொண்டுதான் எந்த பாதிப்பும் இல்லாமல் சூரியனை அனுபவிக்க முடியும்.

ஆனால், லேசர் அப்படி சக்திபடைத்ததல்ல. மிகக் குறைந்த கிலோவாட்ஸ் மின்சக்தியே கொண்டது. ஆனால், அந்த குவிக்கப்பட்ட செறிவான ஒளிக்கற்றையால் புற்றுநோயைக் குணப்படுத்தலாம், கண்ணாடியை வெட்டலாம். வைரத்தைச் செதுக்கலாம். காரணம், அதன் ஒருமுகப்படுத்துதல்தான்.

மனத்தை ஒருமுகப்படுத்தி, முழுக் கவனம் செலுத்துவதுதான் மிகப் பெரிய சக்தி தரும். அதைத்தான் தனது செயல்களின் மூலம் குப்தா அறிவுறுத்துகிறார்.

குப்தாவின் பிரியமான பண்புகளில் அக்கறையும் தாராளமனமும் குறிப்பிடத்தக்கவை. எனது மனைவி மாதவிக்கு ஒரு விபத்தில் தோள்பட்டை முறிந்தது. கடந்த ஏப்ரல் மாதம் இரு புதிய இயக்குநர்களுக்காக நடத்தப்பட்ட ஒரு பாராட்டு நிகழ்ச்சியில், மாதவியை சுஷில் குப்தா பார்த்தார். அப்போது அவர் தோள்பட்டை குறித்து அறிந்தார். பிராணிக் சிகிச்சை செய்யட்டுமா



*சோனல் சங்வியுடன் ராஷி மேத்தா.*

என்று குப்தா கேட்டார். அப்போது மாதவிக்கு அவகாசம் இல்லாமல் போய்விட்டது. பிறகு, கடந்த ஜூன் மாதம் கனடா நாட்டில் டொராண்டோ நகரில் நடைபெற்ற மாநாட்டில் மாதவிக்கு பிராணிக் சிகிச்சை செய்தார். மாதவியின் வலி குறைந்துவிட்டது. முன்புபோல் நடமாடுகிறார். இதில் குப்தா காட்டிய அக்கறைதான் மிக முக்கியம். குப்தாவுடன் இணைந்து பணியாற்றுவதற்கு நானும் கமலும் கொடுத்துவைத்தவர்கள். RI போர்டில் இயக்குநர்களாக நாங்கள் பணியாற்றும் காலத்தில் (2020-21) சுஷில் குப்தா RI தலைவராக இருக்கிறார்.

PRIP கல்யாண் பானர்ஜி இருந்தபோது, YP தாஸ், சேகர் மேத்தா ஆகியோர் இயக்குநர்களாக இருந்தனர். இப்படி மூன்று இந்தியர்கள் இருந்ததைச் சுட்டிக்காட்டிய மற்றவர்கள் “இந்திய மாஃபியா” என்று குறிப்பிட்டனர். அதற்கு 2011-12-ம் ஆண்டில் பதிலடி கொடுத்த கல்யாண் பானர்ஜி அது “இந்திய மாஃபியா” அல்ல, “இந்திய முப்படைக் கூட்டு” என்றார். 2020-21ம் ஆண்டில் அதைப் போல் பணியாற்றி, இந்திய தேசியக் கொடியை உயரதத்தில் பறக்கச் செய்வோம். நமது ரோட்டரி மண்டலங்களின் கொடியும் உயரே பறக்கும். இதைப் பெருமையுடன் முன்னெடுத்துச் செல்வோம் என்று பாண்டியா பேசினார்.

RIDE கமல் சங்வி நன்றி கூறினார். நான் மாணவனாக இருந்தபோது, தில்லியில் குப்தாவின் ஹயாத் ரீஜன்சி ஹோட்டலில் சாப்பிட வேண்டும் என்று தந்தையிடம் கூறினேன். அதற்கு அவர், “90 சதவீத மதிப்பெண் பெற்றால் அழைத்துச் செல்கிறேன்” என்றார். அதற்காகக் கடுமையாக உழைத்த நான் 85 சதவீதம்தான் பெற்றேன். இருந்தாலும் ஹயாத் ஹோட்டலில் உணவு அருந்தினேன்.

பின்னர், ரோட்டரியில் இணைந்த போது, எனக்கு சுஷில் குப்தாதான் ரோல் மாடல். அழகாக ஆடைகள் அணிவது உள்பட எல்லா வழிகளிலும் அவரைப் பின்பற்றினேன். பிறகு, ரோட்டரி மாவட்ட ஆளுநராகத் தேர்ந்தெடுக்கப் பட்டு, தில்லியில் பயிற்சிக் கருத்தரங்கில் (GETS) பங்கேற்றேன். அங்கே பயிற்சிக்குத் தலைமை வகித்தவர் அப்போது (2003-05) RI இயக்குநராக இருந்த சுஷில்குப்தா. ஒரு பள்ளியில் மாணவனைப் போல் சேர்ந்த எனக்கு அவர் அப்போது தலைமை ஆசிரியராகத் தெரிந்தார். பிறகு, நான் இப்போது கல்லூரி மாணவனைப் போல் ரோட்டரி இயக்குநராக இருக்கிறேன், எனக்கு விரிவுரையாளரைப் போல் சுஷில் குப்தா RI தலைவராகப் போகிறார் என்று சங்வி குறிப்பிட்டார்.

புகைப்படங்கள்: ரஷீதா பகத்

வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்

Rotary Institute 2018

# RI ரஸ்ஸினுடன் ரோட்டராக்ட் உறுப்பினர்கள் சந்திப்பு

அஷீமா அகர்வால்

ரோட்டரி மண்டல கூட்டத்தையடுத்து, மாவட்டம் D 3232 ஏற்பாடு செய்த நிகழ்ச்சியில் மாவட்ட ரோட்டரி பிரதிநிதிகள் (DRRs) RI தலைவர் பாரி ரஸ்ஸின், RID C பாஸ்கர் ஆகியோருடன் உரையாடினர். மாநாட்டுத் தலைவர் ISAK நாஸர், இன்டர்நேஷனல் ரோட்டராக்ட் மற்றும் இன்டராக்ட் கமிட்டி உறுப்பினர் கார்த்திக் கிட்டு, மாவட்ட ரோட்டரி பிரதிநிதி கிரிஷ் வல்சாலா, மாவட்ட ரோட்டராக்ட் கமிட்டி தலைவர் (DRCC) சாலமன் விக்டர், ராம்குமார் ராஜு ஆகியோர் கலந்துகொண்டனர். தெற்காசிய நாடுகளைச் சேர்ந்த 22 மாவட்டங்களிலிருந்து 40 பேர் பங்கேற்றனர்.

அனைவரும் உற்சாகமாக உரை யாடியதை பாரி ரஸ்ஸின் பாராட்டினார். ரோட்டராக்ட் திட்டங்கள் குறித்த தனது இலக்கினை அவர் எடுத்துரைத்தார். சான்டியாகோ நகரில் ஜனவரியில் நடைபெறும் RI பேரவைக் கூட்டத்திலும் (RI Assembly) ஜெர்மனி ஹாம்பர்க் ரோட்டரி சர்வதேச மாநாட்டிலும் பங்கேற்க தேர்ந்தெடுக்கப்பட்டோரை ரஸ்ஸின் வாழ்த்தினார்.

ரோட்டராக்ட் இளைஞர்கள்தான் எதிர்கால ரோட்டரியினராக வேண்டும். ஆனால், 4 சதவீதம் பேர் தான் அப்படி வருகிறார்கள். அதனால், அவர்கள் ரோட்டரியில் இணைவதை ஊக்குவிக்கும் வகையில், உலகம் முழுவதும் 60 ரோட்டராக்டர்கள் ரோட்டரி பேரவையின் காலை கூட்டத்தில் பங்கேற்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றார்.

RID C பாஸ்கர் பேசுகையில், இந்தியாவில் ரோட்டராக்ட் பிரதிநிதிகள் இயக்கத்தை வலுவூட்ட வேண்டும். ரோட்டராக்ட் சங்கங்களை rotary.org என்ற இணையதளத்தில் பதிவு செய்வதன் அவசியத்தையும் ரோட்டராக்ட் நியூஸ் (Rotaract News) இதழில் செய்திகளை வெளியிடுவதன் அவசியத்தையும் DRRகளுக்கு அறிவுறுத்தினார்.

அந்தக் கூட்டத்தில் ஏராளமான யோசனைகள், சிந்தனைகள், கருத்துகள் பகிர்ந்து கொள்ளப்பட்டன. முன்னால் மாவட்ட ரோட்டராக்ட் பிரதிநிதி ஓம் சாவ்லா அனைத்து மாவட்ட தகவல் அமைப்புகளுடனும் (MDIOs) இணைந்து செயல்படும்படி யோசனை கூறினார். அந்த அமைப்புகள் RI கமிட்டியுடன் துணைக் கமிட்டியைப் போல் செயல்படலாம் என்றும் யோசனை கூறினார்.

அனைத்துக் கேள்விகளுக்கும் பார்ரி ரஸ்ஸின் பதிலளித்தார். ரோட்டரி இணையதளத்தை மேம்படுத்துவது, புதிய அமைப்புகள், திட்டத்துக்கான நிதி ஆகியவை தொடர்பாக DRRகள் கூறிய பல சாத்தியமான யோசனைகளை ஏற்றுக் கொண்டார். அத்துடன் இன்டராக்ட்-ரோட்டராக்ட்-ரோட்டரி ஆகிய அமைப்புகளுக்கு இடையில் தொடர்பு இருப்பதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

ரோட்டராக்ட் இயக்கப் பணியை நிறைவு செய்த பின் ரோட்டரியில் நீங்கள் ஈடுபட வாழ்த்துகிறேன் என்றார்.

(கட்டுரை ஆசிரியர் D 3011 ரோட்டராக்ட் பிரதிநிதி)

*RI தலைவர் பாரி ரஸ்ஸின் மற்றும் RID C பாஸ்கர் DRRகளுடன்.*



# சுஷில் குப்தாவுடன் தேநீர் சந்திப்பு





ரஷீதா பகத்

RI தலைவராக சுஷில் குப்தா நியமனம் ஆகியுள்ளார். அதைப் போல் RI இயக்குநர்களாக பரத் பாண்டியாவும் கமல் சங்வியும் பொறுப்பேற்கிறார்கள். அவர்களில் சுஷில்குப்தா மற்றும் அவரது மனைவியிடம் PRID சேகர் மேத்தா கேள்விக் கணைகளைத் தொடுத்தார். அதைப் போல் PRIP கல்யாண் பானர்ஜி, மற்றும் RIDE பரத் பாண்டியா ஆகியோரிடமும் கேள்விகளைத் தொடுத்தார் சேகர் மேத்தா உரையாடலில் பல சுவையான தகவல்கள் கிடைத்தன.

**சேகர் மேத்தா:** 2020-21ம் ஆண்டுக்கான RI தலைவர் பதவிக்கு நீங்கள் நியமனம் பெற்றதை அறிந்தபோது உங்களது உணர்வு எப்படி இருந்தது?

**சுஷில் குப்தா:** என் குருநாதர் எனக்கு ஆசிமழை பொழிகிறார் என்று என் முதல் செய்தியை மனைவி வினிதாவுக்கும் மருமகனுக்கும் அனுப்பினேன். மனைவி பூரிப்போடு ஓ, கடவுளே! என்று பதில் அனுப்பினாள்.

**சேகர் மேத்தா:** நியமனக் குழு நடத்திய நேர்காணலில் நீங்கள் உலகில் போலியோ ஒழிப்பது குறித்த விரிவான திட்டம் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானுடன் இணைந்து பணிபுரிவது, மற்றும் பல முக்கிய சவால்கள் குறித்து பேசியிருக்கிறீர்கள் அவை பற்றி கூற முடியுமா?

**சுஷில் குப்தா:** ரோட்டரி உறுப்பினர்களின் சராசரி வயதைக் குறைப்பது ஒரு திட்டமாகும். சங்கங்களில் உள்ள ஆண், பெண் எண்ணிக்கையில் உள்ள ஏற்றத்தாழ்வைப் போக்குவது இன்னொரு குறிக்கோள். இப்போது 20 முதல் 22 சதவீதம் பேர்தான் பெண்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். ரோட்டரியில் சேருவதா இல்லையா என்பதை முடிவு செய்ய பெண்கள் நீண்ட நேரம் எடுத்துக் கொள்கிறார்கள். ஆனால், முடிவெடுத்து ரோட்டரியில் இணைந்துவிட்டால், ஆண்களை விட உறுதியாகவும் அர்ப்பணிப்போடும் இருக்கிறார்கள். அப்படிப்பட்டோர் ஆயிரக்கணக்கில் தேவை.

போலியோவைப் பொறுத்த வரையில், நான் நியமனம் ஆனதையடுத்து, அந்த நோயைப் பூரணமாக ஒழிப்பதற்கு என்ன செய்யலாம் என்று 24 மணி நேரம் என் மனத்தில் ஓடிக் கொண்டேயிருக்கிறது. இம்ரான்கான் வழக்கமான அரசியல் வாதி அல்ல. இந்தப் பணியில் அவரை ஈடுபடுத்த வேண்டியுள்ளது.

உலகை மாற்றும் 10 தன்னார்வ அமைப்புகளில் ரோட்டரியும் உள்ளது என்று CNBC நிறுவனம் மதிப்பிட்டு அறிவித்துள்ளது. உலகில் அதிகம் விரும்பப்படும் அமைப்பாக ரோட்டரி இருக்க வேண்டும் என்பது என் கனவு. தனி நபராக நிறைய செய்ய முடியும். ஆனால், ஏராளமான கைகள் கூட்டாகச் சேர்ந்துவிட்டால், உலகத்தையே மாற்றிவிட முடியும்.

**சேகர் மேத்தா:** கல்யாண் பானர்ஜி அவர்களே, சுஷில் குப்தாவிடம் எந்தக் குணம் உங்களைப் பெரிதும் கவர்ந்தது?

**கல்யாண் பானர்ஜி:** தான் செய்யும் எந்தக் காரியமானாலும் அதில் மூழ்கிவிடுவார் குப்தா. அது என்னைப் பெரிதும் கவர்ந்தது. ரோட்டரியில் பலர் நிறைய பேசுவோம், ஆனால், செய்வது கொஞ்சம்தான். ஆனால், குறைவாகப் பேசி நிறைய செய்யும் ஒரு சிலரில் சுஷில் குப்தா ஒருவர். அவரைப் போன்ற தலைவர்கள்தான் நமது அமைப்புக்குத் தேவை.

*PRIP கல்யாண் பானர்ஜி மற்றும் PRID சேகர் மேத்தா.*







**சேகர் மேத்தா:** சுஷில் குப்தா! நீங்கள் தொட்டால் எதுவும் துலங்கும். உலகின் மிகச்சிறந்த ஹோட்டல்களில் உங்களுடையது குறிப்பிடத் தக்கது. சுற்றுச்சூழல் மீது உங்களுக்கு அக்கறை நிறைய இருக்கிறது. ப்ரானிக் சிகிச்சை முறையில் நாட்டம் உள்ளவர். இமயமலைப் பயணம் அதிகம் பிடிக்கும். தண்ணீர் சேமிப்பில் அதிக கவனம் செலுத்துபவர். இவை எல்லாவற்றையும் விட கோல்ஃப் விளையாட்டிலும் உங்களுக்கு ஆர்வம் உண்டு. எப்படி இத்தனை செயல்களை மேற்கொள்கிறீர்கள். மேலும் நீங்கள் அன்றாடம் மேற்கொள்வது?



**சுஷில் குப்தா:** (சிரிப்பு) ரோட்டரிதான் என மன அழுத்தத்தைத் தீர்க்கும் வழி.

நான் தினமும் அதிகாலை 4.45 மணிக்கே எழுந்துவிடுவேன். யோகா செய்வேன். பிறகு கோல்ஃப் விளையாட்டு. பாபா ராம்தேவ் காலத்துக்கு முன்பே 35 ஆண்டுகளாக அதிகாலையில் யோகா செய்து வருகிறேன். கோல்ஃப் விளையாடி முடித்துவிட்டு காலைக் கடன்களை முடித்து, உணவு அருந்திவிட்டு அலுவலகம் செல் வேன். வேறு எதற்கும் நேரத்தை ஒதுக்கியதில்லை. எது வந்தாலும் அதை ஏற்று முழுமனத்துடன் செயல்படுவேன். எதுவும் தானாக நடந்துவிடும் என்ற சித்தாந்த்ததில் உறுதியாக நம்பிக்கை வைத்திருக்கிறேன். எல்லோருக்கும் சோதனைகள் வரும், இடையூறுகள் நேரும். அதையெல்லாம் சமாளித்தாக வேண்டும். எதைச் சாதிக்க வேண்டும் என நினைக்கிறீர்களோ, திறமை இருந்தால் அதை நிறைவேற்றுவீர்கள்.

**சேகர் மேத்தா:** கமல் சங்வி அவர்களே! சுஷில் குப்தாவுடன் இணைந்து பணியாற்ற விரும்புவதற்கு அவரிடம் உங்களைக் கவர்ந்தது எது?

**கமல் சங்வி:** ரோட்டேரியன்கள் எதையும் செய்து முடிப்பவர்கள் என்று அவர் கொண்டுள்ள அபரிமிதமான நம்பிக்கைதான் இந்த அற்புதமான மனிதரிடம் என்னைக் கவர்ந்தது. எந்தத் திட்டத்திலும் இணைந்து செயல்படுவதற்கு ஒவ்வொரு ரோட்டேரியினுக்கும் வாய்ப்பு அளிப்பார், வெற்றிக்கான பாதையை வகுத்துத் தருவார்.

**சேகர் மேத்தா:** பரத் பாண்டியா உங்கள் கருத்து?

**பரத் பாண்டியா:** சுஷில் குப்தா பேரார்வம் கொண்டவர். எதைச் செய்தாலும் ஆர்வத்துடனும் திறமையுடனும் செயல்படுவார். கமல் கூறியது போல ரோட்டரியினருக்கு வாய்ப்புகள் அளிப்பார். அது மட்டுமின்றி அவர்கள் செய்து முடிக்க ஊக்கமும் அளிப்பார். அவ்வாறு அளிக்கும் ஊக்கம்தான் எல்லா மாற்றங்களையும் நிகழ்த்துகிறது.

**சேகர் மேத்தா:** PDG ரமேஷ் அகர்வால் அவர்களே, சுஷில் குப்தாவுடன் நிறைய பணிகளில் ஈடுபட்டிருக்கிறீர்கள். அவரது பணியில் எது உங்களை மிகவும் ஈர்த்தது?

**ரமேஷ் அகர்வால்:** குப்தா எப்போதும் நம்பிக்கையைத் தளரவிட்டதில்லை. பள்ளியில் கைகழுவு திட்டத்தில் (WinS) நாங்கள் ஈடுபட்டிருந்தபோது, சில சமயம் எனக்கு விரக்தி ஏற்படும்.

அதற்கு, ரமேஷ், அமைதியாக இருங்கள். திட்டம் வெற்றிகரமாக நிறைவேறும் என்பார். சொல்வதைச் செய்பவர். அவர் தானே செய்யாத எதையும் மற்றவர்களைச் செய்யும்படி அறிவுறுத்த மாட்டார். யார் சிறப்பாகச் செயல்படுகிறார்களோ அவர்களை எப்போதும் அடையாளம் காண்பார்.

**சேகர் மேத்தா:** (பாகிஸ்தானைச் சேர்ந்த) அஜீஸ் மேமன், நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

**அஜீஸ் மேமன்:** சுஷில் குப்தாவுடன் நீண்ட காலம் நெருங்கி பணியாற்றியிருக்கிறேன். இவர்கள் கூறியதை அப்படியே வழிமொழிகிறேன். அவர் செயல்வீரர். அவரது நியமனம் குறித்து அறிந்ததும் அவரைப் பாராட்டுவதற்காக அழைத்தபோது, உடனே, அஜீஸ், போலியோ இல்லாத உலகை உருவாக்கவேண்டும் என்பதே என் விருப்பம் என்று கூறினார். அவரும் நானும் ஒரே விமானத்தில் தில்லியிலிருந்து கோல்கத்தாவுக்குப் பயணமானோம். இரண்டு மணி நேரப் பயணத்தில் அவர், உலகம் முழுவதும் போலியோ இல்லாத நிலை உருவாக, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தானில் என்ன



RIDEs *கமல் சங்வியுடன் பரத் பாண்டியா*

செய்யவேண்டும் என்பதைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தார். அவரது முயற்சியும், மாற்றுச் சிந்தனையும் உண்மையிலேயே மிகச் சிறந்தவை.

**சேகர் மேத்தா:** வினிதா, ரோட்டரியில் எது சிறந்தது என்று நினைக்கிறீர்கள்?

**வினிதா:** ரோட்டரியில் ஏராளமாகப் பிடிக்கும். அவற்றில், மிகச் சிறந்தது உலகம் முழுவதும் நண்பர்களைச் சம்பாதித்துக் கொள்வது. உதாரணத்துக்கு சுஷில் குப்தா மாவட்ட ஆளுநராக இருந்தபோது, கராச்சி ரோட்டரி மாவட்ட ஆளுநரும் அவரது மனைவியும் நண்பர்கள் ஆயினர். அவர் மறைந்துவிட்டார். அவரது மனைவி இன்னும் தொடர்பில் இருக்கிறார். ஆண்டுகள் ஓடிவிட்டன நட்பு நீடிக்கிறது. ஆனால், இந்திய பாகிஸ்தான் நாடுகளிடையில் உள்ள உறவில் பின்னடைவு காரணமாக சந்திக்க இயலாமல் போய்விட்டது. எனினும், தீபாவளியன்று வாழ்த்துவார். உலகம் முழுவதும் அத்தகைய நண்பர்கள் கிடைத்துள்ளனர்.

**சேகர் மேத்தா:** PDG கல்பனா கவுண்டு அவர்களே, RI தலைவராக நியமனம் பெற்றவரிடம் ஏதாவது கேள்வி கேட்க விரும்புகிறீர்களா?

**கல்பனா கவுண்டு:** குப்தா நாட்டின் வடகிழக்கு எல்லைப் பகுதியான அருணாசலப் பிரதேசத்திற்குச் சென்றுள்ளார். இது பலருக்குத் தெரியாது. அருணாசலப் பிரதேசத்தில் மருத்துவமுகாமை அவருடன் சேர்ந்து நடத்தினோம். அது மோசமான நிலப்பரப்பு கொண்ட மாநிலம். ஆனால், குப்தா படகு உள்பட எல்லா வகையான வாகனங்களிலும் பயணம் செய்து சமூகப் பணியாற்றினார்.

சுஷில் குப்தா அவர்களே! யாரும் தொலைதூரம் கூட சென்றுவிடுவார்கள், வடகிழக்கு மாநிலங்களுக்குச் செல்வதில்லை. அப்படிச் செல்வதற்கு எது தூண்டுதலாக இருந்தது?

**சுஷில் குப்தா:** வடகிழக்கு மாநிலங்களுக்காக என் இதயம் துடிக்கிறது. அது பழங்குடியினர் வாழும் பகுதி. நாம் ஏதோ கொஞ்சம் செய்திருக்கிறோம் என்று நம்புகிறேன். அந்தப் பகுதிகளில் மேம்பாட்டை உறுதி செய்ய இயலவில்லை. எனக்கு ஏதாவது வாய்ப்பு கிடைத்தால் அங்கு சென்று அந்த மக்களுக்குத் தொண்டு புரிய விரும்புகிறேன்.

**சேகர் மேத்தா:** நீங்கள் உணவுப் பிரியர் ஆயிற்றே! உங்களுக்குப் பிடித்த உணவு எது?

**சுஷில் குப்தா:** இந்திய மற்றும் இத்தாலிய உணவுகள் எனக்குப் பிடிக்கும்.

**சேகர் மேத்தா:** உங்களது காலத்தில் எது கருப்பொருளாக இருக்கப் போகிறது?

**சுஷில் குப்தா:** அது குறித்து செயல்பட்டு வருகிறோம். 2020ம் ஆண்டு ஜனவரி வரையில் (சர்வதேச அசெம்பிளியில் புதிய தலைவர் கருப்பொருளை வெளியிடப்படுவது வரை) அது தொடரும். அதில் ஆன்மிகம் வெளிப்படும் என்பதை மட்டும் நான் இப்போது கூறிக் கொள்கிறேன்.

**சேகர் மேத்தா:** உங்கள் தலைமுடிக்கு ஏன் கறுப்புச் சாயம் போடுவதில்லை?

**சுஷில் குப்தா:** (சிரிப்பு) கடவுள் கொடுத்திருப்பதை அப்படியே வைத்திருக்க விரும்புகிறேன்.

**சேகர் மேத்தா:** நீங்கள் விரும்பும் பயணம் எது?

**சுஷில் குப்தா:** இமயமலைப் பயணம்.

**சேகர் மேத்தா:** உங்களுக்குப் பிடித்த கதாநாயகி?

**சுஷில் குப்தா:** (மனைவியைக் குறிக்கும் வகையில்) என் பக்கத்தில் அமர்ந்திருக்கிறாள்! நான் திரைப்படங்கள் அதிகம் பார்ப்பதில்லை.

**சேகர் மேத்தா:** ரோட்டரியில் உங்களுக்கு வழிகாட்டி யார்?

**சுஷில் குப்தா:** தனியாக யாரையும் குறிப்பிட முடியாது ஆனால், கல்யாண் பானர்ஜியும் நானும் நல்ல நண்பர்கள். அவரது பணியை நேசிக்கிறேன். விரும்புகிறேன். ஆதரிக்கிறேன். காரணம், அவர் எதைச் செய்தாலும் முழு ஈடுபாட்டுடன், முழு மனத்துடன் செய்கிறார்.

**சேகர் மேத்தா:** வினிதா, உங்களுக்குப் பிடித்த உணவு?

**வினிதா:** இட்லி, தோசைதான்! அதற்காக நீங்கள் எப்போதும் அதைச் செய்து கொடுங்கள் என்று சொல்ல வரவில்லை.

**சேகர் மேத்தா:** நீங்கள் விரும்பும் பயணம் எது?

**வினிதா:** மும்பைக்குச் செல்வது.

**சேகர் மேத்தா:** சுஷில் குப்தா, இறுதியாக ஒரு கேள்வி. இந்தியாவில் உள்ள ரோட்டேரியன்களுக்கு என்ன செய்தி கூறுகிறீர்கள்?

**சுஷில் குப்தா:** ஒரே ஒரு செய்திதான். நீங்கள் எதைச் செய்தாலும், மனத்தை முழுமையாகச் செலுத்தி செய்யுங்கள். ஒரே ஒரு திட்டத்தில் மட்டும் ஈடுபட்டாலும் முழுமையாக, சிறப்பாகச் செய்யுங்கள்.

புகைப்படங்கள்: ரஷீதா பகத்
வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்

# Project HOPE

Rotary

Lend your hand to help the victims of the flood-ravaged Kerala & Coorg. Donate a home in your name @ ₹3,50,000/-

**Be the inspiration** to rebuild lives.

Email: projecthope@vncgroup.com



**Advisors**
PRIP Raja Saboo
PRIP Kalyan Banerjee
RIPN Sushil Gupta

**RI Director**
Basker Chockalingam

**Trustee**
Gulam Vahanvaty

**RI Directors Elect**
Dr Bharat Pandya
Kamal Sanghvi

**District Governors**
A Venkatchalapathy
E K Ummer
E K Luke
P Rohinath

---

BE THE INSPIRATION

Rotary

## Project Hope

**Kerala & Karnataka Disaster Relief & Rehabilitation Project**

**Pledge Letter to "Donate a home"**

I/We Rtn......................... of Rotary Club of ........................ .................................. District ............................. confirm my/our pledge to donate homes costing Rs.3,50,000/- each to a deserving family affected by the recent floods as our contribution to helping them rebuild their lives by providing them a roof to live under.

On receiving details relating to the beneficiary, we shall transfer an amount of Rs.......................... (towards the cost of building the shelter) to the following bank account:

| | |
|---|---|
| Trust Account Name | Rotary Kerala Disaster Relief Fund |
| Bank | State Bank of India |
| Branch | Kaloor Deshabhimani Junction, Kaloor, Ernakulam, Kerala |

| | |
|---|---|
| Type | Current |
| Account No. | 37991066583 |
| IFSC Code | SBIN0070327 |

Let us 'Be the Inspiration' to rebuild the lives of our brothers and sisters who have lost their homes! Let us rekindle Hope!

Yours sincerely,

Signature

Name: Mobile:
Date:
Email ID: Rotary Club of .........................

**Please send the filled form immediately to: projecthope@vncgroup.com**

Rotary Institute 2018

# பன்முகத் தன்மை உறுதி செய்வதால் வகைப்பாடு நீடிக்க வேண்டும்: RIDE பரத் பாண்டியா

ரஷிதா பகத்

ரோட்டரி அமைப்பில் வகைப்பாட்டு முறை (Classification) மிகவும் அவசியம். அது பன்முகத்தன்மையை (Diversity) அளிக்கிறது. RI தலைவர் பாரி ரஸ்ஸின் கூறியதைப் போல் ரோட்டரியின் ஐந்து முக்கிய விழுமியங்களில் (Values) பன்முகத் தன்மை குறைவவாக இருக்கிறது. எனவே, வகைப்பாடு முக்கியம் என்று RI இயக்குநராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பரத் பாண்டியா குறிப்பிட்டார்.

RI இயக்குநராகப் பதவியேற்கும் பரத் பாண்டியா, இயக்குநராக நியமனம் பெற்ற கமல் சங்வி ஆகியோர் ரோட்டரி இன்ஸ்டியூட்டில் நடைபெற்ற கலந்தாய்வுக் குழுக் கூட்டத்தில் அண்மையில் பங்கேற்றனர். அவர்களிடம் RID C பாஸ்கர் PRIP ராஜேந்திர சாபூ ஆகியோர் ரோட்டரியில் உள்ள வகைப் பாடுகள், தாராளத் தன்மை (Flexibility), மக்களிடம் ரோட்டரியின் புகழ், பல வீனமான ரோட்டரி சங்கங்கள் ஆகியவை குறித்து பல கேள்விகளை எழுப்பினார்.

ரோட்டரியில் வகைப்பாட்டு முறை அகற்றப்பட வேண்டும் என்று பல தரப்பினர் கூறி வருகிறார்கள். அது நீடிக்க வேண்டுமா? என்று சாபூ கேட்டார். அதற்குப் பதிலளித்த பாண்டியா, பிற அமைப்புகளிலிருந்து ரோட்டரியை வேறுபடுத்திக் காட்டுவது வகைப்பாட்டு முறைதான். எனவே, அது அவசியம் என்றார். தொடர்ந்து, ரோட்டரியில் நாம் இணைந்த காலத்தில் வகைப்பாட்டு முறை ஒரு தடையாக இருந்தது. ஆனால், புதிதாகத் தொழில்கள் உருவாகிவரும் நிலையில் வகைப்பாடுகள் தேவைப்படுகின்றன. புதிய தொழில்களின் அடிப்படையில் பல தரப்பட்ட உறுப்பினர்களை ரோட்டரியில் சேர்க்க வேண்டும் என்றும் பாண்டியா கூறினார்.

தாராளத் தன்மை என்றால், ரோட்டரி சங்கம் எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்பதல்ல. விதிகள் வகுக்கும் குழு (Council on Legislation) தாராளத் தன்மையை அனுமதித்தால், ரோட்டரி சங்கம் விரும்பிய வழிமுறைகளையும் நடைமுறைகளையும் தங்களது தேவைக்கு ஏற்ப தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். அமெரிக்காவிலோ, ஜெர்மனியிலோ கடைப் பிடிக்கப்படும் நடை முறை இந்தியாவிலோ நியூஸிலாந்திலோ பொருந்தாது. ரோட்டரி சங்கம் ஒரே நாளில் இரண்டு கூட்டங்களை நடத்தலாம் என்பது தாராளத் தன்மை ஆகாது. இவற்றையெல்லாம் மூத்தவர்கள் தங்களது ரோட்டரி அமைப்புகளில் விளக்க வேண்டும் என்றார் பாண்டியா.

அதையடுத்து பேசிய சாபூ, ரோட்டரியில் வகைப் பாடு தொடர்பாக 2019ம் ஆண்டு நடைபெற உள்ள விதிகள் வகுக்கும் குழு (Council on Legislation) கூட்டத்தில் என்ன முடிவு எடுக்கப்பட உள்ளது? என்று கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த பாண்டியா, நானும் சங்வியும் பார்வையாளர்கள் என்ற முறையில்தான் அக்கூட்டத்தில் பங்கேற்க உள்ளோம். இருந்தாலும், அதில் பங்கேற்கும் மூத்த உறுப்பினர்கள் விஷயம் அறிந்தவர்கள். வகைப்பாட்டு நடைமுறை என்பது ரோட்டரியின் முக்கியமான விஷயங்களில் முக்கியமானது என்றும் அதைக் கைவிடக் கூடாது என்றும் அவர்கள் அறிவர் என்றார்.

RID C பாஸ்கர் பேசுகை யில், கடந்த முறை கூடிய



விதிகள் வகுக்கும் குழு (CoL) கூட்டத்தில் பல யோசனைகள் தெரிவிக்கப்பட்டன. எந்த விஷயங்களுக்கு ஒப்புதல் அளிக்கலாம் என்று பிரதிநிதிகள் தீர்மானித்து செயல்பட்டனர். வகைப்பாடு உலக அளவில் மிக முக்கியமானது. உலகின் பிற நாடுகளில் அது குறித்து என்ன நிலையை எடுக்கிறார்கள் என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். எதுவாக இருந்தாலும், இது தொடர்பான விவாதம் முக்கியம் என்றார்.

அதையடுத்து பேசிய சாபூ, தமது மண்டலத்தில் உள்ள ரோட்டரி சங்கங்கள் குறித்து மதிப்பிடும்படி C பாஸ்கரைக் கேட்டுக் கொண்டார். வரையறுக்கப்பட்ட அளவுகோல்கள் ரோட்டரி சங்கங்களின் உறுப்பினர்களின் எண்ணிக்கையில் அமைய வேண்டுமா, அல்லது ரோட்டரி ஃபவுண்டேஷனுக்கு அளிக்கப்படும் நன்கொடை அளவில் அமைய வேண்டுமா? என்று கேட்டார்.

அதற்குப் பதிலளித்த பாஸ்கர், நமது மண்டலத்தில் 80 சதவீதம் ரோட்டரி சங்கங்கள் சிறப்பாகச் செயல்படுகின்றன. மீதியுள்ளவை பலவீனமாக இருக்கின்றன அளவு கோல்களைப் பொறுத்தவரையில் கடந்த ஆண்டு முதல் தலைவர்களின் திறன், ரோட்டரி சங்கம் செயல்படுத்தும் திட்டங்களின் தன்மை, அவை குறித்த அறிவிப்புகள் ஆகியவையும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. உறுப்பினர்கள் மற்றும் TRF ஆகியவற்றுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. அதன் மூலம் ரோட்டரி சங்கங்கள் செயல்பாடும் மதிப்பிடப்படுகிறது என்று கூறினார்.

ரோட்டரி சங்கத்தின் செயல்பாட்டை மதிப்பிடுவதற்கான நடைமுறை பயன்பாட்டுக்கு வந்தது. அது குறித்த விவரம் மாவட்ட ஆளுநர்களிடம் பகிர்ந்து கொள்ளப்பட்டது. அவர்களுக்குத் தங்களது மாவட்டப் பகுதியில் உள்ள வலிமையான, பலவீனமான சங்கம் எது என்று தெரியும். எனவே, பலவீனமான சங்கத்தின் மீது கவனம் செலுத்த வேண்டும் என்றார் அவர்.

இது தொடர்பாக, பரத் பாண்டியா, மற்ற நாடுகளில் உள்ள ரோட்டரி அமைப்புகளின் கூட்டம் நடைபெறும் அறைக்குள் நுழைந்ததுமே புத்துணர்வைக் கண்டிருக்கிறேன். அங்கே அந்நியனாக உணரமாட்டேன். கவனிக்கப்படுவேன். கூட்டம் சரியான நேரத்தில் தொடங்கிவிடும். தலைவர் தனது நிகழ்ச்சி நிரலை செயலாளரிடம் அளிப்பார். அதில் எந்தக் குழப்பமும் இருக்காது. கூட்டத்தில் கணிசமானோர் பங்கேற்பர். பேச்சாளர்கள் கச்சிதமாகப் பேசி நேரத்தில் முடிப்பார்கள். முடிந்த பிறகு மனம் நிறைவடையும் என்று தெரிவித்தார்.

பொதுமக்களிடம் ரோட்டரியின் புகழை உயர்த்துவதற்கான விழிப்புணர்வு குறித்துக் கேட்டதற்கு, கமல் சங்வி, ரோட்டரியில் இணைந்தபின், உலகில் மாற்றத்தைக் கொண்டு வருவதற்காக நாம் என்ன செய்தோம் என்று ரோட்டரி உறுப்பினர்கள் தங்களுக்குள் கேட்டுக் கொள்ளவேண்டும். சில சங்கங்கள் மிகச் சிறப்பாகச் செயல்படுகின்றன. வேறு சில சங்கங்கள் தங்களது ஆற்றலைப் புரிந்து கொள்ளாமல் சுமாராக இயங்குகின்றன. ரோட்டரி சங்கத்தில் 20 பேர் தான் உள்ளனர் என்று எடுத்துக் கொண்டால் கூட ரூ.20 கோடி மதிப்பு உள்ளது. அந்த அமைப்பு நிறுவனங்களைச் சேர்ந்த 20 முதன்மைச் செயல் அலுவலர்கள், தொழிலதிபர்கள், வர்த்தகர்கள், டாக்டர்கள், சார்ட்டர்ட் அக்கவுண்டன்டுகள் என பல தரப்பட்டவர்கள் இருப்பர். நீங்கள் எல்லோரும் உங்களுக்குள்ளேயே சுய ஆய்வு செய்து கொள்ளுங்கள். மகத்தான காரியங்களைச் செய்யும் ஆற்றல்



*வலதுபுறத்திலிருந்து: RID C பாஸ்கர், RIDEs கமல் சங்வி மற்றும் பரத் பாண்டியா.*

*மகத்தான காரியங்களைச் செய்யும் ஆற்றல் நமக்கு உண்டு குழந்தைகளுக்கு பென்சில், நோட்டுப் புத்தகங்களைக் கொடுத்து முடித்துவிடுகிறோம். அது கூடாது. புதிதாகப் பள்ளிக் கூடங்களை உருவாக்க வேண்டும்.*

**RIDE கமல் சங்வி**

நமக்கு உண்டு. ஆனால், அப்படிச் செய்வதாகத் தெரியவில்லை. மாறக, குழந்தைகளுக்கு பென்சில், நோட்டுப் புத்தகங்களைக் கொடுத்து முடித்துவிடுகிறோம். அது கூடாது. புதிதாகப் பள்ளிக் கூடங்களை உருவாக்க வேண்டும். பெரிய திட்டங்களை எடுத்துச் செயல்பட வேண்டும். பெரிய பொறுப்புகளை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று பேசினார்.

இவ்வாறு கமல் சிங்வி பேசியபோது பார்வையாளர்கள் கரவொலி எழுப்பி வரவேற்றனர்.

தொடர்ந்து பேசிய சிங்வி, ஊடகத்தினரை ரோட்டரியின் பதவியேற்பு நிகழ்ச்சிகளுக்கும் திட்டங் களுக்கும் அழைப்பதுடன் நின்றுவிடக் கூடாது.'10 குழந்தைகளுக்கு உதவப் போகிறோம். எங்களுடன் இணைந்து கொள்ளுங்கள்' என்று கூறி, அவர்களை அழையுங்கள். நம்முடன் இணைந்து செயல்படுவதற்குப் பத்திரி கையாளர்கள் இருக்கிறார்கள் என்றும் வலியுறுத்தினார்.

பரத் பாண்டியா பேசுகையில், ரோட்டரி சங்கத்தில் உள்ளவர்களில் 70 சதவீதம் பேருக்கு தங்களது சங்கங்கள் என்ன செய்கின்றன என்றே தெரிவதில்லை. அவர்களையெல்லாம் ஈடுபடுத்தவேண்டும். தலைமைப் பொறுப்பில் உள்ளவர்கள் தேர்தல்கள் உள்பட அனைத்துப் பணிகளிலும் நேர்மையான எண்ணமும் செயலையும் கடைப்பிடிக்கிறோம் என்று காட்ட என்றார்.

**மாவட்டங்களைப் பிரித்தல்**

மாவட்டங்களைப் பிரிப்பது தொடர்பாகக் குறிப்பிட்ட சாபு, புவியியல் அடிப்படையில் மாவட்டங்களை நிர்வகிப்பதற்கு மாவட்ட ஆளுநர்கள் சிரமப்படுகிறார்கள். அதிலேயே அவர்களது திறமை வீணாகிறது. இது தொடர்பாக C பாஸ்கர் உரிய ஆலோசனைகளை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

அதற்குப் பதிலளித்த பாஸ்கர், இந்தியாவில் வடக்கு மற்றும் கிழக்கு மாநிலங்களை ஒப்பிடும்போது தெற்கு மற்றும் மேற்கு பகுதிகளில் அதிகமான உறுப்பினர்கள் இருக்கிறார்கள். ஒரு மாவட்டம் மிகப் பெரிய நிலப்பரப்பில் அமைந்திருந்தால், மொழிப் பிரச்சினையும் ஏற்பட வாய்ப்பு உண்டு. அதனால்தான் நமது மாவட்டங்களை நிர்வாக வசதிக்காக

**கீழே:** RIDEs *பரத் பாண்டியா, கமல் சங்வி மற்றும் மாதவி, சோனல் சங்வியுடன்.*

**மேலே:** DG *குட்டாடி விஸ்வநாதன் மற்றும் விஸ்வ பந்து தீட்ஷிட்,* PRIP *ராஜேந்திர சாபு,* RIDEs *பரத் பாண்டியா, கமல் சங்வி மற்றும்* RID C *பாஸ்கர் அவர்களுக்கு நினைவுப்பரிசு கொடுக்கின்றனர்.*






புவிவியல், மொழிகளின் அடிப்படையில் மாற்றி யமைக்க வேண்டியிருக் கிறது. அது தேவை. இது உணர்வுபூர்வமான விஷயம். ஒரு மாவட்டத்தின் கீழ் 130 முதல் 140 ரோட்டரி சங்கங்கள் இருந்தால் கூட, இந்தியாவில் ஐம்பதுக்கும் மேற்பட்ட மாவட்டங்கள் உருவாகும் என்பது என் கனவு என்றார்.

ரோட்டரி செயல்பாடு களை மேம்படுத்துவதில் மாவட்ட ஆளுநர்களின் பங்கு குறித்து பாண்டியா குறிப்பிடுகையில், வலுவற்ற சங்கங்கள் அல்லது வளர்ந்துவரும் சங்கங்கள் மாவட்ட ஆளுநர்களின் வழிகாட்டுதல் மூலமே தங்களது செயல்பாட்டை மேம்படுத்திக் கொள்ள முடியும். மாவட்ட ஆளுநர் களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டோர், நியமனம் பெற்றோருடன் மாவட்ட ஆளுநர் பதவியில் இருப்போர் இணைந்து செயல்படவேண்டும் என்றார்.

உறுப்பினர்கள் குறித்த விவரங்களை ஏழு ஆண்டுகளாக ஆராய்ந்து வருகிறேன். 25 சதவீதம் ரோட்டரி சங்கங்களில் 20க்கும் குறைவானோர்தான் இருக்கின்றனர். 10 முதல் 12 சங்கங்களில் ஐந்து பேர் கூட இல்லை. உறுப்பினர்களின் எண்ணிக்கை முக்கியமல்ல என்று சொன்னாலும், அது தேவை என்பதை மறுக்க முடியாது. இந்த நிறுவனக் கூட்டத்தில் பங்கேற்கும் நாம் இது நீடிப்பது ஏன் என்று யோசிக்க வேண்டும். தீர்வு காண்பதற்கு மூத்தவர்களின் ஆதரவும் உறுதிப்பாடும் தேவை. ஒரு சிலர் ஆர்வத்துடன் இருக்கும்போது ரோட்டரி சங்கங்களை மூடுவது சிரமம் என்று பரத் பாண்டியா கூறினார்.

பாண்டியாவின் இந்தக் கருத்துக்கு பாஸ்கர் ஆதரவு தெரிவித்தார். ரோட்டரி இன்டர்நேஷனலுக்கு சந்தாவைத் தவறாமல் செலுத்தி வரும் நிலையில், எந்த ரோட்டரி சங்கத்தையும் மாவட்ட ஆளுநரோ ரோட்டரி இன்டர்நேஷனல் இயக்குநரோ மூடுவது எளிதல்ல. அவை உருவானதற்கு வேறு காரணங்களும் இருந்திருக் கும். எனவே, இந்த விஷயத்தில் நிர்வாக முடிவை எடுப்பது மிக மிகக் கடினம் என்று கூறினார்.

நல்ல அனுபவம் கொண்டு, 55 வயதிலும் துடிப்பாகச் செயல்படுவோர் ரோட்டரியில் நுழைந்தால், அந்த அமைப்பை இளமைத் துடிப்போடு வைத்திருக்க முடியுமா என்பதை சங்வி விளக்கவேண்டும் என்று ரோட்டரி இன்டர்நேஷனல் முன்னாள் தலைவர் சாபூ கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த சாபூ, இளமையும் முதுமை யும் கலந்திருக்கவேண்டும் என்று நான் கருதுகிறேன். முதியவர்கள் அனுபவசாலி கள், அவர்களுக்கு நேரமும் இருக்கும்.

அவர்களை இணைத்துக் கொண்டால் ரோட்டரி சங்கத்தைச் சரியான பாதையில் அழைத்துச் செல்கிறீர்கள் என்று அர்த்தம். விதிகள் வகுக்கும் குழு (CoL) கூட்டத்தில் ரோட்டராக்ட் சங்கங்கள் ரோட்டரி சங்கங்களாக நேரடியாக மாற்றுவதற்கான யோசனை முன் வைக்கப்படுகிறது. இது போன்ற செயல்களால் இளைஞர்களின் துடிப்பும் மூத்தவர்களின் அனுபவமும் இணையும். ரோட்டரிக்கு பலன் கிடைக்கும் என்று பதிலளித்தார்.

இளைஞர்களை ரோட்டரியில் ஈடுபடுத்து வதற்கு எளிமையான வழி உள்ளது. அண்மையில் நான் பங்கேற்ற ஒரு ரோட்டரி கூட்டத்தில் கலந்துகொண்ட மொத்தம் 40 பேரும் ரோட்டேரியன்களின் புதல்வர்கள். அவர்கள் 36 முதல் 38 வயது வரை யிலானவர்கள். நாம் நமது புதல்வர்களுக்கு ரோட்டரியின் முக்கியத் துவத்தை உணர்த்த இயலாவிட்டால், வேறு யாருடைய புதல்வர்களை ஈடுபடுத்த இயலும்? ரோட்டரி உறுப்பினர்களின் சராசரி வயதைக் குறைப் பதற்கு இது எளிமையான வழியாகும் என்றும் சங்வி கூறினார்.

புகைப்படங்கள்: ரஷிதா பகத்

Rotary Institute 2018

# பெரிதாக நான் எதையும் செய்து விடவில்லை: ரவிசங்கர்

ரஷிதா பகத்

*அண்மையில் ரோட்டரி ஃபவுண்டேஷனுக்கு ரூ.100 கோடியை நன்கொடை அளித்து மிகப் பெரிய சாதனை புரிந்தவர் பெங்களூர் ஆர்சர்ட்ஸ் ரோட்டரி சங்கத் தலைவர் D ரவிசங்கர். இந்த அறிவிப்பினால் உலக ரோட்டரியையே வெகுவாகக் கவர்ந்துவிட்டார். இதையடுத்து, அவருக்குப் பாராட்டு மழை குவிகிறது. RI அமைப்பின் மூத்த அலுவலர்களும் முக்கியப் பிரமுகர்களும் அவருடன் புகைப்படம் எடுத்துக் கொள்ள அதிக ஆர்வம் காட்டுகிறார்கள். இத்தனைக்குப் பிறகும் ஒன்றுமே நடவாதது போல அடக்கமாக இருக்கிறார். சென்னை ரோட்டரி இன்ஸ்ட்டியூட்டில் அண்மையில் திரு. ரவிசங்கருடன் ரோட்டரி மாவட்ட ஆளுநர் (D 3190) சுரேஷ் ஹரி, அனிதா ஆகியோரும் பார்வையாளர்களும் உரையாடினர். அப்போது கூட ரவிசங்கர் ஒரே ஒரு முறை மட்டும் ரூ.100 கோடி என்று கூறியுள்ளார். அதையும் போகிற போக்கில்தாதன் சுட்டிக் காட்டியிருக்கிறார். தான் பெரிதாக எதையும் சாதிக்கவில்லை என்றார் அவர். அவருடன் நடந்த உரையாடல்:*

**சுரேஷ் ஹரி:** மணிப்பூரில் உங்களது பள்ளியைப் பற்றிக் கூறுங்கள் எது உங்களை எல்லைப் பகுதிக்கு அழைத்தது?

**ரவி சங்கர்:** தலைமைப் பதவி என் மீது திணிக்கப் பட்டபோது, மிகவும் தயங்கினேன். நான் அரைகுறை ரோட்டேரியன். எனது முடிவை (ரூ.100 கோடி நன்கொடை) எப்படிச் செயல்படுத்துவது என்றெல்லாம் தெரியாது. அத்தனை பணத்தையும் ஒரே ஆண்டில் செலவழிக்க முடியும் என்று கூட நினைத்திருந்தேன்! நானே செய்ய வேண்டும் என்று எண்ணி உலகம் முழுவதும் கூட சுற்றிப் பார்த்தேன். இவ்வளவு பெரிய தொகையை யாராவது தனி நபருக்குத் தரவேண்டி வருமோ என்று கூட நினைத்தேன்.

இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களைப் பார்த்தேன். அந்த எல்லை மாநிலங்கள் போதிய அளவு கவனிக்கப்படுவதில்லை என்பதை வருத்தத்துடன் கூறிக் கொள்கிறேன். மிகவும் நுட்பம் நிறைந்த பகுதிகள் அவை. போதிய வளர்ச்சி அங்கே இல்லை. பழங்குடியினர் அதிகம் பேர் வசிக்கிறார்கள். பரிதாபமானவர்கள். அப்பாவிகள், மனத்தில் களங்கமில்லாதவர்கள். துரதிர்ஷ்டவசமாக அவர்கள் தாங்கள் இந்தியர்கள் என்ற உணர்வே இல்லை. என்னைப் பார்த்ததும் “நீ இந்தியனா?” என்று கூட கேட்டனர். நான் அவர்களைப் பார்த்து, “நீங்கள் கூட இந்தியர்கள்தான்” என்று கூறினேன். அதைக் கேட்டு வியப்போடு என்னைப் பார்த்தனர். அவர்கள் அப்பாவிகள். அதையடுத்து, அங்கே கர்னல் கிறிஸ்டபர் ரெகோ என்பவர் நடத்தும் சன்பேர்ட் டிரஸ்ட் என்ற அறக்கட்டளையுடன் இணைந்து செயல்படத் தொடங்கினேன். வடகிழக்கு மாநிலங்களில் இருப்பதைப் போல் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள வாய்ப்புகள் மறுக்கப்பட்ட அப்பாவிக் குழந்தைகள் அதன் காரணமாக தீவிரவாதிகளாகவோ, பயங்கரவாதிகளாகவோ மாறாமல் இருக்கும் வகையில் நமது வளர்ச்சியும் மேம்பாடும் அமைந்திருக்க வேண்டும். அவர்கள் நம்மில் ஒரு பகுதியினர் என்பதை உணரச் செய்ய வேண்டும். அவர்கள் மீது அக்கறை காட்டவேண்டும்.

**சுரேஷ் ஹரி:** HIV பாதித்த சிறுவர்களுக்கான திட்டங்களில் துணை புரிகிறீர்கள் அல்லவா?

**ரவி சங்கர்:** ஆம், அந்த அப்பாவிச் சிறுவர்கள் பாதிக்கப்பட்டுள்ளது வருத்தமளிக்கிறது. எந்தப் பாவமும் அறியாத ஒரு வயது முதல் 10 வயது வரையிலான சிறுவர்கள் HIV மற்றும் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டிருப்பது வேதனை தருகிறது. மணிப்பூர் எல்லைப் பகுதிக்குச் சென்றபோது போதைப் பொருள் கடத்தல், போதைப் பழக்கம் ஆகியவற்றைக் கண்ணால் நேரில் பார்த்தேன். பெற்றோர்கள் ஊசி போட்டுக் கொள்ளும்போது ஏஐந தொற்றிவிடுகிறது. அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் அந்தத் தாக்கத்துடனேயே பிறக்கிறார்கள். சகோதரர் ராமும் சன்பேர்ட்



அறக்கட்டளையைச் சேர்ந்தவர்களும் அந்தக் குழந்தைகளைக் கவனித்துக் கொள்கிறார்கள். நான் அவர்களுக்கு துணை புரிகிறேன், அவ்வளவுதான்.

**அனிதா ஹரி:** பவோலா, HIVயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளைப் பார்க்கும் போது மனச் சஞ்சலம் அடைந்தீர்களா?

**பவோலா:** மாறாக, அந்தச் சிறுவர்களிடமிருந்து ஏராளமாகக் கற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது என்பேன். பல குழந்தைகள் தாய், தந்தையை இழந்தவர்கள், சிலர் தாயையோ தந்தையையோ இழந்தவர்கள். மேலும் பலருக்கு பெற்றோர் இருந்தாலும், அவர்களால் குழந்தையைப் பார்த்துக் கொள்ளவே முடியாத அவலம். அவர்களை நாங்கள் சென்று பார்த்த போது, தங்கள் மீதும் அக்கறை காட்டுகிறார்களே என்று துள்ளிக் குதித்தார்கள். அவர்களுடன் பாடி, ஆடி மகிழ்வூட்டப் போகிறோம் என்று குதூகலம் அடைந்தனர். உலகில் எத்தனையோ பேர் எல்லாம் இருந்தும் கவலையோடு வாழ்கிறார்கள். இந்தக் குழந்தைகளுக்கோ எதுவுமே இல்லை, ஆனால் மகிழ்ச்சியோடு இருக்கிறார்கள். அவர்களுடன் இருந்த தருணம் அற்புதமானது.

**சுரேஷ் ஹரி:** ரவி, நீங்கள் சிறுவனாக இருந்தபோது, உங்களைப் பாதுகாப்புடன் பார்த்துக் கொள்ள உங்கள் சகோதரி விரும்பினார்கள், ஏன்?

**ரவிசங்கர்:** என் சகோதரிகளைப் பற்றி நினைக்கும் போது மனம் மகிழ்கிறது. மன வளர்ச்சி குன்றிய குழந்தையாகவே நான் பிறந்தேனாம். அப்படித்தான் நடந்து கொண்டேனாம். நாங்கள் ஒண்டுக் குடித்தனத்தில்தான் வசித்துவந்தோம். என்னால் சரியாகப் பேச முடியாது. பேசினால், வாயில் எச்சில் வழியும். தோல் பிரச்சினையும் இருந்தது. அதன் காரணமாக என்னை மற்ற சிறுவர்கள் கேலி செய்வார்கள். என் மூன்று சகோதரிகளும் தேவதைகளைப் போல் இருந்து, என்னை சிறப்புக் குழந்தையாக நடத்தினர். ராணுவ வீரர்களைப் போல் இருந்து காப்பாற்றி வந்தனர். எனது சகோதரிகளின் இடத்தில் பயோலா வந்திருக்கிறாள். நான் என்னை நாத்திகன் என்று கூறிக் கொண்டால், பயோலா துள்ளிக் குதித்து, இல்லையில்லை, ரவி கடவுள் பற்றிச் சிந்திக்கா தவர், பார்க்கும்போதோ, பேசும்போதோ மோசமாகத் தெரிந்தாலும் நாத்திகர் இல்ல என்று கூறுவாள்.

நான் நன்றாக இருக்க வேண்டும் என்று கடவுளிடம் வலியுறுத்திக் கொண்டிருப்பாள். எனது சகோதரி புற்றுநோயால் இறந்துவிட்டார். என் தாய்க்குக் கூட புற்றுநோய் இருந்தது. ஆனால், சிகிச்சை பெற்று விட்டார். புற்றுநோய் தொற்றுநோய் போல் ஆகிவிட்டது. போலியோ இப்போது கட்டுக்குள் வந்துவிட்டது. புற்றுநோய் மீதும் ரோட்டரி சங்கம் கருத்தில் கொள்ள வேண்டும்.

**சுரேஷ் ஹரி:** பணம், கார் ஆகியவற்றை மட்டுமே மதிக்கும் சமுதாயத்தில் நாம் வாழ்கிறோம். இந்நிலையில்



நீங்கள் எப்படி நடத்தப்பட்டீர்கள்? உங்களது கருத்து என்ன?

**ரவிசங்கர்:** மற்றவர்களை விட நாம் பணக்காரர்கள் என்று காட்டிக் கொள்வதற்கு இதெல்லாம் பழைய நடைமுறை. கார் சாவியையெல்லாம் தூக்கிப் போட்டிவிட்டு, தன்னைப் பணக்காரராகக் காட்டிக் கொண்டவர்களும் பெரிய ஆள் என்று சொல்லிக் கொண்டவர்களையும் பார்த்திருக்கிறேன். விலை உயர்ந்த கார்கள், ஆடைகள் மீதெல்லாம் எனக்கு நம்பிக்கையில்லை. இளைஞர்களைப் பாருங்கள், ஜீன்ஸ் பேண்ட், சட்டைகளைக் கிழித்து விட்டு அணிந்து வருகிறார்கள். அவர்களிடம் தொடக்க ஊக்கம் தெரியும். அது மாதிரி வயதானவர்களிடம் பார்க்கமுடியாது. அவர்களுக்கு நம்பிக்கையே இருக்காது. அதனால், அவர்களுக்கு ஆடம்பரமான ஆடைகள், BMW போல் விலை உயர்ந்த கார்கள் தேவைப்படுகின்றன. இளைஞர்களும், சிறுவர்களும் நம் தலைவர்கள். நாமெல்லாம் அரைவேக்காடுகள்.

**சுரேஷ் ஹரி:** பிறருக்கு வழங்கும் விஷயத்தில் மற்றவர்களை, குறிப்பாக படித்தவர்களை நீங்கள் விமர்சிக்கிறீர்கள்.

**ரவிசங்கர்:** படித்தவர்களா? என்னைப் பொறுத்தவரையில் அவர்கள் கோமாளிகள். கலாசாரத்தையும் மற்றதையும் போட்டுக் குழப்பிக் கொள்கிறார்கள். எதையுமே செய்யாமல் பலனை மட்டும் அனுபவித்து, மற்றவர்களை விட தாங்கள் ரொம்ப புத்திசாலிகள் என்று நினைத்துக் கொள்பவர்கள்.

நமது உன்னத நாடு அற்புதமான ஆட்சியாளர்களைக் கொண்டது. உலகுக்கே நாம் பலவற்றை அளித்துள்ளோம். ஆனால், அந்நியர்களால் ஆளப்பட்டோம். அதையடுத்து, பிச்சைக்காரரர்களைப் போல் ஆகிவிட்டோம். இது வாழ்க்கையின் சுழற்சி ஆகும். அதற்குப் பின் மகாத்மா காந்தி நமக்களித்த அஹிம்சை என்ற ஆயுதத்தை ஏந்தி, சுதந்திரத்தை வென்றெடுத்தோம். இப்போது வேகமாக முன்னேறி வருகிறோம். நம்மையும் கணக்கில் எடுத்துக் கொள்ளும் நிலையில் இருக்கிறோம். துரதிர்ஷ்டவசமாக படித்தவர்கள் உபயோகமில்லாமல் போய்விட்டார்கள். அவர்களிடம் இன்னும் பிச்சை எடுக்கும் நிலை இருக்கிறது. அவர்கள் பாதுகாப்பில்லை என்றே நினைத்துக் கொள்கிறார்கள். பிறருக்கு உதவும் இதயமும் அவர்களுக்கு இல்லை.

**சுரேஷ் ஹரி:** வெளிநாடு வாழ் இந்தியர்கள் அளித்து உதவுவதை அமெரிக்காவில் ஒரு வானொலிக்கு அளித்த நேர்காணலில்



Rtn D *ரவிசங்கர், பவோலா மற்றும்* PRIP K R *ரவீந்திரனுடன்.*

குறிப்பிட்டிருக்கிறீர்கள். அதைப் பற்றி?

**ரவிசங்கர்:** அது ஜஸ்பா (Jazba) என்ற பண்பலை வானொலி அலைவரிசை. அது வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கானது. அமெரிக்காவில் உள்ள பல வெளிநாடு வாழ் இந்தியர்கள் தாய்நாட்டுக்கு ஏதாவது தொண்டு புரிய வேண்டும் என கருதுகிறார்கள். எப்படிச் செய்ய வேண்டும் என்று கேட்டார்கள். அதற்கு நான், நீங்கள் எந்த நாட்டில் இருக்கிறீர்களோ, பிரான்ஸோ, அமெரிக்காவோ அந்த நாட்டுக்கு விசுவாசமாக இருங்கள். அந்நாட்டுச் சட்டத்தை மதித்து நடந்துகொள்ளுங்கள் என்று பதிலளித்தேன். அப்படி ஒரு வேளை உண்மையாகவே தாய்நாட்டுக்குச் சேவை புரிய விரும்பினால், அதற்கு ஒரு வாகனம் உண்டு. RI தலைவர் பாரி ரஸ்ஸின் கூறியதைப் போல் ரோட்டரி தான். 200 நாடுகளில் பரவியுள்ளது. அதில் இணைந்து கொண்டு மனிதர்களைத் துயரத்திலிருந்து காப்பாற்றுவதற்கு உலகின் எந்த மூலையிலும் இருந்த படி சேவை புரியலாம். உத்வேகமும் இல்லை, அற்புதமும் இல்லை.



*RI தலைவர் பாரி ரஸ்ஸின், எஸ்தர் மற்றும் மாலா பாஸ்கர், ரவிசங்கர்-பவோலா தம்பதியரை கௌரவிக்கின்றனர்.*

**சுரேஷ் ஹரி:** இந்த ஆண்டு வாசக மான உத்வேகமாக இருங்கள் என்ற தத்துவத்தையும் இந்த ஆண்டு மாவட்ட ஆளுநர்களுக்கு RI இயக்குநர் கொடுத்த அற்புதம் (Miracle makers) செய்பவர்கள் என்ற தலைப்பையும் உங்களது நன்கொடையின் மூலம் செய்திருக்கிறீர்கள்.

**ரவிசங்கர்:** இந்த ஆண்டு கருத்தாக்கத் துக்கான இலச்சினையை எப்படி RI தலைவர் பாரி ரஸ்ஸின் அழகாக விவரித்தார் என்பதை அனைவரும் அறிவோம். (சூரிய அஸ்தமனம், கடல், பஹாமாஸ் கடற்கரைவற்றைச் சித்திரிக்கும் படம்) உத்வேகம், தூண்டுகோல் என்பது பெரிய வார்த்தை. அதெல்லாம் எனக்குப் பொருந்தாது. ஏதாவது அதிசயமாகச் செய்தால் மட்டுமே எனக்கும் பொருந்தலாம். நான் என்ன செய்தேன்? இதெல்லாம் எப்படி இருக்கிறது என்றால், ஒருவர் வரியை ஒழுங்காகச் செலுத்துகிறார். தனது தந்தையைக் கவனித்துக் கொள்கிறார் அதனால், விருது கொடுங்கள், கைதட்டுங்கள், பாராட்டுங்கள் என்பது எப்படியோ அப்படித் தான். நான் பெரிதாக எதையுமே செய்ததில்லை. சமூகத்தின் அடித் தளத்திலிருந்து வந்தேன். யார் உதவி னார்கள், நிச்சயம் தூண்டுகோலும் இல்லை. அற்புதமும் நிகழவில்லை. என் தந்தையை இழந்தபோது, சமூகம் எனக்கு உறுதுணையாக இருந்தது. அந்த சமூகத்துக்குத் திருப்பி ஏதாவது செய்ய வேண்டும் என்பது என் கடமை. என் தோள் மீது இருக்கிறது. அதையெல்லாம் செய்யாமல் இறந்து விட்டால் கூட மன சாட்சியிடமிருந்து வெகுதூரம் சென்றுவிடுவேன். என் பார்வையில் நான் குற்றவாளியாகிவிடுவேன். நான் ஒரு வீரனைப் போல் புன்சிரிப்போடு இறந்து போகவே விரும்புகிறேன். காரணம், சமூகம் என் கையைப் பிடித்துக் கொண்டு இந்த நிலைக்குக் கொண்டு வந்தது. யாருக்கும் உந்து சக்தியாகவும் இல்லை.

**அனிதா:** பவோலா, உங்கள் மகள் மேற் படிப்புக்காக ஆஸ்திரேலியாவுக்குப் பயணம் செல்வதற்கு முன் அவருடன் நடைபெற்ற சுவையான விவாதம் குறித்து கூறுங்களேன்

**பவோலா:** அவள் ஆஸ்திரேலியாவுக் குப் புறப்படுவதற்கு முன்னதாக, அவளிடம் எப்போது திரும்பி வருவதற்கு விரும்புகிறாய்? என்று கேட்டோம். அதற்கு அவள் திரும்பி வரும் உத்தேசமில்லை என்று பதிலளித்தாள். இந்த அழகான வீட்டை உனக்காகவே மனமுவந்து கட்டியிருக்கிறோம். ஒரு நாள் நீயும் உன் சகோதரியும் இந்த

# ரோட்டரி ஃபவுண்டேஷனை ரவிசங்கர் தேர்ந்தெடுத்தது ஏன்?



*ரவிசங்கர் மற்றும் RI தலைவர் ரஸ்ஸின் ஒப்பந்தம் கையெழுத்திட்டப்பின் பவோலா, TRF அறங்காவலர் வஹன்வதி, DG சுரேஷ் ஹரி மற்றும் TRF அறங்காவலர் மைக் வெப் ஆகியோரும் உடன் உள்ளனர்.*

**சுரேஷ் ஹரி:** *TRFக்கு இத்தகைய பெரிய தொகையை அளிக்க வேண்டும் என்று எப்படி உங்களுக்குத் தோன்றியது?*

**ரவிசங்கர்:** *நான் அரைகுறை ரோட்டேரியன் என்று ஏற்கெனவே கூறியுள்ளேன். TRF அமைப்பு குறித்து எனக்குத் தெரியாது. அதை அணுகும்போது, அலிபாபா சிந்துபாத் கதையில் வரும் குகையைப் போல் நீண்டு கொண்டே இருந்தது!*

*20-25 ஆண்டுளுக்கு முன்பு, சமுதாயத்திற்கு நாம் ஏதாவது செய்ய வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. இந்த சமுதாயம் எனக்கு எவ்வளவோ கொடுத்திருக்கிறது. அதைத் திருப்பிச் செலுத்த வேண்டியது என் கடமையும் கடனுமாகும். அதற்காக, விளிம்புநிலையில் உள்ளவர்களை, பழங்குடியினரைத் தேடிக் களைத்துப் போனபோது, ஹரி எனக்கு என்ன வேண்டும் என்று கேட்டார். அதற்கு ஒரு புற்றுநோய் மருத்துவமனை கட்ட வேண்டும், வடகிழக்கு மாநிலங்களில் பழங்குடியினருக்கும், தமிழகத்தில் தோடா இனத்தவருக்கும் பள்ளிகள் கட்ட வேண்டும் என்று தெரிவித்தேன். அதைப் போல் பாகிஸ்தானிலும் பள்ளிகளைக் கட்ட வேண்டும் என்றும் கூறினேன். காரணம், இரண்டு பேரின் ரத்தமும் ஒன்றுதான். இருவருக்கும் இடையில் நாம் பாலமாக இருக்க வேண்டும். அதை அரசியல்வாதிகள் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கக் கூடாது.*

*TRF இருக்கிறது. அதற்கு நிதியை நன்கொடை அளிக்கலாம். அதைத் தொடர்ந்து ஆண்டுதோறும் செய்யலாம். இப்படி சுற்றி அலைந்து களைப்படையத் தேவையில்லை என்று கூறினார். ஹரிக்கும் TRFக்கும் நன்றி.*

**சுரேஷ் ஹரி:** *TRF அறங்காவலர் குலாம் வாஹன்வதி, RID C பாஸ்கர் ஆகியோரிடமிருந்து என்ன பதில் வந்தது?*

**ரவிசங்கர்:** *TRFல் நீங்கள் கடைப் பிடித்த வெளிப்படைத் தன்மை, கடைப் பிடித்த வழிமுறைகள், ஒவ்வொரு நன்கொடையாளரிடமும் காட்டும் அக்கறை ஆகியவை என்னை வெகுவாகக் கவர்ந்து விட்டன. இதுபோல் வேறு எங்கேயும் கண்டதில்லை. ஹரி, காசோலையை நீங்கள் காசாக மாற்றாமல், இரண்டு மாதம் வைத்திருந்தீர்கள். எத்தகைய இந்தியர் நீங்கள்! அது மட்டுமல்ல, நான் மகிழ்ச்சியடையும் வரையில் இந்தப் பணத்தை எடுத்துக் கொள்ள மாட்டோம் என்று கூறினீர்கள்.*

*பாஸ்கர்ஜி எதுவும் தவறாகிவிடக் கூடாது என்ற நோக்கத்தில் அனைவரையும் கூர்ந்து கவனிப்பார். வாஹன்வதி நடைமுறைகளைத் தொடர்ந்து கண் காணிப்பார். மாவட்ட ஆளுநரோ மிகவும் எளிமையானவர். விமான நிலையத்திற்கு பேருந்தில் ஏறி சென்றார். சில ரோட்டரி நிகழ்ச்சிகளில் ஏகப்பட்ட செலவு செய்வதைப் பார்த்திருக்கிறேன், பதவியேற்புக்கு ஹெலிகாப்டரில் வந்து மலர் தூவுவது, யானை, ஒட்டகம் ஆகியவற்றில் வந்து பதவியேற்பது போன்ற ஆடம்பரங்களைப் பற்றிக் கேட்டிருக்கிறேன்.*

*வாஹன்வதி பெங்களூர் வந்தார். அவருடன் மதிய உணவு அருந்தினேன். இரண்டு மணிநேரம் அவருடன் விவாதித்த போது, எல்லா சந்தேகங்களையும் ஒவ்வொன்றாகத் தீர்த்து வைத்தார். 200 சதவீதம் திருப்தி அடைந்தேன். அதற்குப் பிறகே காசோலை வங்கியில் டெபாசிட் செய்யப்பட்டது. அதுதான் TRF!*

**சுரேஷ் ஹரி:** *நன்கொடை அளிக்கும் போது, ஆவணப்படுத்துவதை வலியுறுத்தி வந்தீர்கள். எங்களுக்குப் பெரிய சிரமத்தைக் கொடுத்துவிட்டீர்கள்!*

**ரவிசங்கர்:** *இந்தத் தொகையை நன்கொடையாக அளிப்பதற்கு முன் ஏராளான தயாரிப்பு வேலைகளைச் செய்யவேண்டியிருந்தது. நம் நாடு இனி பிச்சைக்காரர்கள் இல்லை, மிகச் சிறப்பாக இருக்கிறது என்றபோது, இவையெல்லாம் தேவை. ஆவணப்படுத்துதல் மிகவும் அவசியம். மனிதமனம் நிலையற்றது என்று உங்களுக்குத் தெரியும். வாழ்க்கைக்கு உத்தரவாதம் இல்லை. எனவே, உயில் முறையாகப் பதிவு செய்யப்பட்டது. நன்கொடைக்கான ஆவணத்தில் என் மனைவி பவோலாவும் என் சகோதரனைப் போல் உள்ள வணிகக் கூட்டாளி ஹரியும் கையெழுத்திட்டனர். அப்போதுதான் அது முறையாக நடைமுறைப்படுத்தப்படும். அப்போது என் கையில் ரூ.10 கோடி இருந்தது. மீதி சொத்துகளாக இருந்தன. அவற்றை விற்று, காசாக்கி நன்கொடையாக வழங்கப்படும்.*

*திருமண பெண்ணுக்குக் கணவன்தான் கதாநாயகனைப் போலத் தெரிவான்! அவள் மீதும், குழந்தைகள் பெற்றோர் மீதும் கணவன் அக்கறை செலுத்தும் போது, அவளது கண்களில் நட்சத்திரங்கள் மின்னும்! அதே சமயம் சில நண்பர்களின் குடும்பங்களில் வேறு காட்சிகளையும் பார்த்திருக்கிறேன். கணவன் ஏதாவது நல்லது செய்ய முன்வந்தால், மனைவி தடுப்பாள். அப்போது தன் கணவனை ஒரு முட்டாளாகவே அவள் கருதுவாள். இந்த நிலையில் பெண்களுக்கு ஒரு வேண்டுகோளை வைக்கிறேன். உங்களிடம் கூறிய அனைத்து உறுதிமொழிகளையும் ஒருவர் நிறைவேற்றிவிட்ட பிறகு, இந்த சமுதாயத்திற்காக ஏதாவது செய்ய முன்வந்தால், தயவு செய்து தடுக்காதீர்கள்.*



*தலைவர் பாரி ரஸ்ஸின், ரவிசங்கர், பவோலா* RID C *பாஸ்கர்,* PRIP K R *ரவீந்திரன் மற்றும்* TRF *அறங்காவலர் குலாம் வஹன்வதி.*

வீட்டை எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் கூறியிருக்கிறோம். அதற்கு அவள், எனக்குத் தேவை இருக்காது என்பதால், இந்த வீட்டை நான் விற்கக்கூடும் என்றாள். எங்களுக்கு மிகவும் வருத்தம் தான். காரணம், இந்த வீட்டில் முப்பது ஆண்டுகள் வசித்தோம். அப்போது ரவி, இந்த வீட்டை விற்றுவிட்டு என்ன செய்யப் போகிறாய்? என்று கேட்டார்? அதற்கு, காஷ்மீரில் பள்ளிக்கூடங்கள் கட்டுவேன் என்று பதிலளித்தாள். வியப்படைந்தோம். இரு பெண்களுக்கும் அப்பாவின் ரத்தம் ஓடுகிறது. அவர்களும் சமுதாயத்திற்கு செய்யவேண்டும் என்று இந்த சின்ன வயதிலேயே எண்ணுகிறார்கள்!

**சுரேஷ் ஹரி:** உங்களது ரோட்டரி சங்கத்தின் தலைவர் என்ற முறையில் இது கொடுக்கும் ஆண்டாக இருக்கும் என்றீர்கள். அது குறித்துக் கூறுங்களேன்.

**ரவிசங்கர்:** தாயின் கருவிலிருந்து பிறக்கும்போது, அங்கிருந்து எதையும் கொண்டுவரவில்லை. அதைப் போல் இறந்த பிறகு

## பென்ஸ் கார் வாங்குவீர்! ஃபவுண்டேஷனுக்கு நன்கொடையளிப்பீர்

**அனிதா ஹரி:** *பயோலா உங்களுக்குக் குருவைப் போல என்று கூறியுள்ளீர்கள். விரிவாகக் கூற முடியுமா? அத்துடன் அவர் அணிகலன் போன்றவர் என்கிறீர்கள். அப்படியென்றால் ?*

**ரவிசங்கர்:** *பயோலா எனக்கு ஆசிரியைப் போல. எந்த உள்நோக்கமும் இல்லாமல் எனக்கு நிறைய கற்றுத் தந்திருக்கிறாள். எதையும் அவள் கேட்டதில்லை. நகையோ வேறு எதுவுமோ வாங்கித் தரும்படி கூறியதில்லை. செயற்கை ஆபரணத்தை மட்டுமே கேட்பாள். அவள் அழகாக இருக்கிறாள். அவளிடம் உள்ள ஒரு நகையை மட்டும் யாரும் பறிக்க முடியாது. அதை எப்போதும் அவள் அணிந்திருப்பாள். அது புன்னகை! அந்த நகையை மட்டும் நான் காப்பாற்றினால், நான்தான் கதாநாயகன்!*

*ஒரு சம்பவம் உண்டு. அவள் எனக்கு ஒரு முறை பாடம் கற்றுத் தந்தாள். அதில் ரோட்டரி நியூஸ் ஆசிரியர் ரஷீதா பகத் சம்பந்தப்பட்டிருக்கிறார். ரஷீதா ஒரு முறை என்னிடம் பேட்டி கண்டபோது, என்னிடம் சொகுசு கார் இருக்கிறதா என்று கேட்டார். அதற்கு நான், மன்னிக்கவேண்டும், என்னிடம் ஒரு கார் இருக்கிறது. இது தான் நான் கடைசியாக வாங்கும் சொகுசு கார். இதன் விலை ரூ.72 லட்சம். இந்தப் பணத்தில் இரு பள்ளிக்கூடங்களைக் கட்டலாம். பல ஆண்டுகளுக்கு சிறுவர்கள் கல்வி கற்கலாம் என்று பதிலளித்தேன்.*

*மற்றொருநாள் என் மனைவியுடன் காலை உணவு அருந்திக் கொண்டிருந்தேன். அப்போது, அவள் என்னிடம், நம்முடைய பென்ஸ் கார் பயன்படாமல் வீணாக இருக்கிறது, அதை நீங்கள் பார்ப்பது கூட இல்லை என்றாள். அப்போது அவள் ஏதோ எனக்குப் பாடம் சொல்கிறாள் என்று புரிந்துகொண்டேன்.*

*(அப்போது ஒரு சொகுசு காரின் படத்தை திரையில் காட்டினார் ரவிசங்கர்)*

*இந்தக் கார் 3000 கி.மீ. தூரம் தான் பயணம் செய்திருக்கும். காரை ஏலத்தில் விடுகிறேன். கிடைக்கும் பணம்* TRF*க்கு அளிக்கப்படும். இந்த எண்ணத்தை எனக்குள் தூண்டி விட்டதற்கு, நன்றி ரஷீதாவுக்கு!*





RI தலைவருடன் ரவிசங்கர், PDG கேசவ் குன்வர், DG சுரேஷ் ஹரி மற்றும் TRF அறங்காவளர் மைக் வெப்.

எதையும் எடுத்துச் செல்லப் போவதில்லை. எங்களது பெங்களூர் ஆர்ச்ரட்ஸ் ரோட்டரி சங்கம் மூன்று திட்டங்களைக் கொண்டுவந்தது. ஒன்று நகரத்துக்கு நாம் ஏதாவது திருப்பித் தருவது. அதாவது, மிகவும் ஏழ்மை நிலையில் உள்ள 800 சிறுவர்களுக்காக அரசுப்பள்ளிக்குக் கட்டடம் கட்டித் தருவது. நான் கூட அதுபோன்ற அரசுப்பள்ளியில் படித்தவன்தான்.

இரண்டாவது, நகருக்கு வெளியே 125 பள்ளிகளைத் தத்து எடுத்துள்ளோம். அவற்றை மேம்படுத்தி மகிழ்ச்சிப் பள்ளியாக மாற்றுகிறோம். குழந்தைகள் அப்பள்ளிகளுக்கு உற்சாகமாக வந்து படிக்க வேண்டும் என்பது நோக்கம்.

மூன்றாவது, கேரளத்திலும், கர்நாடகத்திலும் இயற்கைச் சீற்றத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகளைக் கட்டித் தருவதாகும். கேரளத்தில் ஏற்பட்ட சோகமான பேரழிவுக்கு மனிதர்களே காரணம். பூமியைப் பிடித்துக் காத்துக் கொண்டிருந்த, மழை நீரை உள்வாங்கி சேமித்து வைத்திருந்த மரங்களை பேராசை




*இன்ஸ்டிட்யூட் தலைவர் ISAK நாசர், TRF அறங்காவலர் குலாம் வஹன்வதி, மாலா, வானதி, PRIP KR ரவீந்திரன், எஸ்தர், பவோலா, D ரவிசங்கர், RI தலைவர் ரஸ்ஸின், TRF அறங்காவலர் மைக் வெப், அலிசன், RID C பாஸ்கர், சுனிதா, DG ஹரி, RID யூன்-சூ முன், ஹூன்-ஜூ யாங் மற்றும் RISAO TRF மேலாளர் சஞ்சய் பரமார்.*

காரணமாக வெட்டிவிட்டோம். அவை நிலத்தையும் பாதுகாத்து வந்தன. அதற்காக ஒரு கோடி மரக்கன்றுகளை நடும் திட்டத்தைத் தொடங்கியுள்ளோம். கோலார் மண்டலத்தில் 10 கோடி விதைப்பந்துகளை வீசுவதற்குத் திட்டமிட்டுள்ளோம். இது மிகப் பெரிய மக்கள் இயக்கமாகும். 13 மாவட்டங்களில் மொத்தம் சுமார் 13 ஆயிரம் கி.மீ. பரப்பில் விதைகளை நடப்படுகின்றன. இவையெல்லாம் இயற்கைக்கு நாம் திருப்பித் தரும் பணியாகும். இயற்கை இல்லாமல் நாம் இல்லை. இதில் அனைத்து ரோட்டேரியன்களும் பங்கெடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இயற்கைக்குத் திருப்பித் தரும் இயக்கத்தை நாம் இணைந்து வலுப்படுத்துவோம்.

**சுரேஷ் ஹரி:** மரக்கன்றுகள் நடுவதற்கான திட்டத்திற்கு ரவி ரூ.4 கோடி அளித்துள்ளார். எங்கிருந்துதான் இந்த பலத்தைப் பெறுகிறீர்களோ, தெரியவில்லை.

**ரவிசங்கர்:** பவோலாவும் நானும் ரோட்டரிக்காக ரூ.100 கோடி நிதியைத் தவிர, இந்த மூன்று திட்டங்களுக்கும் தொடக்க நிதியாக ரூ.4 கோடி கொடுத்துள்ளோம். BSN ஹரி ரூ.50 லட்சம் கொடுத் திருக்கிறார். சில ரோட்டரியினர் முதியோர் இல்லங்களுக்குச் சென்று சாக்லேட்களை விநியோகித்துவிட்டு, புகைப்படம் எடுத்துக் கொள்வார்கள். அதை ஃபேஸ் புக்கில் பதிவு செய்வார்கள். அது போன்றவற்றையெல்லாம் நாம் ஊக்கப்படுத்தக் கூடாது

**சுரேஷ் ஹரி:** உங்களது வாழ்நாள் பார்வை மற்றும் பணி (vision-and mission) என்ன என்று கூற முடியுமா?

**ரவிசங்கர்:** நான் மனவளர்ச்சி குன்றிய குழந்தையாக இருந்தவன். எனக்கு ஓர் கனவு உண்டு. இந்த உலகில் கடல், வானம் என்ற இரண்டு எல்லைகள் தான் இருக்க வேண்டும் என்று கனவு காண்கிறேன். மொழி, இனம், சாதி, மதம் ஆகிய எல்லைகள் எல்லாம் மனிதர்கள் உருவாக்கியவை. உலக அரசாங்கம் அமைய வேண்டும் என்பது என் கனவு. அதில் நாடுகள், மாநிலங்களைப் போல் அமையவேண்டும். நாம் உலகக் குடிமக்களாக வேண்டும். அந்த உலகை ரோட்டரியால் படைக்க முடியும் என்று நம்புகிறேன். பாதுகாப்புக்கான செலவு நின்று விடும். ஏராளமான பணம் சேமிக்கப்படும். அது மனிதர்களின் துயரத்தையும் ஏழ்மையையும் துடைக்கப்பயன்படும்.

ஒருங்கிணைப்பு: ரஷிதா பகத்
வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்

# சண்டிகரில் RI தலைவர்



1. மணிமஜ்ரா அரசு பள்ளி மாணவிகள் பாங்க்ரா நடனமாடி RI தலைவர் ரஸ்ஸினை வரவேற்கின்றனர்.
2. பள்ளி மாணவர்கள் கை கழுவும் செயல்முறை விளக்கத்தை RI தலைவர் ரஸ்ஸின், எஸ்தர், PRIP ராஜா சாபூ காண்கின்றனர்.
3. மாணவியருடன் பாங்க்ரா நடனமாடும் ரஸ்ஸின் மற்றும் எஸ்தர்.
4. எஸ்தர் நடனம் கற்றுக்கொள்கிறார்.
5. PRIP ராஜா சாபூ, உஷா மற்றும் மஞ்சு தாஸ்.
6. ரோட்டரி அமைதி நினைவுச்சின்னம் அருகே RI தலைவர் ரஸ்ஸின் மற்றும் எஸ்தர்.



6



# ரஸ்ஸின்


1


2


3


4


5






7. இன்டர் சிட்டி கூட்டத்தில் RI தலைவர் ரஸ்ஸின், எஸ்தர், DG ப்ரவீன் கோயல், பாசு மற்றும் PDG ராமன் அனேஜாவுடன்.
8. பஞ்சாபின் ஃபூல்காரி தையற்கலை புரியும் பெண்கள்.
9. D 3080 ஆளுநர்களின் மனைவியருடன் உஷா சாபூ.
10. D 3080 வின் PDG க்களுடன் RI தலைவர் ரஸ்ஸின், எஸ்தர், DG கோயல் மற்றும் உஷா சாபூ.
11. PDG மதுக்கர் மல்ஹோத்ரா, PRIP சாபூவுடன் RI தலைவர் ரஸ்ஸின் மற்றும் எஸ்தர்.
12. இன்டராக்ட்ர்கள் அமைதி பேரணி நிகழ்ச்சியில்.









9






12

புகைப்படங்கள்: ரஷிதா பகத், வடிவமைப்பு: N கிருஷ்ணமூர்த்தி

# மும்பை மற்றும் ஜெய்பூரில்

## RIPN சுஷீல் குப்தாவிற்கு பாராட்டு விழா

ரோட்டரி நியூஸ் செய்திக் குழு













1. DGN ஹரீஷ் மோட்வானி, DGs ரவி கிரண் குல்கர்னி, ராஜீவ் சர்மா, ஷைலேஷ் பாலேக்கர், கல்யாண் பானர்ஜீ, அவர் மனைவி பினோத்தா, RIDE பரத் பாண்டியா, RIPN சுஷீல் குப்தா, வினிதா, மாதவி பாண்டியா, PRID அஷோக் மஹாஜன், நயன்தாரா, TRF அறங்காவலர் குலாம்வஹன்வதி சஷி சர்மா மற்றும் ஆஷஸ் கங்குலி.

2. மாதவி பாண்டியா, வினிதாவையும் RIPN குப்தாவையும் வரவேற்கிறார்.

3. RIPN குப்தாவிற்கும் அவர் மனைவி வினிதாவிற்கும் ஜெய்ப்பூரில் வரவேற்பு.

4. PDG அஷோக் குப்தாவும் அவர் மனைவி விஜயாவும் RIPN குப்தாவிற்கும் வினிதாவிற்கும் நினைவுப் பரிசளிக்கின்றனர்.





RC பாம்பே ஏர்போர்ட் தலைவர் சுகேத்து ஜாரிவாலா மற்றும் DG சஷி சர்மா RIPN குப்தா மற்றும் RIDE பாண்டியா முன்னிலையில் MoU பரிமாறிக்கொள்கின்றனர்.

RIDs 3030, 3131, 3132, 3141, 3142, 3170, சார்பில் மும்பையில் ஏற்பாடு செய்யப்பட்ட வாழ்த்து கூட்டத்தில், RIPN சுஷில் குப்தா, அவரது மனைவி வினிதாவை, RIDE பரத் பாண்டியா மற்றும் மாதவி, பாரம்பரிய பெஷ்வாய் பாக்டியுடன் வரவேற்றார்கள். PRIP கல்யாண் பானர்ஜி, TRF ட்ரஸ்ட்டி குலாம் வாகன்வதி, PRID அசோக் மகாஜன் மற்றும் பாண்டியா உரையாற்றிய பாராட்டு விழா சுறு சுறுப்பாக நடந்தது.

அவரது ஏற்புரையில், RIPN குப்தா, தனது கனவுகளையும், எண்ணங்களையும் பகிர்ந்து கொண்டார். 2021 ஜூன் 30 ஆம் தேதிக்குள், இந்தியாவில் 10,000 கிராமங்களை, பார்வைக்குறை இல்லாத கிராமங்களாக மாற்றும் தனது கனவை நனவாக்க வேண்டிக்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில், வடா மாவட்டத்தில் RC பாம்பே ஏர்போர்ட்டின் தலைவர் சுகேத்து ஜாரிவாலாவால் அன்பளிப்பாக அளிக்கப்பட்ட ஒரு ஏக்கர் நிலத்தில் தொழிற்பயிற்சி மையம் ஒன்றை அமைப்பதற்கான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் D3141 DG சஷி ஷர்மாவுடன் மூன்று வருடங்களுக்கு கையெழுத்திடப்பட்டது.

ஜெய்பூரில் RIPN குப்தாவிற்கு PDG அஷோக் குப்தா மற்றும் அஜய் கலா தலைமையில் பாராட்டு விழா நடத்தப்பட்டது.



RIPN குப்தா, DGN சங்க்ராம் பாட்டில், சந்திப் கதம், ஹரிஷ் மோட்வானி மற்றும் சுனில் மெஹ்ரா மற்றும் PDG லதா சுப்ராய்டுவுடன்.

வடிவமைப்பு: N கிருஷ்ணமூர்த்தி

# பார்வை குறைபாடுள்ள பெண்கள் ஜூடோ கற்றுக்கொள்கிறார்கள்

ரோட்டரி செய்திக் குழு

RC ஜம்மு ஆஸ்தா, D 3170, ஜம்முவில் உள்ள லூயிஸ் பிரெய்ல் பள்ளியில் 30 பார்வை குறைபாடுள்ள பெண்களுக்கு, 8 நாட்கள் ஜூடோ பயிற்சி முகாம் ஏற்பாடு செய்தது. இந்த திட்டத்தின் நோக்கம், தற்காப்புக்கலை உத்திகள் மூலம் அவர்களுக்கு அதிகாரமளிப்பதுடன், ஒரு வேடிக்கையான நடவடிக்கையில் அவர்களை ஈடுபடுத்துவது மற்றும் சமூக தனிமைப்படுத்தலை எதிர்த்துப் போராடுவதற்கு அவர்களுக்கு உதவுவதுமாகும் என ஜம்மு மற்றும் காஷ்மீர் விளையாட்டு கவுன்சிலில் ஜூடோ பயிற்சியாளராக உள்ள திட்ட இயக்குனர் சூரஜ் பன் சிங் கூறுகிறார்.

பெண்கள் பயிற்சி பெற்ற பிறகு போட்டிகளில் பங்கு பெற்றனர். ஜம்மு மற்றும் காஷ்மீர் பிளைன்ட் மற்றும் பாரா ஜூடோ சங்கத்தின் தலைவர் ரஞ்சித் கல்ரா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

“அவர்கள் குறைபாடுகள் காரணமாக, உடல் மற்றும் பாலியல் துஷ்பிரயோகத்திற்கான ஆபத்து அவர்களுக்கு அதிகமாக உள்ளது. தங்கள் வீடுகளில் இருந்துகூட தனியாக எங்கும் போக முடியாது. இந்தக் கலை அவர்கள் வீட்டிலிருந்து வெளியே போகவும், ஒரு புதிய உலகத்தை தழுவவும் அவர்களுக்கு வாய்ப்பளிக்கிறது என்கிறார் பயிற்சியாளர்.■



*குழந்தைகள் தங்கள் ஜூடோ திறமைகளை வெளிப்படுத்துகின்றனர்.*

# ஊனமுற்றோருக்கு செயற்கைக் கால்கள்



PDG Dr *ரவி அபாஜி ஊனமுற்றோருக்கு செயற்கைக்கால்கள் வழங்குகிறார்.*

குஷால் நகர் என்பது, கர்நாடகாவின் குடகு மாவட்டத்தில், மைசூருக்கும் மடிக்கேரிக்கும் இடையில் அமைந்த நகரமாகும். இரட்டை நகரமான பைலகுப்பே, தங்கக்கோவில் என்று அழைக்கப்படுகின்ற பௌத்த நாம்ட்ரோலிங் மடாலயம் அமைந்துள்ள திபெத்திய குடியேற்றத்தில் ஒன்றாகும்.

குஷால்நகர் ரோட்டரி சங்கம், D 3181, 1975ம் ஆண்டு முதல் இரண்டு நகரங்களின் மக்களுக்கு மருத்துவ முகாம்கள், நீர் வசதி களை அமைத்தல், சுற்றியுள்ள குக்கிராமங்களில் கழிப்பறை கட்டுதல் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளுடன் உள்ளூர் பள்ளி களுக்கு ஆதரவு அளித்தல் போன்ற மனிதாபிமான திட்டங்களை வழங்கி வருகிறது.

RC கோயம்புத்தூர் மிட் டவுன், D 3201 உடன் இணைந்து PDG ரவி அபாஜி அவர்கள் முன்னிலையில் 50 ஊனமுற்றோருக்கு செயற்கை அங்கங்களை வழங்கியது. “ஆறு ஆண்டுகளாக இது எங்கள் சங்கத்தின் தொடர் திட்டமாகும்'' என்கிறார் சங்க செயலாளர் பிரேம்சந்த். மற்றொரு நிகழ்வில், அமெரிக்கா மற்றும் TRFலிருந்து பெறப்பட்ட உலகளாவிய நன்கொடையிலிருந்து வாங்கப்பட்ட ரூ.65 லட்சம் மதிப்புள்ள மருத்துவ உபகரணங்களை மடிகேரியில் உள்ள அஷ்வினி மருத்துவ மனைக்கு இச்சங்கம் வழங்கியுள்ளது.■

# பொன்விழா சங்கத்துக்குப் பாராட்டு

ஜெய்ஸ்ரீ

சென்னை வடக்கு ரோட்டரி சங்கத்தின் (D 3232) பொன்விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. சென்னை இன்ஸ்டிட்யூட்டின் நிகழ்ச்சியுடன் இணைந்து அமைந்த இந்த விழாவில் RI தலைவர் பாரி ரஸ்ஸின், RID C பாஸ்கர் ஆகியோர் பங்கேற்றுச் சிறப்பித்தனர். RI இயக்குநராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பரத் பாண்டியா சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். RID இயுன்-சூ மூன் பங்கேற்றார்.

PDG G ஒளிவண்ணன், தலைவர் வெங்கடேஷ் ஆகியோர் பொன்விழா காணும் ரோட்டரி சங்கத்தின் குறிப்பிடத்தக்க 50 ஆண்டுகால செயல்பாடுகளை விவரித்தனர். சென்னையை அடுத்த நாப்பாளயம் கிராமத்தில் செய்த சமூகப் பணிகளை விளக்கிய ஒளிவண்ணன், அந்தக் கிராமத்தைக் கண்புரை (Cataract) இல்லாத ஊராக மாற்றவிட்டோம் என்றார்.

சென்னை வடக்கு ரோட்டரி சங்கம் மேற்கொண்ட பல்வேறு முயற்சிகளை பாரி ரஸ்ஸின் வெகுவாகப் பாராட்டினார்.

அனைத்து மக்களின் வாழ்க்கையிலும் மாற்றத்தை ஏற்படுத்திய உங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

RID C பாஸ்கர் பேசுகையில், ரோட்டரி சங்கம் கார்ப்பரேட் நிறுவனங்களுடன் வலுவாகக் கூட்டு சேர்ந்து பெரிய திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும். உங்களது ரோட்டரி சங்கம் இன்னும் 50 ஆண்டுகள் இது போல் சேவை புரிந்து நூற்றாண்டு விழா காண வேண்டும் என்று வாழ்த்தினார்.

RIDE பாண்டியா பேசுகையில், நாம் ஓர் அழகான உலகத்தில் வாழ்கிறோம். ஆனால், தினமும் நாளேட்டைத் திறந்தாலோ, தொலைக்காட்சியைப் போட்டாலோ ஊழல், பசி, பஞ்சம், கொடுமை, சாவு, பாலியல் வன்முறை என்று எதிர்மறையான செய்திகளைத்தான் பெறுகிறோம்.

ஆனால், இருளைப் பழிப்பதை விட விளக்க ஏற்றுவதே நல்லது என்று சீன தத்துவ ஞானி கன்ப்யூஷியஸ் கூறியதைப் போல், உங்களது நீண்ட பயணத்தில் பலரது வாழ்க்கையில் மாற்றத்தை நிகழ்த்தியிருக்கிறீர்கள். அதற்காகப் பாராட்டுத் தெரிவிக்கிறேன். நீங்கள் இருளைப் பழிக்கவில்லை. விளக்கை ஏற்றுகிறீர்கள். அதில் இருள் விலகுகிறது. கனவுகள் நனவாகின்றன என்றார் அவர்.

பல பெரியவர்களின் கடுமையான உழைப்பில்தான் இந்த ரோட்டரி சங்கம் தொய்வின்றி இத்தனை ஆண்டுகள் செயல்பட்டு வருகிறது என்பதைக் குறிப்பிட வேண்டும் என்று பாண்டியா கூறினார்.



*தி ஹிந்து குழுமத்தின் தலைவர் N ராம் அவர்களுக்கு RI தலைவர் பாரி ரஸ்ஸின் விருது வழங்கும் பொழுது PDG G ஒளிவண்ணன், சங்கத் தலைவர் N வெங்கடேஷ், RID C பாஸ்கர், RID யூன்-சூ மூன் மற்றும் RIDE பரத் பாண்டியா அவர்களும் உள்ளனர்.*

Jaishree

நிகழ்ச்சியில் தி ஹிந்து பத்திரிகை குழுமத்தின் தலைவர் N ராமுக்கு 'பொன்விழா ஆண்டு பிரபல குடிமகன் விருது' (Golden Jubilee Eminent Citizen Award) அளிக்கப்பட்டது. அதைப் போல் ரோட்டரி சங்கத்தின் உறுப்பினர்-தொழிலதிபர் சுரேஷ் கிருஷ்ணாவுக்கு 'மிகுந்த மதிப்புக்குரிய குடிமகன் விருது' (Most Valuable Citizen Award) வழங்கப்பட்டது.

போலியோ ஒழிப்பில் ரோட்டரி ஈடுபட்ட பணிகளை ராம் பாராட்டினார். ஊடகத்துறை எதிர்கொண்டு வரும் பல்வேறு சவால்களைக் குறிப்பிட்ட அவர், மின்னணு ஊடகம், டிஜிட்டல் ஊடகத்தினால் அச்சு ஊடகம் பாதிக்கப்படுகிறது என்றார்.

ஊழல் ஊடகத்திலும் ஊடுருவி விட்டது. நாங்கள் அதைப் புரிந்துகொண்டு விழிப்போடு இருந்து, கட்டுப்படுத்தாவிட்டால் தொழிலைச் சுத்தப்படுத்த முடியாது.

வளர்ந்த நாடுகளை விட இந்தியாவில் பத்திரிகை சுதந்திரம் நன்றாக இருக்கிறது என்று பலர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், உண்மையில் நிலை அப்படியில்லை. காரணமின்றி சட்டம் தவறாகப் புரிந்து கொள்ளப்படுகிறது. தவறாகவும் பயன்படுத்தப்படுகிறது, என்றார் ராம்.

கருத்துரிமை, எழுத்துரிமை, பேச்சுரிமை ஆகியவற்றைக் காப்பதும் மேம்படுத்துவதும்தான் குடிமக்களின் பிரதான பணியாக இருக்கவேண்டும்.




*சைக்கிள் பேரணியில் RI தலைவர் ரஸ்ஸின், RID C பாஸ்கர், RIDE பரத் பாண்டியா, கமல் சங்வி மற்றும் PDG T K ரூபி.*

அதே சமயம் அந்தக் கருத்துச் சுதந்திரத்தையும் சமூகப் பொறுப்புகளுடன் கடைப்பிடிக்க வேண்டும். இது குடிமக்களுக்கு மட்டுமல்ல, பத்திரிகைகளுக்கும் பொருந்தும் என்றும் N ராம் குறிப்பிட்டார்.

## மறுகட்டமைப்பு 25 திட்டம்

சென்னை கிழக்கு ரோட்டரி சங்கத்தின் மறுகட்டமைப்பு 25 (Rebuild 25) என்ற திட்டத்தை பாரி ரஸ்ஸின் தொடங்கி வைத்தார். காக்னிஸன்ட் அவுட்ரீச் (Cognizant Outreach) தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் நிதியுதவியுடன் ரோட்டரி சங்கம் 5.50 லட்சம் டாலர் (சுமார் ரூ.4 கோடி) மதிப்பிலான திட்டத்தை செயல்படுத்துகிறது. இத்திட்டத்தின் கீழ் 25 அரசுப் பள்ளிகள் புதுப்பிக்கப்படும்.

8 ஆயிரம் சிறுவர்களுக்கு நல்ல கல்வி கிடைக்கவும் அவர்களது கற்றல் திறனை மேம்படுத்துவதற்கும் பாடுபட்டு வருவதை ரஸ்ஸின் பாராட்டினார்.

இவற்றுடன், சாலைப் பாதுகாப்பு, விழிப்புணர்வு குறித்து சென்னை மிட்-டவுன் ரோட்டரி ஏற்பாடு செய்த சைக்கிள் பேரணி நடத்தப்பட்டது. அதில் 3000 ரோட்டராக்ட் மற்றும் ரோட்டரி அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் உற்சாகமாகப் பங்கேற்றனர்.

அத்துடன் பெண்களுக்கான அதிகாரமளித்தல், எழுத்தறிவு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவற்றை வலியுறுத்திப் பிரசாரம் செய்யும் வகையில் பெண்கள் மட்டுமே பங்கேற்ற கார் ஊர்வலத்தை சென்னை மிறாக்கி ஏற்பாடு செய்தது. இவற்றை RI தலைவரும், இயக்குநரும் கொடியசைத்து தொடங்கிவைத்தனர். ■




*RC கிழக்கு சென்னை தலைவர் RM நாராயணன், RI தலைவர் பாரி ரஸின், காக்னிசன்ட் அவுட் ரீச் தலைவர் பிரபு மட்டி மற்றும் RID C பாஸ்கர்.*

# CoL பற்றிய ஓர் பயிலரங்கம்

கிரண் ஜெஹரா

ரோட்டரி தலைமையகம் அமைந்துள்ள இவான்ஸ்டனில் 2019ம் ஆண்டு நடைபெற இருக்கும் ரோட்டரி சட்ட கவுன்சிலின் (CoL) கூட்டத்தை நேரில் பார்த்து அறிந்து கொள்வதற்காக 4வது, 5வது மற்றும் 6Aவது மண்டலங்களைச் சேர்ந்த மாவட்ட பிரதிநிதிகளுக்காக மாதிரி கவுன்சில் (Mock Council) கூட்டத்தை மண்டல ரோட்டரி மாநாடு அமைத்தது.

இந்தக் பிரதிநிதிகளுக்குப் பயிற்சி அளிக்கப்படும். அத்துடன் புதிய பிரதிநிதிகள் முன்னாள் கவுன்சில் பிரதிநிதிகளுடன் விவாதிக்கலாம், கருத்துகளைப் பகிர்ந்து கொள்ளலாம்.

இந்தக் கவுன்சில் கூட்டத்தில் பங்கேற்போர் செய்ய வேண்டியவை, செய்யக் கூடாதவை குறித்தும் பொதுக் கவுன்சில் கூட்டத்தில் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் குறித்தும் மாவட்ட முன்னாள் ஆளுநர்கள் TN சுப்பிரமணியன், PT ராம்குமார் மற்றும் RI துணை பொது சட்ட ஆலோசகர் (Deputy General Counsel) மவ்ரீன் நின்னேமான் ஆகியோர் விவரித்தனர்.

கவுன்சில் கூட்டம் குறித்த நேரத்தில் தொடங்கும். அங்குள்ள சபைக் காவலர்கள் (sergeants) மிகவும் கண்டிப்பானவர்கள். காபி சாப்பிடுவதற்கு என்று ஒரு நிமிடத்தையும் வீணாக்கக் கூடாது என்று சுப்பிரமணியன் எச்சரித்தார்.

கவுன்சில் கூட்டத்தில் பங்கேற்கும் பிரதிநிதிகள் தங்களது மண்டல மாநாட்டில் (zone institute) கட்டாயமாகப் பங்கேற்றிருக்க வேண்டும். அப்போது தான் பயனப்படி வழங்கப்படும். ஆன்லைன் பயிற்சியையும் பெற்றிருக்க வேண்டும். பயிற்சி பெறாதவர்களும் கவுன்சில் கூட்டத்தில் பங்கேற்கலாம், ஆனால், தங்களது சொந்தச் செலவில்தான் வரமுடியும் என்று மவ்ரீன் நின்னேமான் சுட்டிக் காட்டினார்.



*பயிலரங்கத் தலைவர் TN சுப்ரமணியத்துடன் மாவட்ட பிரதிநிதிகள்.*



PDGs *வசீகரன் மற்றும் தீபக் புரோஹித்.*

பிரதிநிதிகளின் விவாதம், நடைமுறை, 2019ம் ஆண்டுக்கான உத்தேச சட்டத்தில் அச்சிடப்பட்ட இந்திய ரோட்டரி சட்ட விதிகள் குறித்த ஆய்வு ஆகியவற்றின் பிரதிகள் பங்கேற்கும் அனைவருக்கும் வழங்கப்பட்டன. அவற்றை கவுன்சில் கூட்டத்தில் பங்கேற்பதற்கு முன் முழுமையாகப் படித்துக் கொள்ள வேண்டும் என்றும் அது தொடர்பாக என்ன செய்யலாம் என்றும் திட்டமிடவேண்டும் என்றும் மவ்ரீன் வலியுறுத்தினார்.

சட்டக் கவுன்சில் செயலியை (CoL App) பதிவிறக்கிக் கொள்ளுங்கள். அது நுழைவுச் சீட்டு, உணவு, நிகழ்வுகள் குறித்த தகவல் பரிமாற்றம் ஆகியவற்றுக்கு உதவும் என்றார்.

விதிகளைப் பற்றிப் பேச, மூன்று நிமிட நேரம் அளிக்கப்படும். அதற்குள் சுருக்கமாக, தெளிவாக, சரியாகத் தெரிவித்துவிடவேண்டும். இவற்றுக்கெல்லாம் முன்பாக மாவட்ட மாநாடுகளிலோ வேறு கூட்டங்களிலோ



இவை பற்றி விவாதித்துக் கொள்ள வேண்டும். கவுன்சில் கூட்டம் முழுவதிலும் பங்கேற்க வேண்டும். கவுன்சில் காலை 8.30 மணிக்குத் தொடங்கி மாலை 6 மணி வரையில் நடைபெறும் என்றார்.

விவாதத்தில் நடைமுறைக்கான விதிகள் அதாவது ஒரு தீர்மானத்தை எப்படி அவையில் கொண்டு வருவது, திரும்பப் பெறுவது, தீர்மானத்தை எப்படி வலியுறுத்துவது, எவையெல்லாம் விவாதிக்கப்பட வேண்டிய தீர்மானங்கள், எவையெல்லாம் திருத்தப்பட வேண்டியவை என்பன குறித்து விவரிக்கப்பட்டது.

கவுன்சில் கூட்டத்தில் இரு வித தீர்மானங்கள் விவாதிக்கப்படும். ஒன்று சட்டம் குறித்தது, ரோட்டரி சட்ட விதிகளில் திருத்தம் கொண்டுவருதல், புதிய விதி ஆகியவை பற்றியது. மற்றது, ரோட்டரி போர்டுக்கு யோசனை தெரிவிக்கும் வகையிலான பரிந்துரைகள், கருத்துகள், தீர்மானங்களைக் கூறுவது ஆகும் என்று சுப்பிரமணியன் விளக்கினார்.

ஒரு சட்டத்துக்கு ஆதரவாகவோ, எதிராகவோ பேச விரும்பினால் கூட அந்த சட்டம் கொண்டுவரப்பட்டு விவாதித்து நிறைவு பெறும் வகையில் காத்திருக்கவேண்டும். பல சமயம் நீங்கள் கூற இருக்கும் கருத்து விவாதித்தின்போதே தெளிவுபடுத்தப்படும், என்றார்.

பச்சை அட்டை தீர்மானத்துக்கு ஆதரவு. சிவப்பு அட்டை எதிரானது. இந்த அட்டைகளை விவாதத்தின்போது தான் பயன்படுத்த வேண்டும். இவை தவிர மஞ்சள் அட்டை உண்டு. திருத்தத்தைக் கொண்டுவருகிறீர்கள் என்றும் தகவல் கூற விரும்புகிறீர்கள் என்றும் அர்த்தமாகும். உங்களது சந்தேகங்களை எழுதி வைத்துக் கொண்டு தயக்கமில்லாமல் அவைத் தலைவரைக் கேட்டுவிடுங்கள் என்றார்.

இவை தவிர மஞ்சள், நீல கோடு போட்ட அட்டை நிறைவுக்காகப் பயன்படுத்தப்படும். அதை சட்டென்று காட்டினால், அவைத் தலைவர் விவாதத்தை நிறுத்தி வைப்பார். எதுவாக இருந்தாலும், அட்டைகளைப் பற்றித் தெரிந்து கொள்ளாமல் பயன்படுத்தக் கூடாது என்றும் சுப்பிரமணியன் கூறினார்.

சட்ட கவுன்சிலின் மிக முக்கிய பங்கு குறித்து விளக்கிய மவ்ரீன், RI கொள்கையின் அனைத்து அம்சங்கள், உறுப்பினர்கள், பங்கேற்பதற்கான விதிகள், சந்தா நிலுவைகள் ஆகியவை குறித்து சட்டக் கவுன்சில் பல ஆண்டு களாக விவாதித்துள்ளது. அதன் முடிவுகளில் தனிப்பட்ட முறையில் ரோட்டரி உறுப்பினர்களுக்கு கருத்து மாறுபாடு இருக்கக்கூடும். ஆனால், மாறிவரும் சூழல், முன்னுரிமைகள், தொழில்நுட்பம், வர்த்தகம் ஆகியவற்றுக்கு ஏற்ப ரோட்டரி அமைப்புகளை மதிப்பிடவும் மாற்றத்தைக் கொண்டுவரவும் சட்டக் கவுன்சில் முக்கியமான அமைப்பாக உள்ளது என்றார்.

புகைப்படம்: K விஸ்வநாதன்

# முன்மாதிரி மனிதர்கள் இல்லாமல் வாடுகிறது உலகம்!

ஜெய்ஸ்ரீ

ரோட்டரி மண்டல மாநாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேச்சாளர் மஹாத்ரியா ரா தூண்டுகோலாக இருங்கள் என்ற தலைப்பில் அனைவரையும் கவரக்கூடிய உரையை நிகழ்த்தினார்.

**அவரது பேச்சு:** பெங்களூர் ஆர்ச்சர்ட்ஸ் ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த D ரவிசங்கர் ரூ.100 கோடி நன்கொடை அளித்தார். அவர் அளித்த தொகையில் எண்ணிக்கை முக்கியமல்ல. 'அவரிடம் பணம் இருக்கிறது அதனால் நூறு கோடி கொடுத்தார்' என்று நினைத்துக் கொள்வோம். அப்படி நினைத்துக் கொண்டால் அவர் மாமனிதர் என்பதை உணரமாட்டோம். அவர் மிகப் பெரிய மனத்துடன் செயல்பட்டிருக்கிறார் என்றுதான் பார்க்க வேண்டும். அதிலிருந்துதான் நாம் எல்லோரும் ஊக்கம் பெற்று, இயன்றவரையில் கொடுக்க வேண்டும் என்று ரவிசங்கர் முடிவு செய்ததுதான் சிறந்த பண்பு.

நமது உடலில் காதிலிருந்து மூளைக்குச் செல்லும் நரம்புகளை விட கண்ணிலிருந்து மூளைக்குச் செல்லும் நரம்புகள் அதிகம். அதனால், காதால் கேட்பதை விட கண்ணால் காண்பதே நமக்குத் தூண்டுதலாக இருக்கிறது.

ஏன் இன்னும் நாம் மகாத்மா காந்தி, இயேசு கிறிஸ்து, அன்னை தெரசா ஆகியோரை மேற்கோள் காட்டுகிறோம்.

நம் மனசாட்சிக்கு ஏற்ப உண்மையாக நடந்துகொண்டால் நாம் ஒவ்வொருவருமே முன்மாதிரியாக திகழ முடியும். ரோட்டரி சங்கம் உங்களுக்குக் கொடுத்துள்ள மிகச் சிறந்த பரிசு அழகான மனம் கொண்ட நல்ல மனிதர்களை உங்களது வாழ்க்கையில் இணைத்ததுதான். நாம் 'ஓர் உலகம், ஒரு மனிதகுலம்' ("One World, One Humanity") அமைக்க வேண்டுமானால், ரோட்டரி ஒன்றுதான் சரியான வழி. அதன் ஒரே குறிக்கோள் மனித சமுதாயத்திற்குத் தொண்டு புரிவதுதான்.

RI *தலைவர் பாரி ரஸ்ஸினுடன் மஹாத்ரிய ரா.*



ரஷீதா பகத்

வாழ்க்கையில் உடல் நலம், செல்வம், அன்பு, பேரின்பம் மற்றும் ஆன்மீகம் ஆகியவற்றில் சமநிலையை அடைவதுதான் முழுமையான வாழ்க்கை வாழ்வதற் கான வழி. எவ்வளவு சாதனைகள் செய்தாலும் வாழ்க்கையில் நமக்கு முழுமை இருக்காது. நாம் எதைத் தேடிக்கொண்டிருக்கிறோம் என்பதை தெரியாமல் தேடிக் கொண்டிருப்போம்.

இவ்வாறு உத்வேகம் அளிக்கும் வகையில் மஹாத்ரியா ரா பேசினார்.

இலங்கை நிதி மற்றும் மக்கள் ஊடகத் துறை அமைச்சர் எரன் விக்கிரமநாயக பேசியபோது, அரசும், ரோட்டரியும் இணைந்து செயல்படும்போது ஆரோக்கியமான நாட்டை கட்டமைக்க முடியும் என்றார்.

இலங்கையில் ரோட்டரியின் பங்களிப்பு மகத்தானது. 2004ம் ஆண்டு சுனாமி ஏற்பட்டபோது உடனடியாகப் பணியாற்றியது ரோட்டரி அமைப்புதான். அதையடுத்து, பல பள்ளிக்கூடங்கள், மகப்பேறு மருத்துவ மனைகள் கட்டப்பட்டன.

உலகம் முழுவதும் உள்ள அரசாங்கங்களுக்கு ரோட்டரி அமைப்புகள் இரு வகையில் உதவலாம். வயதானோருக்கு ஆதரவு அளிப்பதிலும், சுற்றுச்சூழல் நலனைக் காப்பதிலும் அரசுகளுக்குத் துணை புரியலாம்.

அதைப் போல் குடிநீரைக் கையாள்வது (Water Management), மண் பாதுகாப்பு (Soil Conservation) ஆகியவற்றிலும் உங்களது (ரோட்டரி) ஆதரவு தேவைப்படுகிறது என்று இலங்கை அமைச்சர் விக்கிரமநாயக பேசினார்.

PRID அசோக் மகாஜன் பேசு கையில், எல்லைகள் இல்லாதது, ரோட்டரியினர் எந்த இடத்திற்கும் சென்று மனித குலத்துக்குத் தொண்டு புரிவது ஆகிய இரண்டும் ரோட்டரியின் பலம் என்றார்.■

## Membership Summary

As on November 1, 2018

| RI District | Rotary Clubs | No of Rotarians | Women Rotarians | Rotaract Clubs | Interact Clubs | RCC |
|---|---|---|---|---|---|---|
| 2981 | 114 | 4,782 | 228 | 37 | 232 | 189 |
| 2982 | 69 | 3,135 | 154 | 64 | 113 | 52 |
| 3000 | 129 | 5,253 | 469 | 229 | 676 | 199 |
| 3011 | 81 | 3,486 | 747 | 46 | 115 | 25 |
| 3012 | 89 | 3,681 | 802 | 46 | 130 | 56 |
| 3020 | 78 | 4,088 | 234 | 54 | 466 | 349 |
| 3030 | 90 | 4,875 | 591 | 74 | 311 | 165 |
| 3040 | 97 | 2,168 | 238 | 33 | 124 | 140 |
| 3053 | 72 | 3,137 | 564 | 9 | 56 | 95 |
| 3054 | 130 | 6,104 | 1,049 | 73 | 321 | 471 |
| 3060 | 103 | 4,355 | 546 | 59 | 130 | 141 |
| 3070 | 103 | 3,107 | 320 | 44 | 162 | 57 |
| 3080 | 79 | 3,325 | 263 | 67 | 219 | 108 |
| 3090 | 77 | 2,006 | 52 | 35 | 37 | 122 |
| 3100 | 76 | 1,836 | 108 | 9 | 75 | 146 |
| 3110 | 116 | 3,937 | 347 | 22 | 49 | 104 |
| 3120 | 76 | 3,308 | 411 | 25 | 62 | 52 |
| 3131 | 130 | 5,479 | 1,209 | 85 | 303 | 90 |
| 3132 | 99 | 3,778 | 368 | 38 | 214 | 150 |
| 3141 | 93 | 5,520 | 1,296 | 104 | 260 | 84 |
| 3142 | 94 | 3,464 | 634 | 68 | 204 | 65 |
| 3150 | 98 | 3,620 | 352 | 56 | 236 | 109 |
| 3160 | 71 | 2,431 | 130 | 19 | 48 | 81 |
| 3170 | 127 | 5,680 | 599 | 55 | 335 | 164 |
| 3181 | 75 | 3,356 | 287 | 36 | 224 | 109 |
| 3182 | 84 | 3,292 | 237 | 23 | 275 | 95 |
| 3190 | 131 | 5,112 | 683 | 117 | 364 | 50 |
| 3201 | 142 | 5,347 | 344 | 91 | 134 | 49 |
| 3202 | 130 | 5,002 | 257 | 73 | 437 | 46 |
| 3211 | 139 | 4,487 | 295 | 6 | 89 | 124 |
| 3212 | 99 | 4,198 | 379 | 92 | 280 | 142 |
| 3231 | 78 | 3,323 | 272 | 46 | 214 | 245 |
| 3232 | 113 | 4,677 | 717 | 107 | 329 | 80 |
| 3240 | 89 | 3,084 | 366 | 37 | 157 | 163 |
| 3250 | 101 | 3,975 | 703 | 48 | 210 | 176 |
| 3261 | 72 | 2,626 | 348 | 3 | 102 | 43 |
| 3262 | 90 | 3,457 | 433 | 37 | 74 | 75 |
| 3291 | 148 | 3,784 | 714 | 82 | 134 | 600 |
| **India Total** | **3,782** | **148,275** | **17,746** | **2,149** | **7,901** | **5,211** |
| 3220 | 68 | 1,946 | 273 | 75 | 202 | 72 |
| 3271 | 84 | 1,479 | 271 | 49 | 17 | 13 |
| 3272 | 163 | 2,942 | 418 | 46 | 37 | 38 |
| 3281 | 206 | 5,683 | 828 | 217 | 93 | 188 |
| 3282 | 146 | 4,151 | 452 | 108 | 48 | 42 |
| 3292 | 119 | 4,559 | 684 | 120 | 125 | 111 |
| **S Asia Total** | **4,568** | **169,035** | **20,672** | **2,764** | **8,423** | **5,675** |

*Source: RI South Asia Office*

### ரோட்டரி நியூஸ் ஆண்டு சந்தா செலுத்தும் வழிகள்:

*இப்போது நீங்கள்*
**ரோட்டரி நியூஸ் ஆண்டு சந்தாவை**
*ஆன்லைன் மூலமும் செலுத்தலாம்.*
*எங்கள் வங்கி விவரம்:*

| | | |
|---|---|---|
| Bank | : | HDFC Bank<br>SB Account |
| Branch | : | Egmore, Chennai |
| A/c Name | : | Rotary News Trust |
| A/c No. | : | 50100213133460 |
| IFSC Code | : | HDFC0003820 |

*ஆன்லைனில் பணம் செலுத்தியப் பின், உங்கள் சங்கப்பெயர், சங்கத் தலைவர்/செயலாளர் பெயர், பணம் செலுத்திய தேதி, எவ்வளவு செலுத்தினீர்கள் மற்றும்* UTR *எண் இவற்றை மறக்காமல் எங்களுக்கு இமெயில் செய்து விடுங்கள்.*

*சந்தாவை உங்கள் வங்கியில் காசோலை அல்லது ரொக்கமாக கட்டினால் உங்கள் சங்கப் பெயரை மட்டும் அங்கு குறிப்பிடுங்கள்.* “Rotary club of” *என்பதை தவிர்க்கவும்.*

### RI Exchange Rate - December 2018

**$1 = ₹70**

## Rotary at a glance

| | | |
|---|---|---|
| Rotarians | : | 1,224,591 |
| Clubs | : | 35,911 |
| Districts | : | 538 |
| *Rotaractors | : | 217,189 |
| Club | : | 9,443 |
| *Interactors | : | 539,074 |
| Clubs | : | 23,438 |
| *RCC members | : | 230,322 |
| RCC | : | 10,037 |

**Estimated*

As of Nov. 20, 2018

# சென்னை இன்ஸ்டிட்யூட்டில் மனைவியரின் சக்தி

கிரண் ஜேஹ்ரா

சென்னை இன்ஸ்டிட்யூட்டில், வருங்கால ஆளுநர்களின் மனைவியர் ரோட்டரியில் தங்கள் கணவர்களின் முன்னேற்றத்துக்கான ஆதரவு வழங்க கற்றுக்கொண்டனர். மனைவியருடன் பேசும் போது, 1976ல் ஒரு DGN மனைவியாக உஷா சாபூ ஃப்ளோரிடாவில் நடந்த RI கூட்டத்தில் (IA) கலந்துகொண்ட சம்பவங்களை நினைவுகூர்ந்தார். "அங்கு என்ன செய்வது என்பதைப் பற்றிய எந்த ஆலோசனையும் எங்களுக்குக் கிடைக்கவில்லை. ஒரு தைரியமில்லாத இந்திய இல்லத்தரசியாக, உலகம் முழுவதும் இருந்து வந்திருந்த பல பேர் ஒருவருக்கொருவர் அணைத்துக் கொள்வதையும், முத்தமிடுவதையும் பார்த்து அதிர்ச்சியடைந்தேன். முற்றிலும் அறிமுகமில்லாத ஒருவர் என் கன்னத்தில் முத்தமிட்ட போது ரோட்டரியின் எழுச்சிமிக்க கலாச் சாரத்தைப் பற்றி இன்னும் தெரிந்து கொள்ள வேண்டியிருந்தது! நீங்கள் அதிர்ஷ்டசாலிகள், நடைமுறைகளைக் கற்றுக்கொடுப்பதற்காக உங்களுக்கு பயிற்சித் திட்டம் இருக்கிறது."

சேவை பற்றிக் குறிப்பிட்டபோது, தங்களுடைய முதலாவது மருத்துவப் பணித்திட்டதுக்காக தன் கணவர் PRIP ராஜா சாபூ உடன் இணைந்து அக்டோபர் 1998ல் உகாண்டாவுக்குச் சென்ற போது, "என் வாழ்க்கை மீண்டும் புதிதாகத் தொடங்கியது. அந்தப் பணித்திட்டத்தின் தன்னார்வலராக மட்டுமே நான் இருந்தேன். மருத்துவ மனையில் தன் முறை வருவதற்காக காத்திருந்த நேரம் ஒரு குழந்தை அழுதபோது அந்தக் குழந்தையைத் தேற்றக்கூடிய தாயாகவும், மருத்துவர்களுக்கு உதவக்கூடிய செவிலியராகவும், காபி கொடுக்கும் பணியாளராகவும் செயல்பட்டேன். நீங்களும் ரோட்டரியின் நோக்கத்தை நிறை வேற்றுவதற்காகப் பணிபுரிய வேண்டும்," என அவர் கூறினார். "ஒரு ரோட்டரி உறுப்பினரின் மனைவியாக இல்லாமல் இருந்தால் இந்த அளவுக்கு நான் சாதித்திருக்க முடியுமா? எனவே அன்பார்ந்த மனைவியரே, ரோட்டரிக் காக உங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ளுங்கள். உங்களை மாற்றிக்கொள்ளுங்கள்," என்றார்.

### நீங்கள் தான் சக்தி

PRID PT பிரபாகர் அவர்களின் மனைவி நளினி சென்னையில் உள்ள VHS டயாலிசிஸ் மையம் பற்றிச் சொல்லும்போது, ஒருவருக்கோ அல்லது ஒரு சிலருக்கோ இலவசமாக டயாலிசிஸ் செய்வதற்காக ஆகும் செலவை தனிப்பட்ட முறையில் யார் வேண்டுமானாலும் செய்யலாம் என்றார். "ரோட்டரி மூலம்



*அஃப்சலுநிசா நாசர், சோனல் சங்வி, மாதவி பாண்டியா மற்றும் மாலா பாஸ்கர்.*



டயாலிசிஸ் மையம் அமைத்து ஏழைகளுக்கு இலவச சேவை அளிக்க முடியும். ரோட்டரி வாயிலாக சேவை புரிவதன் மூலம் அதன் சக்தி அதிகரிக்கிறது மற்றும் பெரிய அளவில் சமுதாயமும் அதிவேகமாகப் பலன் அடைந்துள்ளது." தனது முதலாவது வாகனக் கண்டுபிடிப்பின் போது நம்பிக்கையும் மன உறுதியும் இல்லாமல் இருந்த கார்ல் பென்ஸ் என்ற வாகனக் கண்டுபிடிப்பாளரின் வியாபாரக் கூட்டாளியும் மனைவியு மான பெர்த்தா பென்ஸின் சுவாரசிய மான வீடியோ ஒன்றை பகிர்ந்து கொண்டார்.

தாங்கள் இருவரும் முதலீடு செய்துள்ள அவருடைய கண்டுபிடிப்பு பொருளாதார ரீதியாக வெற்றிபெறும் என்பதை அவருக்கு நிரூபிப்பதற்கு, 1888ல் அவர் அதே வாகனத்தில் 106 கிமீ தூரத்துக்கு முதலாவது தேசிய வாகனப் பயணத்தை மேற்கொண்டார். பென்ஸ் காப்புரிமை - மோட்டார்வாகனம் மூலம் உலக மக்களின் கவனத்தைக் கவர்ந்ததோடு மட்டுமல்லாது, தன் கண்டுபிடிப்புக்கு நல்ல எதிர்காலம் உள்ளது என்ற அவரது கணவரின் நம்பிக்கையை பலப்படுத்தினார். "பெர்த்தா காரைக் மட்டுமல்ல ஒரு தொழிற்ச ாலையையே இயக்கினார். அதே போல, உங்கள் கணவரும் ஒரு மாவட்டத்தை வழிநடத்தக்கூடும், ஆனால் நீங்கள் தான் அவருடைய சக்தி மற்றும் நீங்கள் தான் உங்கள் மாவட்டத்தில் சேவை மேற்கொள்வதற்கு உந்துசக்தியாக இருக்க வேண்டும்," என்றார்.

மாலா பாஸ்கர் பேசுகையில், பன்னாட்டு அளவிலும் உங்கள் மாவட்டத்துக்குள்ளும் ரோட்டரி கூட்டாளிகளுக்கு உத்வேகமாகச் செயல்படுவதற்கான எந்த வாய்ப்பையும் தவற விடாதீர்கள். இந்த ஆண்டு உங்களுக்கு மிகச் சிறந்ததாக அமைய என் மனமார்ந்த வாழ்த்துக்கள்," என்று கூறினார்.

### கூட்டத்தின் போதும் அதற்குப் பின்னரும்

"உங்கள் கணவருக்கு ஆதரவளிப் பதற்கான அறிவையும் திறன்களையும் புகட்டுவதும், பயனுள்ள மற்றும் திறமையான ஆயத்தநிலையை உங்களுக்குக் கற்பிப்பதுமே பன்னாட்டுக் கூட்டத்தின் நோக்கம்," என்றார் D 3232 PDG J B காம்தாரின் மனைவி மர்லின் கம்தார், நீங்கள் பேசுவதிலிருந்து அவர்கள் கற்றுக்கொள்வதில்லை, உங்களுடைய செயல்பாடுகளில் இருந்து தான் அவர்கள் கற்றுக்கொள்கின்றனர். அவர்கள் உங்களைக் கவனிக்கிறார்கள். எனவே, உபதேசம் செய்யாதீர்கள். உங்கள் செயல்களின் மூலம் அவர் களுக்குக் கற்றுக்கொடுங்கள், என்றார்.

RIDE கமல் சங்வியின் மனைவி சோனல் மற்றும் பரத் பாண்ட்யாவின் மனைவி Dr மாதவி இருவரும், IA யில் நடைபெற்ற மனைவியருக்கான நிகழ்ச்சி மற்றும் பங்கேற்பு பற்றி விரிவாக விளக்கிக்கூறினர். "இது வாழ்க்கையையே மாற்றக்கூடிய ஒரு அனுபவம்," என்றார் சோனல். மாதவி மனைவியரிடம், "எல்லா அமர்வுகளுக்கும் வருகைப்பதிவு கட்டாயமாகும். கூட்டச் செயலியை நீங்கள் பதிவிறக்கம் செய்துகொள்ளுங்கள்," என நினைவூட்டினார்.

மனைவிகளின் முகப்பு என்பது IAயில் மிகவும் கவர்ச்சிகரமான அம்சமாக விளங்கியது. "வழக்கமாக நமது மண்டலங்களுக்கான முகப்பு எப்பொழுதுமே நிரம்பி வழிந்தது, ஏனெனில் நமது காட்சி வடிவமைப்பு வண்ணமயமானதாகவும் பார்வையாளர்களை ஏதாவது ஒரு செயல்பாட்டிலோ அல்லது நமது பாரம்பரிய நடனங்களில் ஏதாவது ஒன்றிலோ ஈடுபடுத்தக்கூடியதாக இருந்தது. எனவே உங்கள் தற்போதைய DGன் மனைவியுடன் கலந்துரையாடி உங்களுக்குரிய யோசனைகளைப் பெறுங்கள்," என சோனல் மேலும் கூறினார்.

உறுப்பினர்களாக உள்ள மனைவியர்களுக்கு கட்டணங்களில் சலுகை வழங்குவது முதல் ரோட்டரியில் இன்னர்வீல் உறுப்பினர்களுக்கான இரட்டை உறுப்பாண்மை வரையிலான விஷயங்களையும், மற்றும் தகவல்தொடர்புத் திறன்களை மேம்படுத்துவது பற்றியும் மேற்கொள்ளப்பட்ட விவாதங்களுக்கு, PDG ரவி சௌத்ரி அவர்களின் மனைவி ரிது சவுத்ரி; PDG G ஒளிவண்ணன் அவர்களின் மனைவி நளினி மற்றும் PDG பிரஃபுல் ஷர்மா அவர்களின் மனைவி வித்யோத்தமா ஆகியோர் கருத்தாளர்களாகச் செயல்பட்டனர்.

புகைப்படம்: K விஸ்வநாதன்.

# போலியோ நோய்த்தடுப்புக்கு எதிர்ப்பு பாகிஸ்தானில் குறைகிறது

ரஷிதா பகத்

உலகம் முழுவதும் ரோட்டரி போலியோ ஒழிப்புப் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. இதன் விளைவாக ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் ஆகிய நாடுகளைத் தவிர உலக நாடுகள் முழுவதும் போலியோ நோய் முற்றிலுமாக ஒழிக்கப்பட்டுவிட்டது.

பாகிஸ்தானின் கூட்டாட்சி நிர்வாகத்தின் கீழுள்ள பழங்குடி பகுதிகளில் (Federally Administered Tribal Areas) கடந்த இரு ஆண்டுகளாக ஒருவர் கூட புதிதாக போலியோ பாதிப்புக்கு ஆளாகவில்லை என்று பாகிஸ்தான் தேசிய போலியோ பிளஸ் கமிட்டி (Pakistan National PolioPlus Committee) தலைவரும் மாவட்ட ஆளுநருமான அஜீஸ் மேமன் தெரிவித்தார்.

சென்னை ரோட்டரி இன்ஸ்டியூட்டில் பேசிய அவர், பாகிஸ்தான் பழங்குடியினர் பகுதி மலைப் பிரதேசம் ஆகும். அங்கு தாலிபான்கள் உள்ளனர். பாகிஸ்தானில் 306 பேர் போலியோவால் பாதிக்கப் பட்ட போது, அந்தப் பகுதியில் மட்டும் 182 பேருக்கு பாதிப்பு இருந்தது. கடந்த இரு ஆண்டுகளாக புதிதாக ஒருவர் கூட போலியோவுக்கு ஆளானதாகத் தகவல் இல்லை என்றார்.

ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் இரு நாடுகளிலும் ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் கூட இது முன்னேற்றம் என்று குறிப்பிட்ட மேமன், 2013-14ம் ஆண்டு 306 பேர் போலியோ பாதிப்புக்கு ஆளாகி யிருந்தனர். அந்த எண்ணிக்கை தற்போது 19க்கு குறைந்துள்ளது. இதில் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள் 4 பேர், ஆப்கானிஸ்தானைச் சேர்ந்தவர்கள் 15 பேர்.

மேலும், கராச்சியில் 2.30 கோடி பேர் வசிக்கிறார்கள். ஏராளமான குடிசைப் பகுதிகள், மிக மோசமான சுகாதார நிலை, போதிய குடிநீ ர் இல்லாமை உள்ளது. அங்கே போலியோ ஒழிப்புப் பணியை நிறைவேற்றுவது பெரிய சவாலாக இருந்தது. இருந்தாலும் மிகச் சிறந்த பணியை செய்துள்ளோம். கராச்சியில் கடந்த 20 மாதங்களில் புதிதாக ஒருவர் கூட பாதிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

பாகிஸ்தானில் கடந்த ஆண்டு கூட 8 பேருக்கு போலியோ பாதிப்பு கண்டறியப்பட்டது. 2018ம் ஆண்டு அது 4 ஆகக் குறைந்துவிட்டது. ஆப்கானிஸ்தானில் 15 பேருக்கு பாதிப்பு இருப்பது தெரியவந்துள்ளது.

நைஜீரியாவில் கடந்த இரு ஆண்டுகளாக ஒருவர் கூட போலியோவுக்குப் பாதிக்கப்பட வில்லை. விரைவில் அங்கும் முழுமையாக ஒழிக்கப்பட்டுவிடும்.

பாகிஸ்தானில் தேசிய போலியோ சொட்டுமருந்து செலுத்தும் நாளில் 3.77 கோடி குழந்தைகளுக்கு சொட்டு மருந்து செலுத்தப்பட்டுள்ளது. முன்பு இப்பணியில் ஈடுபட நபருக்கு தினக்கூலியாக ரூ.250 கொடுக்கப்பட்டது. தற்போது, உள்ளூர் தன்னார்வத் தொண்டர்களைத் தேர்ந்தெடுத்து மாதம் ரூ.15 ஆயிரம் ஊதியம் கொடுத்து பணியில் ஈடுபடுத்துகிறோம்.

### ரோட்டரி - அரசு கூட்டுப் பணி

போலியோ ஒழிப்பில் பாகிஸ்தான் ரோட்டேரியன்கள் அரசாங்கத்துடன் இணைந்து செயல்பட்டு வருகிறார்கள் என்றார். தற்போது பிரதமராக இருக்கும் இம்ரான் கான் கைபர் பக்துன்காவா மண்டலத்தில் 18 மாதங்களுக்கு முன்பு  போலியோ



TRF *அறங்காவலர் மைக் வெப், பாகிஸ்தான் போலியோ ப்ளஸ் தலைவர் அஜீஸ் மேமன், பாண்டுரெங்க செட்டி,* INPPC *தலைவர் தீபக் கபூர்.*

ஒழிப்பு சொட்டு மருந்து செலுத்தும் படத்தை அஜீஸ் காட்டினார். அப்பகுதியில் அவரது கட்சி ஆட்சியில் இருந்தது. இம்ரான் கான் சொட்டு மருந்து கொடுத்த அந்தப் பகுதியினருடன் இப்போதும் தொடர்பில் இருக்கிறோம். புதிய அரசியல் தலைமையுடன் இது குறித்து விவாதித்து வருகிறோம். அவர்கள் துணை புரிவார்கள் என உறுதி கூறுகிறேன். பாகிஸ்தானிலிருந்து போலியோ முற்றிலுமாக ஒழிக்கப்பட வேண்டும்.

PRID அசோக் மகாஜனின் வழிகாட்டுதலில் ஓர் உலேமா கமிட்டி அமைத்துள்ளோம். அதில் பங்கேற்போருக்கு பயிலரங்குகளை நடத்துகிறோம். அதன்மூலம் அவர்கள் தாங்கள் அறிந்தவற்றை சமுதாயத்தில் பொதுமக்களிடம் எடுத்துக் கூறி பணியாற்றுகிறார்கள். தங்களது குழந்தைகளுக்குச் சொட்டு மருந்து போடுவதை ஆட்சேபித்து வந்தது இப்போது பெருமளவுக்குக் குறைந்துவிட்டது. அப்படி மறுக்கும் சிலர் வசிக்கும் பகுதிகளிலும் உள்ள சுகாதாரச் சீர்கேடுகளை அகற்றவும், குடிநீர், மின்சார வசதிகளை அளிக்கவும் உதவி வருகிறோம். தீவிரமாக எதிர்ப்பவர்கள் யாரும் இல்லை. இந்த விஷயத்தில் உலேமா கமிட்டி செய்த பணிக்கு நன்றி கூற வேண்டும் என்றும் அஜீஸ் மேமன் கூறினார்.

பாகிஸ்தான்-ஆப்கானிஸ்தான் எல்லைப் பகுதிகள் மிகவும் சிரமமான இடங்கள் ஆகும். எல்லையில் பேருந்துகளைச் சோதனையிடும் ராணுவத்தினர், காவல் துறையினர் முகாம் பகுதிகளில் போலியோ சொட்டுமருந்து முகாம்களை நடத்தினோம். கடந்த ஆண்டு தனியார் நிறுவனம் இது குறித்து மதிப்பீடு செய்தது. அதில், இதுபோன்ற இடங்களில் ரோட்டரி முகாம்கள் மூலம் மொத்தம் 35 லட்சம் குழந்தைகளுக்குச் சொட்டு மருந்து கொடுக்கப்பட்டது தெரியவந்தது.





ஆப்கானிஸ்தானில் காந்தஹார் பகுதியில் போலியோ இருப்பது தெரியவந்தது. ஆனால், அது பலத்த பாதுகாப்பான பகுதி. குறிப்பிட்ட ஒரு பகுதியில் ஒரு குழந்தைக்குக் கூட சொட்டு மருந்து போடப்படவில்லை. காந்தஹாரில் மட்டும் 10 பேருக்கு போலியோ பாதிப்பு இருப்பது தெரியவந்தது.

ஆப்கானிஸ்தான் எல்லைப் பகுதியில் 2,450 கி.மீ. மிகவும் நுட்பமான இடங்கள் ஆகும். ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டுக்கு மக்கள் இடம் மாறும்போது, குழந்தைகளைத் தேடிப் போய் சொட்டு மருந்து கொடுப்பது மிகவும் சிரமமாக உள்ளது.

பாகிஸ்தானில் கடந்த ஜனவரி வரையில் நோய்த்தடுப்புப் பணியில் இருந்தவர்களில் 187 பேர் கொல்லப்பட்டனர். க்வெட்டா நகருக்கு வெளியே சகினா (40) என்பவரும் அவரது 15 வயது மகளும் துப்பாக்கிச் சூட்டுக்கு இரையாயினர். அந்தப் பெண்ணின் கணவர் டாக்சி டிரைவர். உயிரிழந்த பெண் தவிர 5 குழந்தைகள் இருக்கிறார்கள். கடைசிக் குழந்தைக்கு 5 மாதம்தான் ஆகிறது. அவர்களுக்கு உடனடியாக ரூ.5000 காசோலை கொடுத்து உதவினோம். மற்றவர்களின் உதவியோடு அவர்களுக்கு ஒரு வீடும் கிடைக்கச் செய்தோம்.

PRIP KR ரவீந்திரன் தலைவராக இருந்தபோது பாகிஸ்தானில் பயணம் செய்துள்ளார். ‘போலியோ ஒழிக்கப்பட்டவுடன் இந்தப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள தன்னார்வ தொண்டர்களை மறந்துவிடுவோம். எனவே, அவர்களுக்கு தொடர்ந்து ஏதாவது செய்தாக வேண்டும்’ என்று யோசனை கூறினார். எனவே, அவர்களுக்கு உரிய பலன் கிடைப்பதற்காக ரோட்டரி போலியோ நினைவு உதவித் தொகை (Rotary PolioPlus Memorial) என்ற பெயரில் ஐந்து உதவித் தொகைகள் நிறுவப்பட்டுள்ளன.

நிகழ்ச்சியில் INPPC தலைவர் தீபக் கபூர் பேசினார். இப்படிக் கஷ்டப்பட்டு செய்த காரியத்தை 10 நிமிடத்துக்கு குறைவான நேரத்தில் சிதைத்து விடலாம். குறிப்பாக கடந்த அக்டோபர் மாதம் நடந்தது போல் ஊடகங்கள் இந்தியாவில் மீண்டும் போலியோ வந்துவிட்டது என்று பரப்பிவிட்டால் போதும் அவ்வளவுதான்!

ஆனால், ஒரு முக்கியமான விஷயத்தைக் கூற விரும்புகிறேன். அந்த ஒவ்வொரு 10 நிமிடத்துக்கும் ராஜஸ்ரீ பிர்லா ரூ.1,700 செலவிட்டு வருகிறார். இதைப் போல் பல ஆண்டுகளாக அவர் கொடையளித்து வருகிறார். அந்தத் தொகுப்பு நிதி 1.20 கோடி டாலரை எட்டும் வரையில் அவர் நன்கொடை அளித்து வருகிறார். இதை அனைவரும் மனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும் என்றார்.

புகைப்படங்கள்: ரஷிதா பகத்




# போலியோ இல்லாத உலகத்திற்கான விழிப்புணர்வு பேரணிகள்

ரோட்டரி செய்திக் குழு



பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் தவிர உலகில் உள்ள பெரும்பாலான நாடுகள் போலியோ இல்லாதவையாக இருந்தாலும், பயங்கரமான வைரஸ் தாக்குதலுக்கு எதிராக மக்கள் தங்கள் குழந்தைகளுக்கு நோய்த்தடுப்பு செய்வதைத் தொடர ரொட்டேரியன்கள் வலியுறுத்துகின்றனர். அதிகாரப் பூர்வமாக, 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் இந்தியாவில் போலியோ-இல்லாமல் இருந்தாலும், வைரஸ் இன்னமும் நம் அண்டை நாடுகளில் பதுங்கியிருக்கும்போது, நம் குழந்தைகளையும் நோய்தாக்க அதிக வாய்ப்புகள் உள்ளது. வைரஸுக்கு எந்த எல்லைகளும் தெரியாது, போலியோ இன்னும் உள்ள நாட்டிலிருந்து வரும் போலியாவால் பாதிக்கப்பட்ட நபரிடமிருந்து அது பரவலாம் என, நம் ரோட்டரி தலைவர்கள் வலியுறுத்துகிறார்கள்.

போலியோவில் இருந்து குழந்தைகளைப் பாதுகாக்க தடுப்பூசி உருவாக்கிய ஜோனஸ் சால்க்கின் பிறந்த நாளை நினைவுகூறும் வகையில் அக்டோபர் 24, உலக போலியோ தினமாக அனுசரிக்கப்படுகிறது. இந்த நாளில், பல சங்கங்கள், பேரணிகள் மற்றும் நிகழ்ச்சிகள் மூலம் விழிப்புணர்வை உருவாக்கி, தங்கள் குழந்தைகளை NIDக்களின்போது நோய்த்தடுப்பு செய்யவும், தங்களைச் சுற்றி உள்ள பகுதிகளை ஆரோக்கியமாக




2

1. *தில்லியில் INPPC தலைவர் தீபக் கபூர் கார் பேரணியை துவக்கி வைக்கிறார்.*

2. *கொல்கத்தாவில் பங்கேற்கும் ரோட்டரியினர்.*

3. *மும்பையில் கார் பேரணியில் பங்கேற்கும் PRID அசோக் மஹாஜன்.*



3

பராமரிக்கவும், மக்களை அறிவுறுத்துகிறது.

**சில நிகழ்வுகள் பற்றிய ஒரு கண்ணோட்டம்:**

## D 3011

தட்டம்மை, ரூபெல்லா மற்றும் போலியோ ஆகியவை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஒரு கார் பேரணி INPPC, RI மாவட்டங்கள் 3011, 3012 மற்றும் இன்னர் வீல் மாவட்டம் 301 ஆகியவற்றால் கூட்டாக ஏற்பாடு செய்யப்பட்டது. INPPC தலைவர் தீபக் கபூர் மற்றும் DG வினய் பாட்டியா ஆகியோர் பல்வேறு இடங்களில் இந்த பேரணியைத் துவக்கினர். பேரணியின் முடிவில், RIPN சுஷில் குப்தா மற்றும் RID C பாஸ்கர் ஆகியோர் ஒரு பெரிய கூட்டத்தில் உரையாற்றினர். உலக சுகாதார அமைப்பு மற்றும் யுனிசெஃப்பிலிருந்து வந்திருந்த அதிகாரிகள் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

## D 3141

PRID அஷோக் மஹாஜன், முலுன்ட் மும்பையில் ஒரு கார் பேரணியைத் துவக்கி வைத்தார். அதில் 125 ரொட்டேரியன்களும் பல ரோட்டராக்டர்களும் கலந்து கொண்டனர்.

## D 3291

கொல்காத்தாவிற்கு ஒரு பாராட்டு நிகழ்ச்சிக்கு வந்திருந்த RIPN சுஷீல் குப்தா மற்றும் வினிட்டா ஆகியோர், ரோட்டரி சதானில் இருந்து ஒரு கார் பேரணியை கொடியசைத்து துவக்கி வைத்தனர். நிகழ்ச்சிக்காக 72 பிரகாசமாக அலங்கரிக்கப்பட்ட கார்களுடன் 26 கிளப்களில் இருந்து சுமார் 300 பங்கேற்பாளர்கள் பதிவு செய்திருந்தனர். PRID சேகர் மேத்தா, DG முகுல் சின்ஹா, PDGகள் டெபாசிஷ் மித்ரா, ரவி செகால் மற்றும் ரமேஷ் அகர்வால் (D 3011) ஆகியோரும் கலந்து கொண்டனர். பேலூர், கல்கத்தா, கல்கத்தா சென்ட்ரல் மற்றும் கல்கத்தா மேஃபேர் சங்கங்கள் இந்தப் பேரணியை ஏற்பாடு செய்தது.■

# லேயில் நரோபா திருவிழா

ப்ரீதி வர்மா லால்

கடல்மட்டத்திலிருந்து 11,562 அடி உயரத்தில் ஒரு ஜோடி பலவீனமான நுரையீரல்கள் மூச்சுவிட திணறுகின்றன. அவற்றிற்கு அதிக ஆக்சிஜன் தேவைபடுகிறது. சலிப்பூட்டும் புத்திமதிகள் தேவையில்லை. ஆனால் லேயின் குசோக் பகுளா ரிம்போசி விமானநிலையத்தில், பயணப்பைகள் வந்துசேரும் முன்னரே எச்சரிக்கை வருகிறது. 24 மணிநேரம் ஓய்வெடுக்கவும். ஊரை சுற்றிப்பார்க்க வெளியே போகவேண்டாம். பகலில் தூங்கவேண்டாம். உங்களுக்கு மன குழப்பம் ஏற்படக்கூடும். உங்களுக்கு மூக்கில் இரத்தம் வடிந்தால், தலைவலி அல்லது குமட்டல் ஏற்பட்டால் மருத்துவரை அணுகவும். மதுபானத்தையும் காஃபினையும் தவிர்க்கவும்.

ஐந்து நாள் நரோபா திருவிழாவிற்காக உள்ளத்தில் பக்தியுடன் உலகின் 22வது உயரமான விமானநிலையத்தில் இறங்கினேன்.

என் மனது 1,000 வருடங்கள் பின்னால் சென்றது. நரோபா என்ற சிறுவனை நினைத்துக்கொண்டேன் (1016-1041), அவர்தான் பிற்காலத்தில் நாலந்தா பல்கலைகழகத்தின் வடக்கு வாயிலின் காவலாளி ஆனார், முக்தியடைந்து வஜ்ராயனா புத்த கொள்கையின் முக்கிய ஆறு யோகங்களை உருவாக்கியவர். அவர் வஜ்ராயனாவின் 84 மஹாசித்தர்களில் ஒருவராக கருதப்படுகிறார், நரோபா முக்தியடைந்த நாள் புகழ்பெற்றது, அன்று தக்கினிகள் அவருக்கு ஆறு எலும்பினலான ஆபரணங்களை கொடுத்துவிட்டு விண்ணில் பறந்தனர்.

அந்த ஆறு எலும்பு மாலை 2018ஆம் ஆண்டு நரோபா திருவிழாவிற்கு என்னை ஈர்த்தது. ஹெமிஸ் மடத்திற்கு செல்லும் சாலை கரடுமுரடானது, மிக உயரத்தில் ஆளரவம் இல்லாத இடத்தில் உள்ளது. அறிமுகம் இல்லாத வழியில் ராஞ்சோ பள்ளியும் (இந்தி சினிமா 3 இடியட்ஸில் காட்டப்பட்டது) கைலாஷ் கேர், சோனு நிகம், ஸ்வர்னஸ் மிஸ்ரா போன்ற பாடகர்களின் படங்கள் ஒட்டப்பட்ட லட்சக்கணக்கான திருவிழா சுவரொட்டிகள் இருந்தன. நான் அறிமுகமான முகங்கள், பழமையான மடங்கள், கொப்பளிக்கும் இந்துநதி, துடிப்பான கிராமங்கள் வழியாக 17ஆம் நூற்றாண்டு ஹெமிஸ்ஸுக்கு விரைந்தேன்.

விழாவின் முக்கிய இடத்தை சுற்றி மக்கள் நெரிசல் அதிகம் இருந்தது, இதை 'இமயமலையின் கும்பமேளா' என்று அழைப்பார்கள். ஆனால்



*ஹெமிஸ் மடம்*



நரோபா திருவிழாவில் பாரம்பரிய நடனம்.

இது 12 வருடங்களுக்கு ஒருமுறை கொண்டாடப்படும் பெரிய நரோபா இல்லை. அந்த வழக்கத்தை மாற்றி, முதல்முறையாக 2016 ஆண்டு பெரியத் திருவிழாவிற்குப் பிறகு இந்த திருவிழா நடத்தப்பட்டது.

சிவப்பு கம்பளத்தில் அமர்ந்துகொண்டு, கையாபரணங்கள், வளையல்கள், மகுடம், காதணிகள், கழுத்து ஆபரணங்கள் மற்றும் கோர்க்கப்பட்ட ஆபரணங்களுக்காக காத்திருந்தேன். இந்த ஆபரணங்களை பார்த்தாலே புனித ஆசி கிடைப்பது உறுதி எனவே மிருகத்தனம், பசி அரக்கன், மற்றும் நரகம் ஆகிய மூன்று கீழ்மையான கதவுகள் மூடப்படும் என்று பக்தர்கள் நம்புகிறார்கள்.

சாமந்திப்பூவண்ண குடையுடன் பல்லக்கு நெருங்கிவரும்போது பெரிய ஜாலராக்களின் ஒலி உச்சத்தை அடைந்தது. இளவயது புத்ததுறவிகள் மந்திரங்களை முணுமுணுத்தவாறு எழுந்து நின்றனர். ஒரு மனிதர் டோல்ஸ் கபானா கூலிங்கிளாஸ் அணிந்துகொண்டு கையில் பூஜை சக்கரத்துடன் செல்கிறார். இளஞ்சிவப்புநிற ஆடையில் ஒரு சிறுமி விரைந்துசென்று, பல்லக்கை பார்த்து கூச்சலிடுகிறாள். அதிக நம்பிக்கைகொண்டவர்கள் பக்தியுடன் நரோபா அவர்களுக்கு அருள்புரிவார் என்ற நம்பிக்கையில்அங்கே அமர்ந்திருந்தனர். அவர்கள் எவ்வளவு தூரத்திலிருந்து வந்திருந்தாலும்.

ஊதுபத்தி மணம் அந்த இடத்தை நிரப்பியது, குழல் இசை க்கருவிகள், மத்தளங்கள், தாரைகள், ஜால்ராக்களின் ஓசை விண்ணில் எதிரொலித்தது. கோயிலின் உள்ளே செல்ல அனுமதியில்லை, புகைப்படம் எடுக்க தடைசெய்யப்பட்டு இருந்தது. கண்டிப்பான பாதுகாவலர்கள் கூட்டத்தை ஒழுங்குபடுத்தினார்கள், ஆபரணங்களை பார்க்க சிறிது நேரம்கூட அதிகம் கிடைக்கவில்லை. நான் அதை நொடிப்பொழுது பார்த்தேன். அவ்வளவுதான்.

பாரம்பரிய நடனங்கள், சமய உரைகள், நரோபா கூட்டுறவு அளித்த அதிகாரப்பூர்வ உணவு, லடாக்கின் முதல் EDM CD வெளியீடு, பெரிய கூடாரத்தில் பனிமூடிய சிகரங்களை பார்த்துக்கொண்டே சாதம் மற்றும்



பாரம்பரிய உடையில் லடாக்கின மகளிர்.

## என்ன உண்ணலாம்

**துக்பா** : வேகவைத்த காய் கறிகளுடன் கூடிய நூடுல்ஸ் சூப், கோழிக்கறி, பன்றி இறைச்சி, மாட்டிறைச்சி அல்லது ஆட்டுக்கறி துண்டுகளுடன்.

**டிக்மோ** : புளிக்கவைத்த ரொட்டி சேர்த்த காய்கறி (அ) மாமிச குழம்பு.

**காம்பிர்** : தடிமனான ரொட்டி.

**மோக்துக்** : அவசியம், மோமோஸ் கலந்த சூப்

**ஸ்க்யு** : மாமிசம்/காய்கறி களுடன் சமைத்த கட்டைவிரல் அளவுள்ள ரொட்டிகள் கலந்த குழம்பு.

**சாங்** : புளிக்கவைத்த உள்ளூர் பானம்.

**சுப்ரி** : யாக்கின் பாலில் தயாரிக்கப்பட்ட வெண்ணெய்


ஆறு - எலும்புகள் ஆபரணத்தை தரிசிக்க காத்திருக்கும் புத்தத் துறவிகள்.

காய்கறி உணவு. கடைகளில் உள்ளூர் கைவினை பொருட்கள் நிரம்பி இருந்தன, சிக்கலான நகை அணிந்த பெண்கள் பெரிய பிளாஸ்கிலிருந்து யாக்கின் பாலில் தயார்செய்த உப்பு கலந்த தேநீரை ஊற்றிக்கொடுத்து கொண்டு இருந்தனர்.

நரோபாவின் 12வது அவதார புனிதர் கைல்வாங் ட்ருக்பா, ட்ருக்பா வம்சத்தின் தற்கால தலைவர் கலந்து கொள்ளவில்லை. ஆனால் நான் மாண்புமிகு துக்சேய் ரின்போச்சே வின் காலடியில் அமர்ந்தேன், அவர் இரக்கம், சுற்றுசூழலை பாதுகாப்பதின் அவசியம், குப்பை போடாதிருத்தல், பிளாஸ்டிக்கை பயன்படுத்தாமை, புத்தமத ஒழுக்கத்தை தொடருதல் பற்றி பேசினார். நான் தங்கும்விடுதிக்கு திரும்பும்போது, புனிதர் கைல்வாங் ட்ருக்பாவால் தொடங்கப்பட்ட காப்பாளர் இல்லாத விலங்குகளுக்கான மீட்பு மற்றும் பாதுகாப்பு மையத்திற்கு சென்றேன், அங்கே காயமடைந்த, கைவிடப்பட்ட நாய்கள், ஒட்டகங்கள், கழுதைகள், குதிரைகள், பறவைகள் போன்றவை பராமரிக்கப்படுகின்றன. இந்த குளிர் பாலைவனத்தில், இரக்கத்திற்கு ஒரு இடம் கிடைத்தது.

மற்றொரு நாள், புத்தர் அமிடபாவின் தங்காவை பார்க்க ஹெமிஸ்ஸுக்கு மற்றொரு கரடுமுரடான பயணம். இது உலகில் உள்ள பெரிய தங்காக்களில் ஒன்று, புத்தர் அமிடபாவின் இந்த 60 அடி நீள பட்டால் அலங்கரிக்கப்பட்ட நீண்ட கொடி நரோபா திருவிழாவின் 2ஆம் நாள் விரித்துவைக்கப்பட்டது. பொதுமக்கள் பார்வைக்காக காலை 8 மணியிலிருந்து மதியம்வரை நான்கு நாட்கள் இந்த தங்கா உலோக ஏணிமீது விரித்துவைக்கப்படுகிறது.

ஹெமிஸின் முக்கிய கோயிலின் படிகளை நான் அடைந்தபோது, ஒரு பனி வெள்ளம் நீலநிற வானிலிருந்து இறங்கியது. அறிவியலில் இதை லேச ான பனிபொழிவு என்பர், குறைந்த அளவு பனி அல்லது பனி இல்லாத காரணத்தால் இது உருவாகிறது. ஹெமிஸில், இந்த பனி வெள்ளம் நரோபாவின் ஆசி என்று நான் நம்புகிறேன்.


ஹெமிஸ் மடத்தில் புத்தர் சிலை.

புகைப்படங்கள்: ப்ரீதி வர்மா லால்
வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்

Rotary
RI Dist. 3201



Rtn. Barry Rassin
RI President 2018-19



Rtn. A V Pathy
Dist. Governor 2018-19



Rtn. CJ Ragunathan
Chairman - CASCADE 2019

# 2019 CASCADE

## ROTARY DISTRICT 3201 CONFERENCE

**Feb 16 & 17** Le Meridien COIMBATORE

**FRIENDSHIP**

**FELLOWSHIP**

**ELEGANT VENUE**

**EMINENT SPEAKERS**

**SCINTILLATING ENTERTAINMENT**

**STALLS TO BUST UR PURSE**

**ENJOY KONGU HOSPITALITY**

**FABULOUS MENU**

**& MUCH MORE**

**LET'S MAKE CASCADE A FAMILY EVENT**

**For Registration Contact : 98422 33402**

Hosts: **Rotary Clubs of Coimbatore Region**

Secretariat
**Rtn. Pragash Angapan** (Midtown)
SRI ANGAPPA TRANSPORTS, 104, Main Road, Meena Estates, Coimbatore – 641028.
**M** : +91 9442611525 / 7904166089 **E** : conferencecascade2019@gmail.com



# இவர் கவனம்-நிலையான செயல்நிரல்

**கஸ்டட் அங்லேஸரியா**
*ஆட்டோமொபைல் விநியோகம்*
RC *ரட்லம்* - D 3040

கஸ்டட் அங்லேஸரியா ஒரு மூன்றாம் தலைமுறை ரொட்டேரியன், ரோட்டரி இவரின் இரத்தத்திலேயே கலந்திருக்கிறது. 1989 ஆண்டில் ரோட்டரியில் சேருவதற்கு முன்பு, இன்டராக்டர் மற்றும் ரோட்டராக்டராக இருந்திருக்கிறார். அவருடைய அப்பா TS அங்லேஸரியா ஒரு முன்னாள் மாவட்ட கவர்னர் மற்றும் அவருடைய தாத்தா ஜி டி அங்லேஸரியா, 1962ல் ரட்லத்தில் 4,000 சதுர அடியில் ரோட்டரி அரங்கத்தை கட்டுவதற்கு காரணமாக இருந்தவர்.

மொத்தம் 111 உறுப்பினர்கள் உள்ள அவருடைய சங்கத்தில் 65 சதவீதம் பேர் ரோட்டரியில் சேருவதற்கு முன்பு ரோட்டராக்டராக இருந்தவர்கள் என்று பெருமையுடன் பகிர்ந்து கொள்கிறார் இந்த DG.

அவருடைய குழு செயல்படுத்தும் நிலைத்து நிற்கும் பல்வேறு சேவைத் திட்டப்பணிகளை நேரடியாக அனுபவிக்கும் உணர்வை பெறுவதில் மகிழ்ச்சியாக இருக்கிறார். “ஒன்பது டயாலிசிஸ் மையங்கள், உஜ்ஜைனில் ஒரு இரத்த வங்கி, பத்து பிசியோதெரபி மையங்கள் மற்றும் வெறும் 5 ரூபாயில் மதிய உணவு/இரவு உணவை வழங்கும் உணவு மையங்கள் போன்றவற்றை நாங்கள் நடத்துகிறோம்.’’ 5 முதல் 7 புதிய டயாலிசிஸ் மையங்கள், மேலும் ஒரு இரத்த வங்கி, விலங்கு பராமரிப்புக்கென ஒரு ஆம்புலன்ஸ், ஒரு மேமோகிராபி பரிசோதனை வேன் மற்றும் 100 E-லேர்னிங் மையங்கள் போன்றவற்றை இந்த வருடத்தில் ஆரம்பிக்க அவர் திட்டமிடுகிறார்.

உறுப்பினர் சேர்க்கையில் 25 சதவீதம் அதிகரிக்கத் திட்டமிடுகிறார், மேலும் 10 சதவீதத்திற்கு அதிகமாக பெண் உறுப்பினர்களையும் சேர்த்திருக்கிறார். இந்த மாவட்டத்தில் அங்கீகரிக்கப்படாத ரோட்டராக்ட் சங்கங்கள் அதிகளவு இருப்பது தான் மிகப்பெரிய சவால் என்று சொல்கிறார். “இந்த சங்கங்களைப் பற்றிய புள்ளிவிவரங்களை இப்போது ஒழுங்குப்படுத்துகிறோம்’’ என்கிறார் அவர்.

இந்த வருடத்தில் அங்லேஸரியா அவருடைய மாவட்டத்திலிருந்து TRF நன்கொடையை, சராசரி வசூலான $100,000ஐ விட மூன்று மடங்கு அதிகரிக்க நம்பிக்கை கொண்டுள்ளார்.

# உங்கள் ஆளுநர்களுடன் ஒரு சந்திப்பு

ஜெய்ஶ்ரீ

# TRFக்கான நிதியை மேம்படுத்துவேன்



**பர்ஜேஷ் சிங்கல்**
*பங்குச்சந்தை தரகர்,* RC *ஜலந்தர்,* D 3070

1992 ஆண்டிலிருந்து அவர் ஒரு ரொட்டேரியனாக இருக்கிறார். இதுவரை 200 புதிய உறுப்பினர்களை சேர்த்திருக்கிறார் மற்றும் “ஒட்டுமொத்த உறுப்பினர் சேர்க்கையில் 10 சதவீதம் பேர் பெண்களாக இருந்தாலும்கூட மாவட்டத்தில் சேவைப்பணிகளைச் சுறுசுறுப்பாக ஈடுபடுகிறார்கள், மேலும் மற்றொரு 10 சதவிகித எண்ணிக்கையை அதிகரிக்க நான் செயல்படுகிறேன்'' என்று சொல்லி உற்சாகமாக இருக்கிறார்.

மேலும் ரோட்டரி கிளப் சென்ட்ரலில் அனைத்து ரோட்டரி சங்கங்களும் தங்கள் இலக்குகளை பதிவேற்றம் செய்திருப்பதால், மகிழ்ச்சியுடன் அவர் இருக்கிறார் மற்றும் வருடம் முடிவதற்குள் மை ரோட்டரியில் சங்கங்களின் பதிவை 100 சதவீதமாக மாற்ற இலக்கு நிர்ணயித்திருக்கிறார்.

TRF க்கு நன்கொடையளிப்பதைப் பற்றிச் சொல்லும்போது, 30 சதவீத சங்கங்கள் மற்றும் 70 சதவீத ரொட்டேரியன்கள் பவுண்டேஷனுக்கு நன்கொடையளிப்பது தான் இதுவரை நடைமுறையாக இருக்கிறது, இதை தலைகீழாக மாற்றி 97 சதவீத சங்கங்கள் மற்றும் 70 சதவீத ரொட்டேரியன்களை TRFக்கு பங்களிக்க வைக்கப்போவதாக சிங்கல் சொல்கிறார். “அது வெறும் $50 அல்லது $100 இருந்தாலும் கூட போதும்தான். அனைத்து ரொட்டேரியன்களும் பவுண்டேஷனுக்கு கொடுக்கவேண்டும் என்பது தான் முக்கியம். இந்த மாவட்டத்தில் இது அமோக வரவேற்பைப் பெற்றது. அதனால் ஒரு கணிசமான பங்களிப்பை நான் எதிர்பார்க்கலாம் என எனக்குத் தெரியும். இந்த வருடத்தில் ஐந்து முக்கிய நன்கொடையாளிகள் எங்களிடம் இருக்கிறார்கள்.''

CSR பங்களிப்புடன் WinS திட்டப்பணிகளை செயல்படுத்துவது மற்றும் 2022 ஆண்டுக்குள் இந்தியா-பாகிஸ்தான் எல்லையில் ஒரு அமைதிப்பூங்காவை ஏற்படுத்துவது போன்ற சேவைத்திட்டப்பணிகளுக்காக அவர் செயல்திட்டம் வைத்திருக்கிறார். D 5080 சங்கத்தைச் சேர்ந்த PDG கீஸ் தலைமையில் ஒரு ஒன்பது உறுப்பினர் கமிட்டி இந்த நோக்கத்திற்காக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வருடம் முடிவதற்குள் மாவட்டம் முழுவதிலும் 25,000 மரக்கன்றுகளை நடுவதற்கு அவர் இலக்கு வைத்திருக்கிறார்.

# சவால்கள் மூலம் ஊக்கப் படுத்துகிறார்.

**பிரவீண் கோயல்,**

*குற்றவியல் வழக்கறிஞர்*
RC *சண்டிகார்,* D 3080



அவருடைய திட்டப்பணிகளில் அனைத்து ரொட்டேரியன்களும் பங்கேற்பதை ஊக்கப்படுத்த, ‘இரு வார சவால்’ என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தி உள்ளார். சமுதாயத்தில் பறவைக் குளியல் தொட்டிகள், சாலை யோர வியாபாரிகள், செருப்பு தைப்ப வர்களுக்கு பெரிய குடைகளை வழங்குவது போன்றவை ஜூலை மாதத்திற்கான திட்டப்பணிகளாக இருந்தது. “இந்தத் திட்டப்பணிகள் பொது மக்கள் மத்தியில் ரோட்டரிக்கு நல்ல பெயர் வாங்கிக் கொடுக்கும்,'' என்று சொல்கிறார் பிரவீண் சந்தர் கோயல். பெரியவர் மருத்துவமனை மற்றும் சாலையோர பாதுகாப்புத் திட்டப்பணிகள் உட்பட மற்ற திட்டப்பணிகளும் அவருடைய ‘சவால்’ திட்டத்தின் கீழ் வருகிறது.

1988 ஆண்டில் ரோட்டரியில் சேருவதற்கு முன்பு, 1985-86 ஆண்டுகளில் இன்டராக்டர் மற்றும் ஒரு DRR ஆகவும் கோயல் பணி செய்திருக்கிறார். உறுப்பினர் சேர்க்கையில் 10 சதவீதம் அதிகரிக்கவும் ‘அங்கீகரிக்கப்பட்ட’ ரோட்டராக்ட் சங்கங்களின் எண்ணிக்கையை 30லிருந்து 60 வரை அதிகப்படுத்தவும், மேலும் 10 சதவீத பெண் உறுப்பினர்களை சேர்க்கவும் விரும்பினார். பார்வை குறைபாடு கொண்ட உறுப்பினர்கள் உள்ள ஒரு பிரத்யேக ரோட்டராக்ட் சங்கம் அமைப்பதாகத் திட்டமிட்டிப்பதாகவும், நவம்பர் மாதத்தில் அமைக்கப்படும் என்பதையும் சொல்கையில் உற்சாக மாக இருக்கிறார். “RI தலைவர், பேரி ராஸின் இச்சங்கத்தைத் தொடங்குவதற்கான சான்றிதழை அளித்து, பூரித்துப்போனார்,'' என்றார்.

$600,000 நன்கொடை அளிப்பது தான் TRFக்கான அவருடைய இலக்கு ஆகும், ஆனால் “இந்த அளவுக்கு செய்ய என்னால் முடிந்ததில்லை. பவுண்டேஷனுக்கு ஒவ்வொரு உறுப்பினரும் நன்கொடையளிக்க வைப்பது தான் எனது அடுத்த இருவார சவால்,'' என்று சொல்லி அவர் சிரிக்கிறார்.

இந்த வருடத்தில் WinS மற்றும் பள்ளிகளுக்கான பெஞ்சுகள் வழங்குவதற்கு உலகளாவிய மானியத் திட்டப்பணி அவருக்கு உள்ளது.

# ரோட்டரி புகழ் பரப்பும் பணி

**S பிறையோன்,** *சிவில் என்ஜினியர்,*
*கடலூர் கோஸ்டல் சிட்டி ரோட்டரி சங்கம்* (D 2981)



ரோட்டரியின் புகழை மேம்படுத்தும் வகையில் பிறையோன் நான்கு திட்டங்களை முன்னெடுத்துள்ளார்.

ரோட்டரி சங்கத்தின் 113வது ஆண்டினை ஒட்டி, மாவட்டம் முழுவதும் 11,30,000 மரக் கன்றுகள் நடப்பட்டு வருகின்றன. சில இடங்கள் புயல், காற்றில் பாதிப்படையக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுவதால், இப்பகுதியில் அடர்ந்த காடுகளை உருவாக்குவதன் எண்ணத்தின் அடிப்படையில் மரக் கன்றுகள் நடப்படுகின்றன.

பிறையோனின் அடுத்த திட்டம் கடலூர் பகுதியில் வசிக்கும் 750 ஆதரவற்ற பெண்களுக்குத் தையல் இயந்திரங்களை வழங்குவது. அந்த இயந்திரங்களைப் பெறுவோர் அவற்றை விற்றுவிடாமல் இருப்பதை உறுதி செய்யும் வகையில், ஆண்டுக்கு ஒரு முறை தையல் இயந்திரத்தை ரோட்டரி சங்கத்துக்குக் கொண்டுவந்து, புதுப்பிக்க வேண்டும் என்ற நடைமுறை கொண்டுவரப்பட்டது.

இவை தவிர, வழிபாட்டுத் தலங்களுக்கு அருகில் சுத்தமான அதி நவீன கழிவறைகள் கட்டுவது, மாவட்டம் முழுவதும் கிராமப்புறத்திலிருந்து வரும் திறமையான, படித்த இளைஞர்கள் உரிய வேலைவாய்ப்பு பெற உதவும் விதத்தில் வேலை வாய்ப்பு முகாம் நடத்துவது அடுத்த திட்டமாகும்.

மாவட்டத்தில் 1,000 பள்ளிகளில் கைகழுவும் திட்டமும் (WinS) 114 பள்ளிகளை பொலிவுறு பள்ளி வகுப்புகளாக மாற்றும் திட்டமும் நிறைவேற்றப்பட்டுள்ளன.

உறுப்பினர்களைப் பொறுத்தவரையில் ஆண்டு தொடக்கத்தில் 4,545ஆக இருந்த எண்ணிக்கை தற்போது 4,782 ஆக உயர்ந்துள்ளது. புதிய உறுப்பினர்களில் 25 சதவீதம் பேர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. புதிதாக 20 ரோட்டராக்ட் சங்கங்கள் (Rotaract clubs), 12 இன்டராக்ட் சங்கங்கள் இதுவரை சேர்க்கப்பட்டுள்ளன.

இவற்றுடன் TRF 4 லட்சம் டாலர் அளிக்க பிறையோன் இலக்கு நிர்ணயித்துள்ளார். பிறையோன் 1995ம் ஆண்டு முதல் ரோட்டரியில் பணியாற்றி வருகிறார். அவரது மனைவி கீதாவும் ரோட்டரி உறுப்பினர் ஆவார்.

# நதிகளைக் காப்பதே இவரது மூச்சு!

Dr **சயந்தன் குப்தா,**
*மகப்பேறியல் மருத்துவர், மத்திய மால்டா ரோட்டரி சங்கம்* (D 3240)



சயந்தன் குப்தா 2003ம் ஆண்டு புதிதாக அமைக்கப் பட்ட ரோட்டரி சங்கத்தில் இணைந்து தலைவர் ஆனார்.

ரோட்டேரியின்களின் மனத்தில் ரோட்டரி உணர்வை ஊட்டுவதில் ஆர்வம் காட்டினார். ரோட்டரி குறித்து விழிப்புணர்வு மேம்படுத்த பல்வேறு திட்டங்களை வகுத்துள்ளார். தனது மண்டலப் பகுதியில் நதிகளைக் காப்பதில் சயந்தன் குப்தா உறுதியாக இருக்கிறார். இதையொட்டி பல்வேறு திட்டங்களுக்கு நதிகளின் பெயர்களைச் சூட்டி ரோட்டேரியன்களின் மனதில் பதியச் செய்திருக்கிறார். நதிக்கரைகளின் ஓரத்தில் மரக்கன்றுகளை நடுவது, நதிகள் மாசுபடாமல் இருப்பதை மக்களிடையே விழிப்புணர்வு பேரணிகள், நடத்துவதும் குறித்தும் திட்டமிட்டு வருகிறோம் என்றார்.

தனது ரோட்டரி அமைப்பில் உறுப்பினர்களின் எண்ணிக்கையை 300ஆக உயர்த்தவும், அவர்களில் அதிகமானோர் பெண்களாக இருப்பதை உறுதி செய்யவும் திட்டமிட்டிருக்கிறார். ரோட்டரியனின் மனைவியரையும் ரோட்டரியில் உறுப்பினர்களாக்கவும் உத்தேசித்துள்ளார்.

உறுப்பினர்களின் மனைவியர் ரோட்டரியில் இணைந்தால், அவர்களுக்கான சந்தாக்கள் தள்ளுபடி செய்யப்படுகின்றன. அப்படி மாதந்தோறும் புதிதாக ஒருவரைச் சேர்த்து வருகிறோம். அதைப் போல ரோட்டராக்ட் உறுப்பினர்கள், ரோட்டரியில் சேருவதை ஊக்குவிக்கிறார். அவர்களுக்கும் சந்தா இல்லை. ரோட்டராக்ட் சங்கங்கள் RIல் பதிவு செய்ய வேண்டும் என்று குப்தா வலியுறுத்தி வருகிறார். போலி சங்கங்களைத் தடுக்கிறார்.

மருத்துவர் என்ற முறையில் எனது பணியை வேறு எங்காவது மேற்கொண்டிருக்க முடியும். ஆனால், ரோட்டரியுடன் இணைந்து பணியாற்றுவதையே விரும்புகிறேன். குப்தாவுக்குப் பிடித்தமானது ஆங்கிலத்திலும், வங்காள மொழியிலும் கவிதை, கதைகள், நாடகம் எழுதுவது.

இதுவரை 19 நூல்களை எழுதி வெளியிட்டிருக்கிறேன். மேகநாத் வத் காவ்யா (Meghnaad Vadh Kavya) என்ற வங்காள மொழிக் காவியத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளேன். அந்தக் காவியத்தை முன்னாள் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி வெளியிட்டார்.

குப்தாவின் மனைவி புஷ்பிதாவும், இளைய மகளும் ரோட்டரியில் உறுப்பினராவார் என்று எதிர்பார்க்கிறார்.

வடிவமைப்பு: N கிருஷ்ணமூர்த்தி

# புனே சிறுமிகளுக்கு ரோட்டரி சைக்கிள்கள்

ரோட்டரி செய்திக் குழு




எழுத்தறிவு மற்றும் சமூக வளர்ச்சிக்கான முயற்சிகளின் ஒரு பகுதியாக ஒவ்வொரு ஆண்டும் RC புனே கேம்ப், D 3131, தங்கள் வீட்டிலிருந்து நீண்ட தொலைவு நடந்து சென்று படிக்கும் மாணவிகளுக்கு புதிய சைக்கிள்களை வழங்குகிறார்கள்.

இந்த வருடம், புனேயில் உள்ள நாராயண்பூர் தாலுகாவை சேர்ந்த பிவாடியில் சத்குரு நாராயண் மஹாராஜ் மாத்யாமிக் பள்ளியில் படிக்கும் 30 மாணவிகளுக்கு சைக்கிள்களை நன்கொடை யளித்தனர். மாணவிகள் பள்ளிக்குச் சரியான நேரத்தில் வரமுடியாததால் தான் படிப்பை பாதியிலேயே கைவிடுவதாக பள்ளி சொல்கிறது.

2013 ஆம் ஆண்டு இந்தத் திட்டப்பணி தொடங்கியதிலிருந்து இந்த பிராந்தியத்தில் உள்ள பெண் குழந்தைகளுக்கு இதுவரை 500 சைக்கிள்கள் இந்த சங்கம் வழங்கியிருக்கிறது, என்கிறார் சமூக திட்டப்பணிகளின் டைரக்டர் ஜெய்தீப் மாளவியா.■




## தற்காப்பு மூலம் பெண்களுக்கு அதிகாரமளித்தல்

தொல்லை கொடுப்பவர் களிடமிருந்தும் பின்தொடர் பவர்களிடம் இருந்தும் இளம் பெண்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக D 3131, பூனா ரோட்டரி சங்கத்தால் ஒரு பயிற்சிப் பணிமனை நடத்தப்பட்டது. தேசிய அளவிலான வல்லுநர்களைக் கொண்ட ஒரு அணி, பங்கேற்பாளர்களுக்கு செய்முறைப் பயிற்சி வழங்கியது. மொத்தமாக 90 நிமிடங்கள் நடைபெறும் இந்தத் தற்காப்புப் பயிற்சி யை எந்த இடத்திலும், அல்லது பள்ளிகள், கல்லூரிகள் அல்லது குடியிருப்புப் பகுதிகளில் உள்ள திறந்தவெளிகளிலும் ஏற்பாடு செய்யலாம். ஒவ்வொருவரும் தனிப் பட்ட வழிகாட்டுதல் பெறுவதை உறுதி செய்ய ஒரு குழுவில் அதிகபட்சமாக 30 பயிற்சியாளர்கள் சேர்க்கப்படுகிறார்கள்.■

Wordsworld




# இடுக்கண் வருங்கால் நகுக...

சந்தியா ராவ்

*(அரசியலை நையாண்டி செய்து எழுதுவது அவ்வளவு லேசுப்பட்ட காரியமல்ல. பாகிஸ்தான் பெண் எழுத்தாளரைப் பற்றியது..)*

நான் நாற்பது ஆண்டுகளாக வேலை செய்து கொண்டிருந்த பெண். என்ன திகைக்கிறீர்களா? அப்படித் தான்! தினமும் காலையில் எழுந்து உடனடியாக ஆபீஸ் வேலை செய்ய புறப்பட்டு விடுவேன். பெரும்பாலான நாட்களில் என் கைப்பையில் வழக்கமான பொருட்களுடன் ஒரு புத்தகமும் இருக்கும். இத்தனை ஆண்டுகளாக அலுவல் வேலை செய்யும் நேரத்தில் புத்தகம் படித்திருக்கிறேன் என்று விரல் விட்டு எண்ணி சொல்ல முடியும். ஆனால், இதெல்லாம் என் தோழி திர்னா (Tirna) மோனி மோஷின் (Moni Mohsin) என்ற பாகிஸ்தான் பெண் எழுத்தாளர் எழுதிய தி ரிடர்ன் ஆஃப் தி சே ாஷியல் பட்டர்ஃப்ளை (The Return of the Social Butterfly) என்ற புத்தகத்தை என்னிடம் கொடுத்தாள். “ஓ! இது பெண்களுக்கான எழுத்து! இதெல்லாம் நமக்கு ஒத்து வராதுப்பா” என்று நினைத்துக் கொண்டே, சிரித்தபடி வாங்கிக் கொண்டேன். திர்னாவுக்கு புத்தக வாசிப்பு ரொம்ப பிடிக்கும்.

புத்தகத்தை நேசிப்பதாகச் சொல்லிக் கொள்ளும் நான் அந்தப் புத்தகத்தைப் பற்றி பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. ஒரு புத்தகம் என்பது வெறும் நூல் அல்ல. அற்புதம் நிகழ்த்தும் சாதனம். சில அதிசயங்களும் அற்புதங்களும் நமக்கானவை அல்ல என்று கூட இருக்கும். ஆனால், நம்முள் ஏதாவது தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும். புத்தகம் அப்படிப்பட்ட அற்புதம் நிகழ்த்தும். அதனால், எப்போதும் எந்தப் புத்தகத்தையும் இளக்காரமாகக் கருதக் கூடாது. அதுவும் புத்தகத்தை நேசிப்பவர்கள் செய்யக் கூடாது

அட்டைப்படத்தில் இளஞ்சிவப்பு (pink) நிறத்தில் ஒற்றை ஹைஹீல்ஸ் ஷூ படம். அருகில் இளம் சிவப்பு வட்டத்தில் இந்த நூலைப் பற்றி இந்தியா டுடே இதழில் வெளியான வாசகம் இடம்பெற்றுள்ளது. அந்த வாச கம் நையாண்டி கலந்த கவர்ச்சிகரமான பெண் கதை (Glamorous girly fiction evolves into Chanel&clad satire) ஆகும்.

அட்டைப் படத்தைப் பார்த்தாலே போதும் அது பெண்களுக்கான இலக்கியம் என்பது. இந்தப் புத்தகம் நமக்குத் தேவையில்லை என்று கருதினேன்.

இருந்தாலும் புத்தகம் படிக்கும் ஆசை எனக்குள் எப்போதும் இருக்கிறது அல்லவா? அலுவலகத்தில் ஓய்வு நேரத்தில் பையிலிருந்து அந்தப் புத்தகத்தை எடுத்தேன். முதல் பக்கத்தைப் புரட்டினேன். முதல் சில வரிகளே என்னை ஈர்த்தது. 14ம் பக்கம் வரையில் விடாமல் படித்து ரசித்தேன். விழுந்து விழுந்து சிரிக்க வைத்தது அந்தப் புத்தகம். அக்கம்பக்கத்தில் இருக்கிறார்களே என்பதையெல்லாம் மறந்து சிரிக்க வைத்தது அந்தப் புத்தகம். என்னைச் சுற்றியிருந்தவர்களுக்கும் ஆர்வம் ஏற்பட்டது. அவர்களுக்காக உரக்கப் படித்தேன். மோனி மோஷின் எழுத்து என்னை வசப்படுத்தியது.

பாகிஸ்தான் மேட்டுக்குடி மக்களின் பிரச்சினைகளை நகைச்சுவையாகச் சித்திரிக்கிறது. வேலைக்காரிகள் பிரச்சினை, பெண்களின் அரட்டைக் கச்சேரி, மாறி வரும் அரசியல் சூழ்நிலை எல்லாவற்றையும் நையாண்டி செய்திருக்கிறார் நூலாசிரியை.

படிக்கும்போது விலா நோக சிரிக்க வைக்கிறார் ஆசிரியை. அதுவும் பாகிஸ்தான் அரசியலை அவர் கலாய்த்து எழுதியிருப்பது அற்புதம். ஓரிடத்தில் மோனி மோஷின் (Moni Mohsin) எழுதியதன் சுருக்கத்தைப் படித்தால் போதும்.

முஷாரஃபை அரசியலிலிருந்து ஒழித்துக் கட்ட நவாஸ் ஷெரீப் மும்முரமாக இருக்கிறார். என்ன

செய்வது, தேர்தல் நடந்து நவாஸ் வெற்றி பெற்றாலும் முஷாரஃப்தானே ஆகஸ்ட் மாதம் வரையில் அதிபராக இருந்து தொலைக்கிறார்? அதுவரை அவர்தானே அதிகாரம் வைத்திருக்கிறார் என்பது நவாஸின் எண்ணம் என்கிறார் நூலாசிரியை. இந்த வரிகளைப் படித்தபோது, ஒரு நிமிடம் தோன்றியது. முஷாரபின் நடவடிக்கை எப்போதும் சிரிக்கவைக்கும்.

தொடர்ந்து அவர் எழுதுகிறார், பிரதமராக ஆட்சிப் பொறுப்பை நவாஸ் ஷெரீப் ஏற்றதும், முதல் வேலையாக முன்பு முஷாரபால் தலைமை நீதிபதி பதவியிலிருந்து நீக்கப்பட்ட இஃப்திகர் சவுத்ரியை (Iftikhar Chaudhry) மீண்டும் தலைமை நீதிபதி பதவியில் அமர்த்தலாம். அவர் பழிக்கு பழி வாங்குவதற்காக முஷாரபின் அதிபர் பதவியிலிருந்து நீக்குவார் என்று நினைக்கிறார் நவாஸ்.

அதையடுத்து பாகிஸ்தான் மக்கள் கட்சியை ரத்து செய்யும்படி நவாஸ் வலியுறுத்துவார். அப்புறம் நவாஸ் ஷெரீப் ராஜாவாக மகுடம் சூட்டிக் கொள்வார். நவாஸ் சிறிது காலம் சவுதி அரேபியாவில் இருந்ததால், ராஜாவாகும் ஆசையில் இருந்திருக்கிறார். ராஜா ஆகிவிட்டால், தேர்தல் கிடையாது, நாடாளுமன்றம் கிடையாது. நாம் மட்டுமே அதிகாரம் செலுத்துவோம் என்பது அவரது எண்ணம்.

இப்படி எழுதுகிறார் நூலாசிரியை. இந்தப் புத்தகம் மிகவும் சுவையாக எழுதப்பட்டுள்ளது. மோனி மோஷினைப் பாராட்ட வேண்டும். அவரது கூர்மையான எழுத்துக்காக மட்டுமல்ல, கொந்தளிக்கும் பாகிஸ்தான் அரசியலைத் துணிச்சலோடு கலாய்த்து நூல் எழுதியிருப்பதற்காக.

இந்த நூல் லாகூரிலிருந்து வெளியாகும் தி ஃப்ரைடே டைம்ஸ் (The Friday Times) என்ற வார இதழில் தொடராகப் பிரசுரமானது. இந்தப் புத்தகத்தைப் படித்த பிறகு இணையம் வழியாக மோஷின் நூல்களைத் துழாவினேன். அவரது முதல் தொகுப்பு நூலான தி டயரி ஆஃப் எ சோஷியல் பட்டர்ஃப்ளை (The Diary of a Social Butterfly) கண்ணில் தென்பட்டது.

அதில் பட்டாம்பூச்சி தன்னை அறிமுகம் செய்து கொள்கிறது: என்ன?என்ன சொல்கிறாய்? நான் யார்? என்னை உனக்குத் தெரியவில்லை என்றால், நீ தான் இழந்தவர். எல்லோருக்கும் என்னைத் தெரியும். லாகூர் முழுவதும் உள்ளவர்கள், கராச்சியில் வசிப்பவர்கள், இஸ்லாமாபாதில் வசிப்பவர்கள் எல்லோரும் அறிவார்கள். துபாய், லண்டன், கான் மார்க்கெட்டில் வசிப்போரில் பாதிப்பேர் அறிவர். நான் லாகூரில் வசிக்கிறேன். குல்பர்க் தோட்டத்தில் வசிக்கிறேன். நான் சோஷலிஸ்ட் மாதிரி. கோலாகலமான விருந்து இல்லை, காபி இல்லை.. பெரிய பெரிய கேளிக்கை இல்லை.




இப்படி பட்டாம்பூச்சி பேசுகிறது. அந்தப் பட்டாம்பூச்சியை, அதான் எழுத்தாளரை மிகவும் பிடித்துப் போய்விட்டது. அவரது உலகப் பார்வையே தனி. உதாரணத்துக்கு மோனி எழுதிய டெண்டர் ஹூக்ஸ் (Tender Hooks) என்ற மூன்றாவது புத்தகம் விவரிக்கிறது.

ஒவ்வொரு நாளும் என் மகன் குல்சூ படிக்கும் பள்ளிக்கு குண்டுவெடிக்கும் என்று அச்சுறுத்தல் வருகிறது. பெண்கள் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுக்கும் அவர்களது கட்டடங்களுக்குத் தீ வைக்கப்படும் என்றும் பள்ளி மாணவிகளின் மீது திராவகம் வீசப்படும் என்றும் இரவு நேரத்தில் அச்சுறுத்தல் வருகிறது. மாணவிகள் மீது திராவகம் வீசுவதற்குக் காரணம் அவர்கள் இஸ்லாமிய உடை அணிவதில்லையாம். எவ்வளவு அபத்தம்! அவர்கள் அணியும் ஆடைகள் கணுக்கால் வரையில் மறைக்கிறது. மேலே அணியும் ஆடையோ சோஃபா கவரை விடப் பெரியதாக இருக்கிறது. மிரட்டுபவர்கள் பைத்தியக்காரர்கள்!

பாவம் பட்டாம்பூச்சி! இப்படி கிறுக்குப் பிடித்தவர்கள், தற்கொலைப் படையினர் நடமாட்டம் இருந்தால், எப்படித்தான் அவர் மிகவும் விரும்பும் நட்சத்திர அழகு நிலையங்களுக்குச் சென்று ஃபேஷியல் (facials) செய்துகொள்வது? சில சமயம் வீட்டுக்கே வரவழைத்து செய்து கொள்ள வேண்டியதுதான்.

தலிபான்கள் எப்படியெல்லாம் படுத்துகிறார்கள்! எல்லாக் கொலைகளுக்கும் பின்னால் அமெரிக்கர்கள் இருப்பதாகக் கூறுகின்றனர். நான் எனக்கு ஃபேஷியல் (facials) செய்துகொள்ள அமெரிக்க பொருள்களைத்தான் வாங்கி பயன்படுத்துகிறேன். இப்படி தங்களது பொருட்களை வாங்குவதற்கு ஆள் இருந்தால், அவர்கள் ஏன் அதைப் பாழடிக்கிறார்கள்? ஃபேஷியல் (facials) செய்வதற்கு யார் எதிரிகள்? அமெரிக்கர்களா? இல்லை. இந்தியர்களா? இல்லை. தலிபான்களா? ஆம், ஆம் ஆம் என்று எழுதுகிறார் மோனி மோஷின். அவரது நூல்களைப் படித்துப் பாருங்கள் தாள முடியாமல் சிரித்துத் கொண்டேயிருப்பீர்கள்!

கட்டுரையாளர் குழந்தைகள்
எழுத்தாளர் மற்றும்
மூத்த பத்திரிகையாளர்

வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்

# போலியோ ஒழிப்பு கடந்துவந்த பாதை

G கிருஷ்ணன்




**Westland Publications**
252 pages; ₹699

சின்னம்மைக்கு பிறகு, உலகின் கவனத்தை ஈர்த்து சரித்திரத்திலேயே பெரிய தடுப்பூசி திட்டமாக மாறியது எப்படி?

தாமஸ் ஆப்ரகாம் தன்னுடைய பல வருட அனுபவத்தில் உலக அரசியல், கல்வியறிவு இன்மை, பணபலத்தின் பங்கு போன்றவற்றை போலியோ ஒழிப்பு கடந்துவந்த பாதை நூலில் கொண்டுவந்துள்ளார்.

1980 களிலேயே, ஜோனஸ் சல்க் உருவாக்கிய செயலிழக்கம் செய்யப்பட்ட போலியோ வைரஸ்களை 1.5 மில்லியன் குழந்தைகளுக்கு ஊசிமூலம் செலுத்தி அமெரிக்கா மிக வேகமாக முன்னேறி இருந்தது. இன்னமும் போலியோ பாதிப்பு உள்ள பிற நாடுகளிலிருந்து வரும் பயணிகள் மூலம் போலியோ திரும்ப தலைதூக்கினால் இவ்வளவு பெரிய முயற்சி வீணாகக் கூடும். அதனால் உலகம் முழுவதும் போலியோவிலிருந்து விடுதலை பெறவேண்டும். ஆனால் வேறெங்கும் போலியோவிற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. ஒவ்வொரு நாடும் தனது உள்ளூர் தேவைக்கு ஏற்ப அதற்கேற்ற தடுப்பூசி திட்டங்களை கொண்டுள்ளன. எனவே மிக அதிகம் செலவுசெய்து இந்த தனி நோய் பற்றிய புரிதலை உலகம் முழுவதும் பிரச்சாரம் செய்ய அமெரிக்க அரசாங்கமும் தனியார் நிறுவனங்களும் உறுதிபூண்டன.

1988ல் உலக போலியோ ஒழிப்பு ஆரம்பம் பிறந்தது. இந்தமுறை, ஊசி மருந்துக்கு பதிலாக ஆல்பர்ட் சபின் உருவாக்கிய எளிதாக பயன்படுத்தக் கூடிய வாய்வழி போலியோ மருந்தை சார்ந்து இருக்கும். இந்த பிரச்சாரங்கள் UNICEF மற்றும் அமெரிக்காவின் நோய் கட்டுப்பாட்டு மையம் இவற்றுடன் உலக சுகாதார நிறுவனமும் இணைந்து நடைமுறைபடுத்தப்படும். அகிலஉலக ரோட்டரி சங்கம் மற்றும் பில் மற்றும் மிலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை இதற்கான பண உதவி செய்யும் (தடுப்பு மருந்து முழுமையாக கொடுக்கப்பட்டதை உறுதிசெய்ய தடுப்பூசி மையங்களை நேரடியாக கண்காணிப்பதையும் சேர்த்து).

வரும் 2000வது வருடவாக்கில் போலியோவை முழுமையாக ஒழிக்கப்பட வேண்டும் என்று கூட்டமைப்பு அறிவித்துள்ளது. பிரச் சாரத்தின் முழுமையான சிக்கலை அது முன்கூட்டியே அறியவில்லை.

இந்தியாவிற்கு வேறு முக்கிய பிரச்சனைகள் இருந்தாலும் இறுதியில் ஒப்புக்கொண்டது. 1992ம் வருடம், ரோட்டரியினர் அரசின் சுகாதார பணியாளர்களுடன் நாடுமுழுவதும் 90 மில்லியன் குழந்தைகளுக்கு இரண்டு சொட்டு வாய்வழி போலியோ தடுப்பு மருந்தை அளித்தனர், உலகிலேயே இது ஒரு மிகப்பெரிய நோய்தடுப்பு முயற்சியாகும். ஏழ்மையான, பலதரப்பட்ட சுகாதார திட்டங்களைகொண்ட நாட்டில் இந்த திட்டம் எதிர்பார்த்தபடியே சிக்கலாயிற்று. அதன் வெப்பமான பருவநிலையில் தடுப்பு மருந்து எதிர்பார்த்த அளவு வேலை செய்யவில்லை. மின்சாரம் சீரின்மை காரணமாக தடுப்பு மருந்து சரிவர பாதுகாக்கப்படவில்லை. பல சுகாதார பணியாளர்கள் அவர்களது வேலையை சரிவர செய்யவில்லை, பல இடங்களில் 100 குழந்தைகளுக்கு தடுப்புமருந்து கொடுக்கவேண்டிய இடத்தில் ஒருசிலருக்கே கொடுக்கப்பட்டது. அவர்கள் கூட்டு நோய் தடுப்பு திட்டத்தில் வேலைசெய்வதால், இது அதிகப்படியான வேலை என்று அவர்கள் எண்ணினார்கள். நல்ல பலனை அளிக்க தடுப்பு மருந்தை பலமுறை கொடுக்கவேண்டி இருந்தது.

உத்திரபிரதேசத்திலும் பீகாரிலும் உள்ள மிக மோசமான சுகாதார சேவைகளும் அதிக படிப்பறிவு இன்மையும் முன்னேற்றத்தை



முடக்கிவிட்டன. தடுப்பு மருந்து குழந்தைகளை மலடாக்கும் மேலும் இது முஸ்லிம் மக்களை குறிவைத்து செய்யப்படுகிறது என்ற புரளி விரைவில் பரவ ஆரம்பித்தது. இது ஒரு பெரிய முடக்கத்தை உருவாக்கியது. உள்ளூர் தலைவர்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் மக்களுக்கு தங்கள் குழந்தைகளுக்கு தடுப்பு மருந்து கொடுப்பதன் அவசியத்தை புரியவைக்க பலவருடங்கள் ஆயின. 2011ம் ஆண்டுதான் இந்தியாவில் போலியோ முழுமையாக அழிக்கப் பட்டதாக அறிவிக்கப்பட்டது, உலகின் கடைசி நாடாக இந்தியா இந்த இலக்கை அடைந்தது.

சென்ற ஆண்டு பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், சிரியா, நைஜீரியா, காங்கோ போன்ற நாடுகளில் சுமார் 100 பேர் இந்த வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளாதாக அறிவிக்கப்பட்டது. முதலில் 2000ல் போலியோ முழுமையாக ஒழிக்கப்படும் என்று சொன்னது முடிந்துவிட்டது. இப்பொழுது, 2021ம் ஆண்டு இலக்காக அறிவிக்கப்பட்டு இருந்தாலும், அதை செயல்படுத்துவது இயலாதுபோன்று தோன்றுகிறது. அரசியல் கொந்தளிப்பு, போர், தடுப்பு மருந்தினால் உண்டாகும் பிரச்சனை, ஒவ்வொரு வருடமும் பலவந்தப்படுத்தப்படும் பொது சுகாதார பணியாளர்களை கட்டுப்படுத்துவது இவை அனைத்தும் திட்டத்திற்கு பெரிய சவாலாக உள்ளது. பிரச்சனைகளை WHO குறைவாக மதிப்பீடு செய்துள்ளது தெளிவாக தெரிகிறது. ஏறக்குறைய $15 பில்லியன்கள் இந்த திட்டத்திற்காக செலவிடப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில், தாலிபான்களுடன் நடக்கும் தவிர்க்க இயலாத போர் இந்த திட்டத்தை நிறுத்திவிட்டது. மேற்கு பாகிஸ்தானில் தாலிபான்கள் தடுப்பு மருந்து அளிக்கும் பெண்களை சுட்டுக்கொல்வதாக செய்திகள் வருகின்றன. தடுப்பு மருந்து அளிக்கும் பெண்கள் அமெரிக்காவின் உளவாளிகள் என்ற சந்தேகம் எங்கும் பரவியுள்ளது. தடுப்பு மருந்து திட்டத்தில் பங்குபெற்ற ஒரு மருத்துவரின் உதவியுடன் அமெரிக்க கடற்படையினர் ஒசாமா பின் லாடனை அபோடாபாத்தில் கண்டுபிடித்து கொன்றபிறகு இந்த சந்தேகம் வந்துள்ளது. பாகிஸ்தான் இராணுவம் தாலிபான்களை அழித்து பாஸ்ட்டூன்களை விரட்டி, ஆப்கானிஸ்தான் எல்லைப்பகுதியில் போலியோ திட்டத்தை திரும்ப கொண்டுவந்துள்ளது. சிரியாவில் புலம்பெயர்ந்த பாகிஸ்தான் தொழிலாளர்கள் மூலம் பரவுகிறது என்று குற்றம்சாட்டப்படுகின்றனர்.



தவிர்க்கக்கூடிய பல நோய் களைப்பற்றி அக்கறைகொள்ளாமல், ஒரே ஒரு நோய்க்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க நாடுகள் கட்டாயப்படுத்தப்படுவதாக பல சுகாதார நிபுணர்கள் கருதுகின்றனர். மற்ற நோய்களுக்கு அதிக அக்கறைதேவை இருக்கும்போது போலியோவிற்கு முக்கியத்துவம் கொடுக்கலாமா? பணக்கார நாடுகள் அதை முழுமையாக ஒழித்துவிட்டார்கள்.

எதிர்கால எல்லா சுகாதார திட்டங்களுக்கும் ஒரு பாடம் என்னவென்றால், அவர்களுடைய திட்டங்களுக்கு நன்கு வசதிபடைத்த நன்கொடையாளர்கள் பணஉதவி செய்கிறார்கள் என்பதை மட்டுமே பொருத்து அல்லாமல் திட்டங்கள் அவர்கள் சேவைசெய்ய விரும்பும் மக்களின் தேவையை அதிகம் சார்ந்து இருந்தால் அவர்களின் பணி எளிதாக இருக்கும் என்று ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

ஆப்ரகாம் 2009 ஆண்டு WHOல் செய்திதொடர்பு அதிகாரியாக ஜெனிவாவில் இருக்கும்போது போலியோவின்மீது ஆர்வம் வந்தது, போலியோ குழுவின் ஆற்றல் மற்றும் உறுதியை கண்டுகொண்டார். அவர் அதைப்பற்றி மேலும் ஆராய்ச்சி செய்து, திட்டத்தின் சிக்கல்கள், அதன் தோல்விகள், வெற்றிகள், நெறிமுறை தெளிவின்மை பற்றியும் இந்த போலியோ ஒழிப்பு திட்டம் பல இலக்கு தேதிகளை கடந்தும் ஏன் முடிவுக்குவரவில்லை என்பதையும் அடுத்த பத்தாண்டுகளுக்கு என்ன நடக்கும் என்பதைப்பற்றியும் இந்த புத்தகத்தில் எழுதியுள்ளார்.

இதை எழுதியவர்
ஒரு பத்திரிகையாளர் மற்றும்
தலையங்க பயிற்சியாளர்.

# உறுப்பினர் சேர்க்கை, ரோட்டரி

Rotary Institute 2018

| Zone 4 | | |
|---|---|---|
| **Award Category** | **IPDG** | **District** |
| Highest Membership Growth | B M Sivarraj | 3142 |
| Highest % of Membership Growth | B M Sivarraj | 3142 |
| Highest growth in women members | B M Sivarraj | 3142 |

| Zone 5 | | |
|---|---|---|
| **Award Category** | **IPDG** | **District** |
| Highest Membership Growth | R Srinivasan | 3232 |
| Highest % of Membership Growth | Jawarilal Jain | 3231 |
| Highest growth in women members | R Srinivasan | 3232 |

| Zone 6A | | |
|---|---|---|
| **Award Category** | **IPDG** | **District** |
| Highest Membership Growth | Ranjeet Singh | 3120 |
| Highest % of Membership Growth | Harjit Singh Hura | 3261 |
| Highest growth in women members | Ranjeet Singh | 3120 |



RID C பாஸ்கர் மற்றும் RI தலைவர் பாரி ரஸ்ஸின் IPDG சின்ன துரை அப்துல்லா மற்றும் அவர் மனைவி ஃபாத்திமாவிற்கு விருது வழங்குகின்றனர்.




IPDG வியாங்கடேஷ் சன்னா மற்றும் லதா RI தலைவர் ரஸ்ஸினிடமிருந்து விருது பெறுகின்றனர். RPIC ஆஷிஷ் தேசாய் மற்றும் ராஜதுரை மைக்கேல் அவர்களும் உடன் உள்ளனர்.




IPDG P கோபாலக்கிருஷ்ணன் மற்றும் நீலா RI தலைவர் ரஸ்ஸின் மற்றும் RID பாஸ்கர் அவர்களுடன்.




IPDG சுனில் சரஃப் மற்றும் ஜோதி RI தலைவர் ரஸ்ஸினுடன்.

# விழிப்புணர்வுக்கான விருதுகள்

| Zone 4 | | |
|---|---|---|
| **Award Category** | **IPDG** | **District** |
| Public Image Award | B M Sivarraj | 3142 |
| AV Media Award | Ravi Choudhary | 3011 |
| Social Media Award | B M Sivarraj | 3142 |
| Print Media Award | Vyankatesh Channa | 3132 |

| Zone 6A | | |
|---|---|---|
| **Award Category** | **IPDG** | **District** |
| Public Image Award | Ajay Agrawal | 3262 |
| AV Media Award | Sanjay Giri | 3292 |
| Social Media Award | Sunil Saraf | 3240 |
| Print Media Award | Harjit Singh Hura | 3261 |

| Zone 5 | |
|---|---|
| **IPDG** | **District** |
| P Gopalakrishnan | 3000 |
| R Srinivasan | 3232 |
| Suresh Mathew | 3211 |
| Jawarilal Jain | 3231 |
| Chinnadurai Abdullah | 3212 |
| G N Prakash | 3182 |
| Asha Prasanna Kumar | 3190 |




IPDG B M *சிவராஜ் மற்றும் அவர் மனைவி மனோன்மணி* RI *தலைவர் பாரி ரஸ்ஸினிடமிருந்து விருது பெறுகிறார்கள்.* RPIC *ஆஷிஷ் தேசாய்,* RID C *பாஸ்கர்,* RCs *அஷோக் குப்தா மற்றும் ராஜேந்திர ராய் ஆகியோரும் உள்ளனர்.*



IPDG *ரஞ்சீத் சிங் மற்றும் கிரண்ஜித் சிங்* RI *தலைவர் ரஸ்ஸினுடன்.*




RI *தலைவர் ரஸ்ஸினும்* RID *பாஸ்கரும்* IPDG G N *பிரகாஷ் மற்றும் விஜயாவிற்கு விருது வழங்குகின்றனர்.*

புகைப்படங்கள் K விஸ்வநாதன்

# மகளிர் திருவிழா

கிரண் ஜெஹரா

D 3231 முதல் முறையாக பெண் ரொட்டேரியன்களுக்கு, பிரத்தியேகமாக நடத்திய உற்சாகமான கொண்டாட்டம் சென்னை வாலஜாபேட்டையில் உள்ள Bright Minds Vidyodaya பள்ளி வளாகத்தில் நடத்தியது. ரோட்டேரியனரின் மனைவியர் மற்றும் பிற பெண்கள் குழந்தைகளின் திறமையை வெளிப்படுத்துவதாகவும் அமைந்தது. மகளிர் மட்டும் என்ற இந்த ஒரு நாள் நிகழ்ச்சி ஃபேஷன், உணவு மற்றும் கேளிக்கை நிறைந்ததாக இருந்தது.

பல பெண் ரொட்டேரியன்களும் என்னிடம் எப்பொழுதும் கேட்கும் ஒரு கேள்வி: ரோட்டரியில் எங்களுக்காக ஏதாவது இருக்கிறதா? இது பெண்களை ஈடுபடச் செய்வதற்கான என்னுடைய ஒரு சிறிய யோசனை, என்கிறார் நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளரும், D 3231 DG சந்தர பாப் அவர்களின் மனைவியுமாகிய சுஜாதா சந்தர பாப். DG சந்தர பாப் தன் வரவேற் புரையில், மனைவியர்களை வரவேற்றுப் பேசியதோடு ரொட்டேரியன் கணவர்களுக்கு அவர்கள் அளித்துவரும் ஆதரவுக்கு நன்றி தெரிவித்தார். எங்களைப் புரிந்துகொண்டு சமுதாயத்துக்கு எங்களால் இயன்ற சேவை புரிய எங்களுக்கு உதவுவதற்கு நன்றி, என்று அவர் கூறினார்.

சென்னை ரோட்டரி E-கிளப் பின் முன்னாள் தலைவர் சுஜாதா “மாவட்டத்தில் உள்ள பெண்களை இணைத்து செயல்பாடுகளில் ஈடுபடுத்த விரும்பினார். பெண்கள் ஒன்றிணையும்போதும் ரோட்டரி பற்றிய அர்த்தமுள்ள உரையாடல்களை மேற்கொள்ளும் போதும் அது ரோட்டரியில்



*ஆடம்பரமான ஆடை போட்டிக்காக அணிவகுத்த குழந்தைகள்...*

சேர்வதற்கும் ஒன்றிணைந்து அற்புதங்களைச் செய்வதற்கும் அவர்களுக்குத் தூண்டுதலாக இருக்கிறது”. என்றார்.

மாறுவேடப் போட்டிக்காக குழந்தைகள் தங்களுக்குப் பிடித்த மான கார்ட்டூன் பாத்திரங்களாக மாறுவேடம் தரித்தனர், பெண் ரொட்டேரியன்கள் போட்டி நடைபெறும் இடத்துக்கு சரியான நேரத்தில் வந்து தங்கள் பணியை உரிய நேரத்தில் முடிப்பதைக் காண முடிந்தது. “இது நாங்கள் ஏற்கனவே நேர மேலாண்மை மற்றும் பன்முகப் பணி சார்ந்த திறன்களைப் பெற்றிருக்கிறோம் என்பதையே காட்டுகிறது. இந்தத் திறன்களை நாங்கள் ரோட்டரிக்கு எடுத்து வந்தால் எப்படி இருக்கும் என்பதைக் கற்பனை செய்து பாருங்கள். தங்களிடம் ஏற்கனவே அந்தத் திறமை இருக்கிறது என்பதைக் கூட பெரும்பாலான பெண்கள் அறிந்திருக்கவில்லை. இந்த நிகழ்ச்சி அவர்கள் அதைப் புரிந்துகொள்ள உதவும்,” என்றார் நிகழ்ச்சியின் தலைவர் நந்தினி நிர்மல்.

ஆடை, ஆபரணங்கள் மற்றும் மெஹந்தி, உணவு, விளையாட்டு மற்றும் கடைகள் நிகழ்ச்சி வளாகத்தில் நிறைந்திருந்தன. மட்பாண்டங்கள் மற்றும் வீட்டு உபயோகப் பொருட்களுக்கான ஸ்டால்கள் அதிக எண்ணிக்கையிலான பார்வையாளர்களைக் கவர்ந்தன. “எல்லா ஸ்டால்களும் ரொட்டேரியன் களால் அல்லது அவர்களுடைய



*இடதுபுறத்திலிருந்து: சுஜதா சந்திர பாப், உஷா அஜித் பிரசாத் மற்றும் நிகழ்வு தலைவர் நந்தினி நிர்மல்.*

மனைவிகளால் வணிகத்தை மேம்படுத்துவதற்காகவும், அவர்களுடைய கூட்டமைப்புக்கு உதவுவதற்காகவும் அமைக்கப்பட்டிருந்தன,'' என்றார்.

### ரூ.50க்கு ஃபேசியல்

ஸ்டாலில் அழகு சாதனப் பொருட்கள் விற்பனைக்காக காட்சிப் படுத்தப்பட்டிருந்தன மற்றும் அதற்குப் பின்னால் ரூ.50க்கு ஃபேசியல் அரங்கு அமைக்கப்பட்டிருந்தது. அரங்குக்கான பொறுப்பாளர் உமா மகேஸ்வரி, "50 ரூபாய்க்கு ஃபேசியல்'' என அடிக்கடி அறிவித்து கூட்டத்தினரின் கவனத்தை ஈர்த்துக் கொண்டிருந்தார். அரங்கில் வியா பாரம் எப்படி இருக்கிறது என அவரிடம் கேட்ட போது, சிரித்தவாறே பதிலளித்தார், "தொடக்கத்தில் மக்கள் தயக்கம் காட்டினார்கள். ஒரு பெண்மணி ஃபேசியல் செய்துகொண்டதைப் பார்த்த பிறகு, பல பேர் வரிசையில் நின்றனர்.'' மாலையில் அரங்கு மூடப்படும் நேரம் 60க்கும் மேற்பட்ட ஃபேசியல்களும், 120 கைகளுக்கு மெஹந்தியும் அலங்கரிக்கப்பட்டன.

செல்ஃபி படங்கள் எடுத்து அவற்றை ஆன்லைனில் #magalirmattumல் பதிவிட்டனர். காய்கறிகளில் உருவம் செதுக்கும் ஸ்டாலில் பங்கேற்பாளர்களால் உருவாக்கப்பட்ட காப்சிகம் விலா எலும்புகளுடன் எலும்புக்கூடு மாதிரி, பூசணிக் கூடை முழுவதும் கேரட் பூக்கள், வெங்காயம் மற்றும் வெள்ளரியில் செய்த பொம்மைகள், ஆப்பிள், வாத்து மற்றும் பழங்களையும் காய்கறிகளையும் கொண்டு செய்யப்பட்ட இதே போன்ற இதர வடிவங்கள் ஆகியவை வைக்கப்பட்டிருந்தன.

மேடைக்கு அப்பால் அனைவரையும் கவர்ந்த மற்றொரு நிகழ்ச்சி வெண்கல குத்துவிளக்கு அலங்காரம் ஆகும். இந்து கலாச்சாரத்தில், குத்துவிளக்கு அன்றாட வழிபாட்டின் ஒரு பகுதியாக விளங்குகிறது. "எனவே, இந்தப் போட்டி பங்கேற்பாளர்களும் பார்வையாளர்களும் வீட்டில் முயற்சி செய்து பார்க்க புதிய யோசனைகளைக் கொடுத்துள்ளது,'' என்றார். RC தாம்பரம் சென்ட்ரல் D 3231 முன்னாள் தலைவர் உஷா அஜித் பிரசாத். நுட்பமான அமைப்புகள் முதல் எளிமையான ராதை மற்றும் கிருஷ்ணா வரை, பங்கேற்பாளர்களால் விளக்குகள் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

"பெண்கள் ரோட்டரியில் சேர வேண்டும் என நாம் விரும்பினால் அவர்களுக்கு ஒரு தோழியை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். ரோட்டரியில் உள்ள பெண்கள் ரோட்டரி உறுப்பினர்களின் மனைவியரை தனிப்பட்ட முறையில் சந்தித்து ரோட்டரியின் நன்மைகளைப் பற்றி அவர்களிடம் பேசினால் மட்டுமே இது சாத்தியமாகும். அது தான் மகளிர் மட்டும் நிகழ்ச்சியின் இலக்காக இருந்தது,'' என்றார் சுஜாதா. "பெண்கள் சந்தித்துப் பேசுவதற்கும், அனுபவிப்பதற்கும், இறுதியில் ரோட்டரியில் சேர்வதற்கும் வாய்ப்பளிக்கும்'' இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளால் மட்டுமே இது சாத்தியமாகும் என அவர் நம்புகிறார்.

புகைப்படங்கள்: கிரண் ஜெஹரா

# கவலைப்பட ஒன்றுமில்லை

பரத் மற்றும் ஷலன் சவூர்

உலகின் மிகவும் மதிப்பு வாய்ந்த இரண்டுபேர் - தலாய் லாமா மற்றும் பேராயர் டேஸ்மோன்ட் டுட்டு இருவரும், இரக்கம், அமைதி, அன்பு, இவைகள் எப்படி உலகை காக்கப்போகின்றன என்பது பற்றி உரையாற்ற மேடைமீது சேர்ந்து நடந்து வருகிறார்கள்.

அவர்கள் சில அடிகள் எடுத்து வைத்ததும், திடீரென்று தலாய் லாமா விளையாட்டுத்தனமாக டுட்டுவின் கழுத்தை நெறிப்பதுபோல பாவனைசெய்தார். பேராயர் அதை எதிர்த்து "ஏய்! காமிராக்கள் நம்மை பார்க்கின்றன, ஒழுக்கமாக நடந்துகொள்!" என்றார்.

இந்த காட்சி என் மனதில் திரும்ப திரும்ப வந்து என்னை புன்னகைக்க வைத்து ஏன் உடலெங்கும் பரவுகிறது.

பதட்டம் வேண்டாம். இந்த இரண்டு பெரிய மனிதர்களுக்கு பின்னால் உள்ள இரகசியம் மகிழ்ச்சியும் குறும்புமா? முதலில் அவர்கள் 'பெரிய மனிதர்கள்' என்பதற்கு ஏற்ப மனதார சிரிக்கிறார்கள். பேராயர் தன்னை ஒரு பாதிரியார்களின் தலைவர் என்று ஒரு போதும் சொல்லவில்லை, தலாய்லாமாவும் தன்னை ஒரு எளிய லாமா என்றே நினைக்கிறார். என்னைப் பற்றி நான் ஒரு 'மூத்த எழுத்தாளர்' என்று நினைக்கும்போது, எனக்கு வெட்கமாக உள்ளது! ஹோ! நான் ஒரு எளிய எழுத்தாளனாக இருக்கும்போது சுதந்திரமாகவும் கவலையில்லாமலும் இருக்கிறேன்! நம்முடன் வாழும் புகழ்பெற்றவர்களின் அணுகுமுறையையும் குணாதிசயங்களையும் கவனித்து, உள்வாங்கி, அதை பின்பற்றுவது மிகவும் முக்கியம்.

உண்மையில் பதட்டம் நம்மை கீழே இழுக்கிறது, ஏனென்றால் அது நமது இயற்கையான சுதந்திர உணர்வின் மீது உள்ள சுமை. அப்படித்தான் நமது கவலையின் அளவு அதிகரிக்கிறது. நாம் 'அமைதியான பயத்துடன்' வாழ ஆரம்பிக்கிறோம். கவலையின் அறிகுறி பயத்துடன் கூடிய உடல்நிலை, ஒரு கூட்டுக்குள் தன்னை சுருக்கிகொள்வது அல்லது மாற்றாக அளவுக்கு அதிகமாக உணர்ச்சி வசப்படுவது.

அமைதியின்மையை அகற்றுவோம். கவலையினால் உண்டாகும் அமைதியின்மையையும் பதட்டத்தையும் மறையசெய்ய மெதுவான சீரான மூச்சு அவசியம், அதை நமது இயற்கையான அமைதியான துடிப்புடன் சீர்படுத்தவும். வசதியாக உட்கார்ந்து கொண்டு, கண்களை மூடியபடி உங்கள் மூக்கின் வழியாக நீண்ட மூச்சை உள்ளிழுக்கவும்; வாய் வழியாக நீண்ட மூச்சை வெளியிடவும். உங்கள் மனது நல்ல நோக்கத்திற்கான எண்ணங்களுடன் அமைதியாக இருக்கட்டும். மெதுவான, கவனத்துடன் கூடிய மூச்சின் மூலம் 10 நிமிடங்களில் உங்களின் இதயத்துடிப்பை நிமிடத்திற்கு 95 லிருந்து 80 ஆக குறைக்க உங்களால்முடியும். சில நாட்களில், உங்கள் தலையின் பின்புறம் சிறு மின்சாரம் பாய்வதுபோன்ற உணர்வை பெறுவீர்கள், இது நீங்கள் அமைதி நிலைக்கு வருகிறீர்கள் என்பதற்க்கான அறிகுறியாகும். பய உணர்வு, கோபத்தில் எரிந்துவிழுதல் இவற்றிலிருந்து அமைதியான, மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளும் பக்குவத்திற்கு உங்களின் மனது மாற்றி சரிசெய்துகொள்கிறது. இது உண்மையில் இனிமையான மகிழ்ச்சியானது.

எந்த நாளிலும் மன அழுத்தத்தை விட இனிமை மிகவும் விரும்பத்தக்கது, உண்மைதானே? மன அழுத்தம் பயத்தை அதிகரிக்கிறது, எனவே தவவுசெய்து அதை விரும்பவேண்டாம். எதிர்மறை, நடிப்பு, விவாதம் இவற்றிலிருந்து விலகியிருக்கவும். அன்புடன் இருந்ககவும், உங்களிடமும் மற்றவரிடமும் கடினமாக இருக்கவேண்டாம். தவறு என்று உணர்ந்தால், அதை செய்யவேண்டாம். சரியென்று உணர்ந்தால், அதை செய்யவும். இங்கே ஒரு மனிதர் இருக்கிறார், அவர் ஒவ்வொருமுறை மளிகைசாமான் வாங்கும்போது, அதிகப்படியாக சில பைகளில் அரிசி மற்றும் பருப்பு வாங்கி, சாலையோர பிச்சைக்கரர்களுக்கு கொடுக்கிறார். அது அவருக்கு சரியென்று தோன்றுவதால் அவர் அதை செய்கிறார். அவரைப்பற்றி படிக்கும்போதே நீங்கள் இனிமையை உணர்கிறீர்கள், இல்லையா?

உங்கள் மனதிற்கு வாழ்கையை விவரிக்கவும். மனது கேட்டுக்



கொள்கிறது. அதனிடம் அக்கறை காட்டவும். அடிக்கடி கவனித்து சரியாக இருக்கிறதா என்று பார்க்கவும். அது கவலையுடன் இருந்தால், அதனிடம் அடுத்தவர் எதிர்ப்பார்ப்பு பற்றி விளக்கவும். பழமையான அமிஷ் பழமொழியில் கூறப்பட்டதைப் போல, “மற்றவர்களை அவர்கள் இடத்தில் நிறுத்தாமல், உன்னை அவர்கள் இடத்தில் நிறுத்திக்கொள்.” மனதை இயற்கைவசப்படுத்தவும், ஏனென்றால் அது உங்களின் உறவுகளை நிர்வகிக்கிறது. அது கொடூரமான வெற்றிடத்தை இனிமையான மகிழ்ச்சியாக ஏற்றுக்கொள்ளதக்கதாக மாற்றுகிறது.

இந்த ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மையில், தீர்ப்புகளை விட்டுவிட திரும்ப திரும்ப உங்கள் மனதிற்கு கூறுங்கள். இந்த கதை கற்பிப்பதுபோல, தீர்ப்புகளை தாமதமானால் பதட்டம் மறுக்கப்படுகிறது: ஒரு குழந்தை தன் கைகளில் இரண்டு ஆப்பிள் பழங்களை வைத்திருந்தாள். அவளுடைய அம்மா மெதவாக வந்து புன்னைகையுடன், செல்லம், அம்மாவுக்கு ஒரு ஆப்பிள் கொடேன் என்று கேட்டாள்.

அந்த சிறிய குழந்தை ஒருமுறை அம்மாவை பார்த்தாள், பிறகு ஆப்பிள்களை பார்த்தாள், பிறகு வேகமாக ஒரு ஆப்பிளை கடித்தாள், அதே வேகத்தில் இரண்டாவது ஆப்பிளையும் கடித்தாள்...

அம்மாவின் புன்னகை மறைந்து போனது. அவள் மனமுடைந்து போகாமல் இருக்க மிகவும் முயற்சி செய்தாள். அந்த பெண் ஒரு கடித்த ஆப்பிளை அம்மாவிடம் நீட்டி, “அம்மா இதை சாப்பிடு. இந்த ஆப்பிள் தான் இனிப்பா இருக்குசு என்றாள்.

அந்த ஒரு தருணம், தீர்ப்பை கைவிட்டதால், எல்லையற்ற அமைதி, ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மை மற்றும் ஆச்சரியம் கிடைத்தது. மிக கடுமையான நம்பிக்கையின்மையினாலும் கவலை வருகிறது. தங்கள் கழுத்தில் எப்பொழுதும் ஒரு கத்தி இருப்பதாக நினைபவர்கள் கொடுமைப்படுகிறார்கள். தங்கள் உதட்டில் எப்பொழுதும் ஒரு புல்லாங்குழல் இருப்பதாக நினைபவர்கள் மகிழ்சியாக இருக்கிறார்கள். அவர்கள் கடந்துவந்த மக்கள் அல்லது சூழ்நிலையை பார்த்து, அனைவரும் ஒருமுறை அல்ல பலமுறை மகிழ்ச்சியுடன் வியந்திருக்கக்கூடும். இப்பொழுது நாம் செய்யவேண்டியது, நமது அனுபவத்திற்கு உண்மையாக இருத்தல்.

ஏமாற்றங்களுக்கு இடையே கோபம் உள்ளே நுழையக்கூடாது, நல்ல தருணம் வரும்போது நாமும் நமது வாழ்வில் நம்பிக்கையானவர்களை தொடர்ந்து பாராட்டவேண்டும். இந்த வழியில்தான் நாம் நமது மனதையும் இதயத்தையும் நம்பிக்கைக்கு திறந்து விடமுடியும்.



கோபம் என்பது நம்முள்ளே இருக்கும் நான்கு சூழல்களின் கலவை, அது நினைக்கும் வழியில் நம்மை சிந்திக்கவைக்கிறது, அது செயல்படும் முறையில் நம்மை செயல்பட செய்கிறது. தனக்குத்தானே வேலி அதைத்துக்கொள்வது, கோபம், பொறாமை, பயம் ஆகியவை அந்த நான்கு சூழல்கள் ஆகும். இந்த சூழலை உடைத்தெறிய, நாம் சிந்திக்க புதிய வழிமுறைகளை தேடுவோம், “புதியதாக கற்க எப்பொழுதும் ஏதாவது ஒன்று உள்ளது” என்று கூறிக்கொண்டு மற்றவர் கருத்துக்கு நமது மனதை திறந்துவைப்போம். வாழ்க்கை ஓட்டத்தை எதிர்ப்பதனால் கோபம் வருகிறது. மற்றவருடன் கூட்டுறவாக இருத்தல் மற்றும் அதிகப்படியான சூழலுடன் ஒத்துபோவதன்மூலம் இதை சமாளிக்கலாம். சுயக்கட்டுப்பாடு குறைவால் பொறாமை ஏற்படுகிறது. வாழ்வில், சில சூழலில் சக்தியில்லை என்று உணர்வில் பயம் உருவாகிறது. இங்கே பொறுப்புகளை கையாளுவதின் மூலம் நாம் சூழ்நிலையை ஆளுமைபடுத்தவேண்டும் - நிபுணர்களிடம் கருத்து கேட்பது, பிரச்சனைகளை எளிதாக தீர்க்க புதுமையான வழிகளை உருவாக்குதல் - உணர்ச்சியின் சக்தியை மீட்டெடுத்தல்.

இறுதியாக, ஒவ்வொரு நாளையும் கவலையில்லாத நாளாக மாற்றி அதை அறிவிக்கவும். உங்கள் ஒவ்வொரு அடியும் அமைதியையும் நிலைத்தன்மையையும் அளிக்கும் என்று உணர்ந்து பூங்காவில் நடக்கவும். உங்களது தேநீரை சுதந்திரமான சூழலில் மகிழ்ச்சியுடன், ஒவ்வொரு சொட்டையும் ரசித்து, அது எளிதில் கிடைக்கும் அதிசயத்தை வியந்து பருகுங்கள். எல்லாவற்றிக்கும் மேலாக வாழ்க்கையை மிகவும் எளிதாக எடுத்துக்கொளுங்கள். தலாய்லாமா கூட வாழ்க்கையை மிகவும் எளிதாக எடுத்துக்கொள்கிறார், அதனால் அவர் புனிதமானவராக இருக்கிறார்!■

Rotary India Literacy Mission

# Literacy Focus

டெல்லி, பிரவாசி பாரதீய கேந்திராவில் நடைபெற்ற சர்வதேச எழுத்தறிவு தினக் கொண்டாட்டத்தின்போது, மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் பள்ளிக்கல்வி மற்றும் எழுத்தறிவுத் துறையின் தேசிய எழுத்தறிவு இயக்க ஆணையத்தால் (NLMA) ஏற்பாடு செய்த ஒரு குழு விவாதத்துக்கு PRID மற்றும் ரோட்டரி இந்தியா லிட்டரசி மிஷன் (RILM) தலைவர் சேகர் மேத்தா அவர்கள் தலைமை வகித்தார். இந் நிகழ்ச்சியில் மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்; மத்திய மனிதவள மேம்பாட்டு (பள்ளிக்கல்வி மற்றும் எழுத்தறிவு) அமைச்சர் உபேந்திர குஷ்வாஹா; செயலாளர் (பள்ளிக்கல்வி மற்றும் எழுத்தறிவுத் துறை) ரீனா ராய்; இணைச் செயலாளர், (AE) மற்றும் இயக்குனர் ஜெனரல் NLMA சச்சின் சின்ஹா மற்றும் தில்லி UNESCO அலுவலகத்தின் தெற்காசிய தகவல் தொடர்பு ஆலோசகர் அல் அமீன் யூசூஃப் ஆகியோரும் இதில் கலந்துகொண்டனர். நாடு முழுவதுமிருந்து சுமார் 600 பங்கேற்பாளர்கள் இதில் கலந்துகொண்டனர்.

மேத்தா தனது உரையின்போது, இந்தியாவில் எழுத்தறிவற்றோர் சதவீதம் அதிகமாக இருப்பது குறித்து வருத்தம் தெரிவித்தார். ரோட்டரி எழுத்தறிவின்மையை ஒழிப்பதற்கான முன்னோடித் திட்டத்தைத் தொடங்கி யுள்ளன என்றார். எழுத்தறிவுத் திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப் படுத்துவதற்கு, அது, பரந்த அளவு விளம்பரத்துடனும், பொதுமக்களின் கவனத்தை ஈர்க்கும் வகையிலும், பிரதம மந்திரியால் தொடங்கப்பட வேண்டும் என்றும் வயதுவந்தோர் கல்வியை எதிர்கொள்வதற்கு மாணவ-தன்னார்வலர்களுக்கு இலவசப் பாடநூல்களை விநியோகிப் பதற்கு போதுமான நிதி ஒதுக்கப்பட வேண்டும் என்றும் ஆலோசனை தெரிவித்தார்.




*RILM தலைவர் சேகர் மேத்தா தில்லியில் நடைப்பெற்ற சர்வதேச எழுத்தறிவு தின விழாவில்.*

வயதுவந்தோர் எழுத்தறிவுத் திட்டத்தின் பல்வேறு பிரச்சனைகள் பற்றி குழுவில் விவாதிக்கப்பட்டது.

## Nation Builder Awards

பல ரோட்டரி மற்றும் இன்னர் வீல் சங்கங்கள், திறமையான அரசுப் பள்ளி ஆசிரியர்களை உற்சாகத்துடன் கண்டறிந்து அவர்களுக்கு Nation Builder Awards (NBA) வழங்கி அங்கீகரித்தன.

அக்டோபர் 11 நிலவரப்படி, நாடு முழுவதும் மதிப்பிடப்பட்ட 31,708 ஆசிரியர்களில், 6,709 ஆசிரியர்களுக்கு விருது வழங்கப் பட்டுள்ளது. இந்த விருது இந்த நாட்டை உருவாக்குவதில் ஆசிரியர் களின் பங்களிப்புக்கு அங்கீகாரம் வழங்குகிறது மற்றும் மதிப்பீட்டுச் செயல்முறை RILM-க்கு அதன் ஆசிரியர் பயிற்சித் துறைக்குத் தேவையான மதிப்புமிக்க தகவல் களை வழங்குகிறது. NBA மாதிரி, கர்நாடக அரசு கல்வித் துறை இத்திட்டத்தில் ஆர்வம் காட்டியுள்ளது.

## கோலாப்பூர் சங்கம் 10,000 ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்கிறது

10,000 ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிப்பதற்காக D 3170, கோலாப்பூர் சன்ரைஸ் ரோட்டரி சங்கம், PDG ஆனந்த் குல்கர்னி; கோலாப்பூர் ஜில்லா பரிஷத் CEO, குணால் கேம்னார்; DLCC பிரசன்ன தேசிங்கர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் தனஞ்செய் மஹாதிக் ஆகியோர் முன்னிலையில் கோலாப்பூர் ஜில்லா பரிஷத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டது.

இந்தப் பயிற்சி ஆங்கிலப் பேச்சுப் பயிற்சியிலும், கற்பித்தலில் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதிலும் ஆசிரியர்களுக்கு உள்ள திறன்களை மேம்படுத்துவதற்கும் அதிகரிப்பதற்கும் District Institute of Educational Continuous Professional Development (DIECPD) உதவியுடன் நடத்தப்பட்டது. இப்போதுள்ள வரை, 32,000 ஆசிரியர்களுக்கு RILM பயிற்சி அளித்துள்ளது மற்றும் இந்தத் திட்டத்தின் கீழ் 14,000 ஆசிரியர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப் பட்டுள்ளது.■

# சக்கரங்கள் மீது ட்ரான்ஸ்ஃபார்மர்

ரோட்டரி செய்தி குழு

15-20 கி.மீ பரப்பளவில் அவசர கால சூழ்நிலைகளைக் கையாள டிராலியில் பொருத்தப்பட்ட 300 KV மொபைல் EB ட்ரான்ஸ்ஃபார்மரை RC பாகா புராணா, D 3090 நிறுவியபோது, ரொட்டேரியன்களின் புதுமை மற்றும் தொழில்நுட்ப நிபுணத்துவம் வெளிப்பட்டது. பஞ்சாப் மாநிலத்தின் மோகா மாவட்டத்தை சுற்றியுள்ள 25-30 கிராமங்களுக்கு இந்த சேவை போய்ச்சேரும்.

நகரில் டிராலி பொருத்தப்பட்ட போது, பவர் க்ரிட் கார்ப்பரேஷனில் இருந்து தொழில்நுட்ப உள்ளீடுகளுடன் வந்திருந்த 28-பேர் கொண்ட ரோட்டரி குழு, எங்கும் எடுத்துச் செல்லக்கூடிய இந்த டிரான்ஸ்பார்மரை வடிவமைத்தனர். “இது நவம்பர் 4ல் இருந்து பயன்பாட்டுக்கு விடப்பட்டு, ஐந்து பிரச்சனைகளுக்கு தீர்வு வழங்கியுள்ளது” என கிளப் தலைவர் விமல் கார்க் கூறுகிறார். ரூ.70,000 விலையில் இந்த டிராலி வாங்கப்பட்டது. அதே நேரத்தில் எங்கும் எடுத்துச் செல்லக்கூடிய EB சாதனம் வாங்க ரொட்டேரியன்களுக்கு ரூ.2.7 லட்சம் செலவானது.



*நடமாடும் டிரான்ஸ்பார்மர் உடன் ரோட்டேரியன்கள்...*

“பழுதான ட்ரான்ஸ்ஃபார்மர் காரணமாக மின்சார வெட்டுக்கள் மற்றும் மின்னழுத்த ஏற்ற இறக்கங்கள் வழக்கமாக இருப்பதால், கிராமத்தில் வசிப்பவர்களுக்கு இது வரப்பிரசாத மாகும். மாநகராட்சி லைன்மேனால் சிக்கல் சரி செய்யப்படும் வரை மின்வெட்டு ஏற்பட்ட தளத்தில் ட்ரான்ஸ்ஃபார்மர் டிராலி நிறுத்தி வைக்கப்படும்’’ என்று கார்க் விளக்கினார். மின்சாரம் தடைபட்ட இடத்திற்கு நேரத்திற்கு சென்று, பழுதான ட்ரான்ஸ்ஃபார்மர் சரி செய்யப்படும் வரை தடையின்றி மின்சாரம் வழங்குவதால், இந்த வாகனம் பவர் கிரிட் அதிகாரிகளுக்கு ஆதரவாக செயல்பட்டு வருகிறது.■

# ஸ்பேம் எச்சரிக்கை

RI தலைவர் பாரி ரஸின், RIPE மார்க் மல்லோனி, பொதுச் செயலாளர் ஜான் ஹெக்கோ மற்றும் பிற ரோட்டரி தலைவர்களையும் ஆள் மாறாட்டம் செய்யும் பல தொடர்பாடல் மற்றும் சமூக ஊடகக் கணக்குகளை ஸ்கேமர்கள் உருவாக்கியுள்ளனர் என்று ரோட்டரி சமீபத்தில் அறிந்தது. தொடர்பாடல் கணக்குகள் மின்னஞ்சல், WhatsApp மற்றும் Viber ஆகியவற்றை உள்ளடக்கியது/உட்படுத்தியுள்ளது. சமூக ஊடகக் கணக்குகள் LinkedIn, ட்விட்டர் மற்றும் ஃபேஸ்புக்கில் உள்ளன.

பணம் மற்றும் தனிப்பட்ட தக வல்களைப் பெற அவர்கள் ஃபிஷிங் மற்றும் ஸ்பூஃபிங் முயற்சிகளை மேற் கொள்கின்றனர். குற்றவாளிகள், சாட்டுரைக்கப்பட்ட ரோட்டரி நோக்கங்களுக்கு ஆதரவளிக்க நிதியனுப்ப ரோட்டரி உறுப்பினர்களை நம்பவைக்க முயற்சி செய்யலாம்.

பணம் வழங்கும், கோரும் தனிப் பட்ட தகவல்களை கேட்கும் எந்த சந்தேகத்திற்கிடமான செய்தியையும் புறக்கணிக்கவும். இவ்வாறான இணைப்புகளைத் திறக்க லிங்க்குகளை பின்தொடர்வதைத் தவிர்க்கவும்.

அனுப்புநரை சரிபார்க்க, மின்னஞ்சல் முகவரி மற்றும் கையொப்பத் தொகுதி ஆகியவற்றின் விபரங்களில் கவனம் செலுத்துங்கள். சந்தேகத்திற்கிடமான செய்திகள், வரப்பெற்றால் தயவுசெய்து fraudreportrotary.orgக்கு அனுப்பிய பிறகு நீக்கவும். © Rotary.org

# PT பிரபாகர்

**WinS தலைவர்**



PRID PT பிரபாகர் அவர்களை TRF அறங்காவலர் தலைவர் ரான் பர்ட்டன் WinS திட்டத்தின் புதிய தலைவராக நியமித்து உள்ளார். இந்த நியமனம் ஜூன் 2020 வரை உள்ளது. பிரபாகர் WinS கமிட்டியின் முதல் தலைவர் RIPN சுஷில் குப்தாவை தொடர்கிறார்.■

# சிறுகதை, நாவல் எந்த அளவு இருக்கவேண்டும்?

TCA ஸ்ரீனிவாசராகவன்

மூன்று ஆண்டுகளுக்கு முன் நண்பர்களுடன் பேசிக் கொண்டிருந்தபோது பத்திரிகைகளில் எழுதுவோரைப் பற்றி, குறிப்பாக பத்திரிகையாளர்களின் நடத்தை, நடவடிக்கை பற்றிக் குறிப்பிட்டேன். அதைக் கேட்டு எரிச்சலடைந்த ஒரு தோழி, உன்னால் ஒரு நாவலையோ சிறுகதையையோ எழுத முடியுமா? என்று சவால் விட்டாள். அவள் பேசிய விதம் எனக்கு ரோஷத்தை ஏற்படுத் தியது. உடனே நான் ஒரு நாவலையும் சில சிறுகதைகளையும் எழுத முடிவு செய்தேன்.

அந்த நாவல் பிரசுரம் ஆனது. ஆனால், நான் எழுதிய 20 சிறு கதைகளில் 4 கதைகள் மட்டுமே இதுவரை வெளியாயின. ஆனால், மற்றதை வெளியிடத்தான் ஆள் இல்லை. இந்தியாவில் செய்தித் தாள்களும் பத்திரிகைகளும் சிறு கதைகளை, அதிலும் ஆங்கிலத்தில் வெளியிடுவது இல்லாமல் போய் விட்டது. ஆனால், இந்த முயற்சியில் இறங்கியபோது ஒரு விஷயத்தை அறிந்துகொண்டேன். நாளொன்றுக்கு 1000 வார்த்தைகள் எழுதினால் போதும், நாவல் எழுதுவது அவ்வளவு கடினமல்ல. உண்மையில் சொல்லப் போனால், நாவலில் சம்பவங்களுடன் வருணனைகள்தான் ஏராளமாக இருக்கும்.

எனது நாவலைப் புத்தகமாக வெளியிடுவதற்கு இசைந்த பதிப்பாளர் இரண்டு யோசனைகளைக் கூறினார். ஒன்று 20 ஆயிரம் வார்த்தைகளைப் புதிதாகச் சேர்க்கும்படி முதலில் கேட்டுக் கொண்டார். கொஞ்ச நாள் கழித்து, காலத்துக்கு ஏற்ப கதையை அமைக்கும்படி சொன்னார். அந்தப் புத்தகம் 1970ம் ஆண்டுகளில் தில்லியைப் பற்றியது.

ஆனால், நான் சிறுகதைகளை எழுதி அனுப்பிய பத்திரிகையின் ஆசிரியர் இளைஞர். எனக்கு நிறைய அறிவுரை சொன்னார். நான் அதில் பெரும்பாலானவற்றைக் கண்டுகொள்ளவில்லை.

அப்புறம்தான் அதில் என்னென்ன கஷ்டங்கள் இருக்கின்றன என்று தெரிய வந்தது. கதையின் நீளத்தை முடிவு செய்வதுதான் மிகவும் சிரமம். 800 பக்கத்தில் ஒரு நாவலையோ தலா 400 பக்கம் உள்ள இரண்டு நாவலையோ அல்லது தலா 250 பக்கம் கொண்ட மூன்று நாவல்களையோ எழுதிவிடலாம். அதே மாதிரி, 10 ஆயிரம் வார்த்தைகள் கொண்ட சிறு கதையோ 5000 வார்த்தைகளிலோ 1000 வார்த்தைகளிலோ சிறுகதையை எழுதி முடித்துவிடலாம். ஏன், அதை விடவும் குட்டிக் கதையையும் எழுதிவிடலாம்.

நான் 250 பக்கம் மட்டும் கொண்ட நாவலை எழுத முடிவெடுத்தேன். காரணம், 300-வது பக்கம் எழுதும்போது, முதல் 250 பக்கங்களில் என்ன எழுதினேன் என்பதை நினைவில் வைத்துக் கொண்டாக வேண்டுமே!

அத்துடன் 1000 வார்த்தைகள் கொண்ட சிறுகதைகளை எழுதுவது என முடிவெடுத்தேன். அது மாதிரி பிரபல ஆங்கில எழுத்தாளர் ஜான் ஓ' ஹாரா நூற்றுக்கணக்கில் எழுதியிருக்கிறார். அவை Saturday Evening Post இதழில் வெளியாகியுள்ளன. நான் அவரையே பின்பற்ற விரும்பினேன். இன்னும் சொல்லப் போனால், அவரது எழுத்தின் தரத்தைக் கடைப்பிடிக்கிறேன்.

நூலை வெளியிடுவது தொடர்பாக பதிப்பாளருடன் உடன்பாட்டை எட்டும்போது அவர்கள் எல்லாச் செலவுகளையும் கருத்தில் எடுத்துக் கொள்வார்கள். உரிமைகள் தொடங்கி சினிமாவாக்குவது, தொலைக்காட்சி, வானொலி ஆகியவற்றுக்கான வடிவத்தைப் பெறுவது ஆகியவையெல்லாம் ஏன், ப்ரெய்லி வடிவம் உட்பட எல்லாம் கவனத்தில் கொள்ளப்படும். நாற்பது ஆண்டுகளுக்கு முன் ஒரு பதிப்பகத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தேன். அப்போது அப்படித்தான் எழுத்தாளர்களை நடத்தினேன். ராயல்டியை எழுத்தாளர் விட்டுக் கொடுக்கும்படி செய்தால் பதிப்பாளருக்கு மகிழ்ச்சிதான். அது பெரிய தொகையாக இருக்காது. இருந்தாலும் எழுத்தாளரை ஆட்டி வைக்கலாமே! இப்போது நான் எழுத்தாளர் நிலையில் இருக்கிறேன்.

விஷயத்துக்கு வருகிறேன். நாவல், சிறுகதை எந்த அளவுக்கு நீளமாக இருக்க வேண்டும்? அதை யார் முடிவு செய்வது? பதிப்பாளரா, நூலாசிரியரா, வாசகரா? தடிமனான நாவல் படிப்பது சிரமம். தலையணை மாதிரி இருந்தால் யார் படிப்பார்கள்? படித்து முடிக்கவே முடியாது. நீளமா, சுருக்கமா என்று பார்ப்பதெல்லாம் கதைக்கு உதவாது. படிக்கிற வாசகனுக்குத் தெரியும் சிறுகதை நீளமா, சின்னதா என்று. பல எழுத்தா ளர்கள் பல சிறுகதைகளைத் தொகுத்து நாவலாக எழுதிவிடுகிறார்கள்.

சிறுகதையோ நாவலோ எழுதுபவர்களுக்கு ஓர் அறிவுரை. அதை நீங்கள் கடைப்பிடித்தேயாக வேண்டும். முதலில் பதிப்பாளர்கள், வெளியிடுவோரைப் பற்றி மறந்து விடவேண்டும். இரண்டாவது, உங்களது நாவலை 20-20 கிரிக்கெட் மாட்ச் போல சுருக்கமாக அமைத்துக் கொள்ளவும். சரியாக வடிவமைத்துக் கொள்ளவேண்டும். 50 பக்கங்களில் நாவலைத் தொடங்கி, சுகமாகப் பயணித்து, முடியுங்கள். மூன்றாவதாக சிறுகதையை எழுதினால், அதிர்ச்சி தரும் வகையில் முடியுங்கள். கஷ்டம் தான், முயன்றுதான் பாருங்களேன். ■

ROTARY SERVICE PROJECTS

# VIDEO CONTEST

2018-19



Calling all **Rotary clubs in Zones 4,5 & 6A** to participate in this contest and win exciting cash prizes.

Club Presidents/Secretaries can submit one video (not more than **three minutes**) of the club's service projects implemented in the year, under The **Rotary Foundation's Six Areas of Focus:**

- **Peace and conflict prevention/ resolution**
- **Disease prevention and treatment**
- **Water and sanitation**
- **Maternal and child health**
- **Basic education and literacy**
- **Economic and community development**

**The contest will be judged by an esteemed panel convened by RID C Basker.**

The **top 3 entries** (from each of the **RI Zones of 4, 5 & 6A** India) will win the following cash awards:

**1st Prize: INR 100,000**

**2nd Prize: INR 50,000**

**3rd Prize: INR 25,000**

Rotary

The last date of submission of videos is **May 31, 2019.**

Video entries may be sent to **rotaryprojectsvideo@gmail.com** or mailed to **Rotary News Trust, Dugar Towers, 3rd Floor, 34, Marshalls Road, Egmore, Chennai - 600 008, Tamil Nadu.**

Alternatively, clubs can upload the video on **YouTube** and share the URL link to the above mail id.

**Please include the following too:**
Club Name and District, Contact Person and Email Id/Phone number, Name of the Video/Project and the URL Link.

Only Hi-res videos will be accepted. Videos can be in the format: **MOV, MP4 (MPEG4), AVI, WMV, FLV, MKV, VOB.**

Rotary
District 3012

BE THE INSPIRATION
R.I. THEME 2018-19

ROTARY DISTRICT 3012
# "DEEPAWALI CELEBRATIONS"

# Deepanjali-2018

Sunday, 28th October 2018



**Subhash Jain AKS**
District Governor 2018-19



**Venue : N.R. Grand, NH-24, Wave City, Ghaziabad (U.P.)**

ADVT